# ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்




சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்



# ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்

D.AUGUSTINE JEBAKUMAR



ஆசிரியர் : **Bro.D.Augustine Jebakumar**
*(Director of Missions & General Secretary)*
**Gospel Echoing Missionary Society**
Dehri-on-sone,
Bihar - 821 307.
India.
Phone : 06184 - 252133

வெளியீடு : **GEMS Publications,**
Ponnagaram,
Tuticorin - 628 002.
Tamilnadu.
Ph: 0461-2362582

கிடைக்குமிடம் : **Gospel Echoing Missionary Society,**
Dehri-on-Sone,
Bihar - 821 307.
India.
Ph: 06184-252133

**GEMS,**
16-A, Chinna Koil Street,
Palayamkottai,
Tirunelveli - 627 002.
Ph: 0462-2581131

அச்சிட்டோர் : **Swarnapriya Printers,**
16/A, Tiruchendhur Road,
Tirunelveli - 627 002.
Ph:0462-2577144

***All Rights Reserved / Second Edition May - 2003***

# அறிமுகவுரை

'ஆயத்தமாக்கப்படும் தலைவன்' என்ற நூலைத் தொடர்ந்து 'ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்' என்ற இப்புத்தகத்தை வெளியிட கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

முந்தைய புத்தகத்தை படித்தவர்கள் அனைவரும் மிகத்தெளிவாக எழுதப்பட்டுள்ள பயனுள்ள நூல் என்று பாராட்டியுள்ளனர். தொடர்ந்து வெளியிடப்படும் இரண்டாம் சாமுவேலின் இப்புத்தகம் அதே அளவில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் என நம்புகிறேன்.

இளம் தலைவர்கள் உருவாகுகின்றனர். ஆயினும் ஆயத்தமாக்கப்படும் போது உடைந்து சிதறிப் போகிறவர்களின் எண்ணிக்கை ஆயத்தமாக்கப்பட்டு உபயோகத்தில் இருப்பவர்களைப் பார்க்கிலும் அதிகம் என்பதே வெளிப்படை. ஆயத்தமாக்கப்படும் போது அவர்கள் செல்ல வேண்டிய பாதையில் ஏற்படும் சிக்கல்கள், சிரமங்கள், நெருக்கங்கள், போராட்டங்களில் நிலைத்து நிற்பவர் மிகச் சிலரே.

ஆயினும் அப்படி சிதறிப் போகாமல் அனைவரும் இந்தியாவின் ஊழியத்திற்கு தேவை என்ற பாரத்தோடு கொடுக்கப்பட்ட தியானப்பகுதிகள்தான் புத்தகமாக வெளியிடப்படுகிறது. இதனை உபயோகத்தில் கொண்டு வருவதற்கு உதவிய கரங்கள் அனைத்திற்கும் அன்பரின் ஆசி பெருகுவதாக.

இது ஒரு விளக்க நூல் அன்று. தியான நூல். மீண்டும் மீண்டும், கொஞ்சம் கொஞ்சமாக, தியானித்து உட்கொள்ள வேண்டியவை என்பதனை மறவாதீர்கள். மேலும் கற்றுக் கொள்ளும் உண்மைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி வந்தால் மட்டுமே பயன்தரும். இல்லையேல் இன்னும் ஒரு புத்தகத்தைப் படித்தோம் என்ற நிலைதான் ஏற்படும்.

கற்றவைகளை கடைபிடிக்க அர்ப்பணிப்பின் மனப்பாங்கும் ஆவியானவரின் அபிஷேகமும் அவசியம் தேவை. அவரின் பலத்தில்தான் நடைமுறை பயிற்சியினை மேற்கொள்ள முடியும். அநேகருக்கு அபிஷேகம் உண்டு, ஆனால் அர்ப்பணம் இல்லை, இதுவும் ஆபத்தே. விட வேண்டியவைகளை முற்றாக விட்டு விடுவதும், விட்டுக்கொடுத்து, அணைத்துக்கொள்ள வேண்டியவைகளை அரவணைத்து, பற்றிக் கொள்ள வேண்டியவைகளை உறுதியாக பற்றிக் கொள்வதும் சீடர்களுக்கு அழகு சேர்க்கும்.

*தலைவர்களைத் தேடுகிறது உலகம்*
*தமக்களித்தவர்களைத் தேடுகிறார் தேவன்*
*திறமைகளைத் தேடுகிறது உலகம்*
*திறந்த மனதுடையவர்களைத் தேடுகிறார் தேவன்*
*தீவிரம் காட்டுகிறவர்களைத் தேடுகிறது உலகம்*
*தீமைதனைத் தள்ளிவிட்டோரைத் தேடுகிறார் தேவன்*
*அடக்குபவர்களைத் தேடுகிறது உலகம்*
*அடங்கி நடப்போரைத் தேடுகிறார் தேவன்*

**தேவன் தேடும் நபர்களாக மாற இப்புத்தகம் உதவட்டும்**

*அன்பரின் அருட்பணியில்,*

**D. அகஸ்டின் ஜெபக்குமார்.**

# அணிந்துரை

அன்று மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம் என்றழைக்கப்பட்ட பீஹாரை... மிஷனரிகளின் பிருந்தாவனமாக மாற்ற தேவன் எடுத்துப் பயன்படுத்திய ஊழியர்தான், இன்று அனைவராலும் அன்புடன் 'அண்ணன்' என்று அழைக்கப்படும் சகோ.அகஸ்டின் ஜெபக்குமார் என்பது அகிலம் அறிந்த உண்மை. அது நம்மனைவருக்கும் கிடைத்த மாபெரும் நன்மை. அதனால் நமது ஸ்தோத்திரமும், துதியும் தேவனுக்கே உரியதாகுக!

கடந்த பத்தாண்டுகளாக ஜெம்ஸ் ஊழியத்தின் அருமை பெருமைகளை; அதன் இயக்குநர் அவர்களின் ஊழியப் பாங்கினை, உடன் ஊழியர்களை அரவணைத்துச் செல்லும் சிறப்பினை சொல்லக்கேட்டவன் மட்டுமன்று, நேரில் பார்த்தவன். குடும்பத்துடன் பீஹார் சென்று பணித்தளங்களின் செயல்பாடுகளைக் கண்டு மகிழ்ந்தவன் என்ற முறையில் சாட்சி சொல்லும் தகுதியினையும் தேவன் தந்துள்ளார்.

அத்தகைய சீரும் சிறப்புமுடையவர் ஆவியானவரின் அருளாலும்; தனது அனுபவ முதிர்வாலும்; அனைவருக்கும் பயன்பட வேண்டுமென்ற ஆர்வத்தாலும் எழுத்து வடிவில் நம் இதயங்களில் பதிய வைத்திட படைத்த இரண்டாவது நூல்தான் "ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்" (2 சாமுவேல்) இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

முதல் நூலைப் படித்து மகிழ்ந்த எனக்கு இரண்டாவது நூலுக்கு அணிந்துரை எழுத தேவன் அருள் புரிந்துள்ளார்.

இமய மலையின் வனப்பை வர்ணிக்க எறும்புக்கென்ன தகுதி? ஆனாலும் மயங்கிய எறும்பு மனந்திறந்து பேசுகிறது.

ஊழியம் எப்படி இருக்க வேண்டும்? ஊழியர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? தலைமை தாங்குவோரின் தகைமை எப்படி விளங்கும்? குடும்பத்தாரின் குறை நிறை என்ன? அனைத்திற்கும் "ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்" ஓர் அருமருந்தாகப் பயன்படும்.

நமக்குள் இருந்து, நம்மை இயக்கும் எத்தனையோ சுபாவங்களை (ஜென்மசுபாவம், ஆவிக்குரிய சுபாவம்) நூலில் வரும் பாத்திரங்கள் மூலம் நமக்கு விளக்கிக் காட்டுகிறார். ஜென்ம சுபாவத்திற்கு சவுலையும் ஆவிக்குரிய சுபாவத்திற்கு தாவீதையும்

பார்க்கிறோம். நமக்குள் ஒரு சவுல் இருப்பதையும் பல நேரங்களில் அவன் நம்மை இயக்குவதையும் நூல் உணர்த்துகிறது. சவுல் தேயவும் தாவீது தழைக்கவும் ஆசிரியர் வழிகாட்டுகிறார்.

ஒவ்வொரு தலைப்பின் முடிவிலும் ஏறெடுக்கப்படும் ஜெபம் படித்த பகுதியின் சுருக்கத்தை நினைவுபடுத்துவதுடன் தேவனோடுள்ள உறவையும் வலுப்படுத்துகிறது.

கோதுமை மணி, நெற்கதிர்; நெருப்பில் இறுகும் களிமண்; உருகும் மெழுகு, பிசின் தரும் நறுமணம் போன்ற எடுத்துக்காட்டுகள் ஆசிரியரின் இலக்கிய அறிவு வளத்துக்கு எடுத்துக்காட்டுகள்.

சுருங்கச் சொன்னால் ஆவிக்குரிய மக்கள் அனைவருக்கும் இது ஓர் ஆலோசனைப் பெட்டகம். ஊழியத்தில் ஈடுபடுவோருக்கு உறுதுணையான ஊன்று கோல்; மொத்தத்தில் ஒரு கலங்கரை விளக்கம்;

ஆசிரியர் அவர்கள் இது போன்ற குழந்தைகளை ஆண்டுக்கு ஒன்றாவது பெற்றுத்தர ஆண்டவர் அருள் புரிவாராக!

இந்தக் குழந்தை, அனைவர் இல்லத்திலும் தவழ; அந்த இல்லங்கள் மகிழ வாழ்த்துகிறேன்.

*அன்புடன்*

**மு. செல்லம்** எம்.ஏ., பி.எட்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்,

உதவி ஆசிரியர் "பள்ளத்தாக்கின் லீலி"

**நெய்யூர்**

**30.03.2002**

# அணிந்துரை

போதகர் அகஸ்டின் ஜெபக்குமார் எழுதிய **'ஆயத்தமாக்கப்படும் தலைவன்'** என்ற புத்தகம் பகுதி I என்றால் **'ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்'** என்ற இந்நூல் பகுதி-II எனலாம். முதல் புத்தகம் I சாமுவேலையும், இரண்டாம் புத்தகம் II சாமுவேலையும் ஆதாரமாகக் கொண்டுள்ளன.

II சாமுவேலில் உள்ள 24 அதிகாரங்கள் இங்கு 31 தலைப்புகளில் வாழ்க்கைப் பாடங்களாக மாற்றம் பெற்றுள்ளன. உதாரணமாக ஒரு தலைப்பு 'அக்கறையற்ற தந்தை - அலங்கோலமான பிள்ளைகள்' இவ்வாறு தாவீதின் தனிப்பட்ட பாவங்கள், குடும்பச் சீரழிவுகள் எப்படி நோய் போல் பரவுகிறது என்பதை எடுத்துக் காட்டிச் சுட்டப்படுகிறது. ஒவ்வொரு தலைப்பும் நம்முடைய மோட்ச பயணத்தின் எச்சரிக்கை மணியாக ஒலிக்கின்றன.

**'வசமாகும் கோட்டைகள்' 'அலட்சியப் போக்கு அழிவுப் போக்கு'** போன்ற துணைத் தலைப்புகள் பரம கானானுக்கு முன்னேறிச் செல்லும் படிக்கட்டுகளாக காணப்படுகின்றன.

**"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்"** இடையிடையே அழுத்தமான மையினால் காட்டப்பட்டுள்ள இப்படிப்பட்ட வரிகள் வழிகாட்டும் விளக்குகளாக உள்ளன.

"பிதாவே! பல வேளைகளில் நாங்கள் வாழ்வின் தீவிரத் தன்மையை உணராது போகிறோமே. அர்த்தமற்ற பேச்சுகளைப் பேசுகிறோம். அவை எங்களது எதிர்காலத்திற்கும், மக்களுக்கும் கண்ணியாகி விடுகிறதே. ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க உதவியருளும். ஆமென்!" இவ்வாறு ஒவ்வொரு தலைப்பின் இறுதியிலும் உள்ளஇத்தகைய ஜெபம், பிடிக்கவே முடியாது என்ற சீயோன் கோட்டையைப் பிடித்த வெற்றி வீரன் தாவீதைப் போல பாவ பிசாசின் கோட்டையை உடைத்து பரம எருசலேமான சீயோன் கோட்டையைப் பிடிக்கச் செல்லும் யுத்த வீரனின் துடிப்பைக் காட்டுகிறது.

'ஆயத்தமாக்கப்பட்ட தலைவன்' தேவனுடைய எச்சரிப்பின் சத்தத்திற்குச் செவி சாய்த்து மோட்சத்திற்குச் செல்லும் வழியை ஆயத்தம் செய்வான். பட்டை தீட்டிய வைரம் போல் ஒளி வீசுவான். நெருப்பிலே புடமிட்ட பொன்னைப் போல் ஒளிர்வான்.

இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் நரக வாசலை மூடி மோட்ச வாசலைத் திறக்கும் என்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை தேவன் தாமே அருள வாழ்த்துகிறேன்.

**A.வெல்லிங்டன்** எம்.ஏ., எம்.பில்., பி.எட்.
தமிழ்துறை,
போப் கல்லூரி, சாயர்புரம்.

தூத்துக்குடி
30.03.2002

# பொருளடக்கம்


1. உணர்வுக் கூர்மையை, வேரறுக்கும் வெற்றிகள் 11
2. வாலிபனே! வெளித் தோற்றமா? வாய் மொழியா? 15
3. விரோதியின் வீழ்ச்சியில், மகிழ்ச்சியடையாத மனதுள்ளவன் 19
4. அநுகூல சூழ்நிலை அல்ல, ஆண்டவரின் அனுமதியே அவனைத் தீர்மானிக்க வைக்கும் 22
5. பாரம்பரிய ஆவியினால் பாழாய்ப் போன அப்னேர் 25
6. மாமிச பெலத்தைச் சார்ந்து மதிகெட்டுப் போன மாமனிதன் 28
7. பெலத்தை காண்பித்த அப்னேரும், பெலவீனத்தை ஒத்துக் கொண்ட தாவீதும் 34
8. பழிக்குப் பழி மிருகத்தின் வழி 38
9. உதவுவதாக நினைத்து உடைத்துப் போட்டவர்கள் 41
10. நிரம்பி வழியும் அபிஷேகம் 47
11. நம்மீது மட்டும் முழு கண்டிப்பு நல்மாதிரியாக்கவே 53
12. நமது வாஞ்சையையோ, நமது வார்த்தைகளையோ தேவன் திருத்தியமைத்தால்.... 58
13. எனது எல்லைகளில் மட்டுமல்ல, எதிரியின் எல்லைகளிலும் வெற்றி 66
14. செத்த நாயைப் போன்ற நிலையிலுள்ளோருக்கு 'செய்தி' சேர வேண்டும் 70
15. சந்தேகம் சத்துரு விதை, தந்திடும் சித்ரவதை 75
16. உன்னதரின் உள்ளத்தில் உயர்ந்து நிற்கும், உத்தமன் உரியா 82
17. சிட்சிக்கிறார் சீர்ப்படுத்த, ஈடுகட்டும் ஈவுகளால் 88
18. அக்கறையற்ற தந்தை – அலங்கோலமான பிள்ளைகள் 96
19. கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், கண் மூடித்தனமாக அல்ல 101
20. உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யும் மாய்மாலம் 105
21. யார் தேவபுத்திரர்? 111
22. பிரச்சனையின் பள்ளதாக்கிலும், பரமனுக்குப் பிரியமாக... 116
23. தலைவனின் துக்க வேளையில் 3 வகை சுற்றத்தார் 120
24. பெருமையும் பகையும் இணைந்தால் பேரழிவே 124
25. தலைவன், பத்தாயிரம் பேருக்குச் சமமானவன் 128
26. ஆவிக்குரியவன் தவறினாலும், திருத்திக்கொள்பவன் 134
27. சபை இரண்டுபட்டால் சத்துருவுக்குக் கொண்டாட்டம் 141
28. சவுலின் பாவத்திற்கு, தாவீது காலத்தில் பஞ்சம் ஏன்? 144
29. மாறுபாடானவனுக்கு, கர்த்தர் மாறுபடுகிறவர்... 147
30. திறமைகள் வேறாயினும், தரிசனம் ஒன்றே 151
31. ஏற்ற செயலா? என்பதை விட, ஏவியது யார்? என்பதே கேள்வி 155

# உணர்வுக் கூர்மையை, வேரறுக்கும் "வெற்றிகள்"

I சாமுவேலின் புத்தகம், முதல் அரசனைப் பற்றிக் கூறினாலும், அவன் முழுமையான தலைவனாக இருக்கத் தவறிவிட்டான், என்றும் காண்பிக்கிறது. மேலும், இப்புத்தகம். இஸ்ரவேலின் தலைமை, லேவியரிடமிருந்து சாமுவேலுக்கு, சாமுவேலிடமிருந்து சவுலுக்கு, சவுலிடமிருந்து தாவீதுக்கு எனக் கை மாறும் காட்சிகளைக் கொண்டதாக உள்ளது.

II சாமுவேலின் புத்தகமோ, 40 ஆண்டு காலம் ஆளுகிறவனாக மட்டுமல்ல, நன் மாதிரி அரசனாகவும் தாவீதை படம்பிடித்துக் காட்டுகிறது. 30 வயதில் அரியணை ஏறுகிறவனாக மட்டுமல்ல, முழுமையாக ஆயத்தமாக்கப்பட்டத் தலைவனாகவும், தாவீதை, நம் முன் நிறுத்துகிறது.

பல வேதாகம வல்லுநர்கள் இப்புத்தகத்தை 3 கூறுகளாகப் பகுக்கிறார்கள்

1) தாவீதின் சாதனைகள் (Triumphs)
2) தாவீதின் சோதனைகள் (Transgressions)
3) தாவீதின் வேதனைகள் (Troubles)

இரண்டாம் அதிகாரம் முதல் பத்தாம் அதிகாரம் வரை, தாவீதுக்கு வெற்றியைத் தவிர வேறெதுவும் வரவில்லை. ஆனால். வெற்றியின் உச்சியில், வேந்தன் தாவீது, வேசித்தனத்தில் வீழ்ந்ததை எழுதுவதற்கு, தேவனுடைய விரல்கள் தயங்கவில்லை.

## அடித்துக் கொண்ட மனசாட்சி, அரித்துப்போன நிலையில்

(I சாமுவேல் 24:5) "தாவீது, சவுலின் சால்வைத் தொங்கலை அறுத்துக் கொண்டதினிமித்தம், அவன் மனது அடித்துக் கொண்டிருந்தது"

தன்னை அழித்தொழிக்க அலைகின்ற சவுல், தன்னிடம் வசமாய்ச் சிக்கிக் கொண்ட வேளையில், அவனை ஒன்றும் செய்யாத தாவீது, அவனது சால்வையின் தொங்கலை மட்டும், சிறிது அறுத்துக்

கொண்டான்.அதற்கே, அவன் மனச்சாட்சி அடித்துக் கொண்டது. ''சத்துருவாக - விழுந்து போனவனாக இருந்தாலும், அபிஷேகம் பண்ணப்பட்டவனாயிற்றே''.

பாடுகள் - நான்கு பக்கங்களும் நெருக்கம் - என நிலையற்று அங்கும் இங்கும் அலைந்து திரிந்து ஓடிக் கொண்டிருந்த போது, 'சின்னஞ் சிறு பிழை' கூட, அவனது சிந்தையைப் பாடாய்ப்படுத்தியது. காரணம், உணர்வுக் கூர்மை (Sensitiveness) பிழைகளைப் பொறுக்க முடியாத மனசாட்சி-சிறிய தவறுகளைக் கூட சகிக்க இயலாத இருதயம், இவை தாவீதிடம் இருந்தன.

ஆனால், இப்போது வெற்றி மேல் வெற்றி குவிகிறது. எல்லாம் வாய்க்கிறது. முழு அதிகாரமும் விரல் நுனிக்கு வந்து விட்டது. அனுபவம் வந்து விட்டது. ஆவிக்குரிய வாழ்விலும் சாதனைகளைப் புரிந்தாகி விட்ட நிலை; இளைப்பாற விரும்பினான். இன்பமாக உப்பரிகையின் மீது உலாவினான். அந்தோ! தனது உணர்வுக் கூர்மையை தொலைத்து விட்ட பரிதாபக் கதியில், அங்கே அவன் காட்சியளிக்கிறான். இருதயம் குத்தவில்லை, மனசாட்சி அடித்துக் கொள்ளவில்லை, உள்ளம் உறுத்தவில்லை. மாற்றானுடைய மனைவியை அபகரித்துக் கொண்டதோடு, அவனை வஞ்சகமாக கொலையும் செய்து விட்டான். இந்த மா பாதகங்களைப் பற்றி இரண்டு ஆண்டுகள் அவனுக்கு எந்த உணர்வும் உண்டாகவில்லை. எந்த துக்கமும் தோன்றவில்லை. இதுவே, 'வெற்றி' விளைவிக்கும் மகா பயங்கர அபாயம்!

நமது வாழ்விலே, நடக்கிறதெல்லாம் நன்மையாகி நினைப்பதெல்லாம் நடந்தேறி - வாஞ்சைகளெல்லாம் வந்தடைந்து வேண்டிக்கொண்டதற்கும் மிக அதிகமாய் வெற்றிகள் குவிந்து இடுக்கண்கள் அகன்று இளைப்பாறுதல் கிடைக்கும் போது, ஒரு மாபெரும் ஆபத்து காத்திருக்கிறது. அது, நமது உணர்வுக் கூர்மையை, நாம் இழந்து போவதே.

பாடுகளில்லாத பாதை, கடினமில்லாத பயணம்;இவற்றையே நாடுகிறோம். வெற்றியை விரும்பாதவரும் இல்லை. ஆசீர்வாதத்தை அணைத்துக் கொள்ளத் துடிக்காதவரும் இல்லை. ஆனால், ஒன்றை மறந்துவிடக்கூடாது. குழப்பமில்லாதபோது, குத்திப்பேசுவோர் இல்லாதபோது, நமது உணர்வுக் கூர்மையை இழந்து, நமது இருதயம் மரத்துப் போவதற்கான வாய்ப்புண்டு.

தாவீது, நமக்கு எச்சரிக்கையை உண்டாக்குகிற ஓர் எடுத்துக்காட்டு.

''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல, நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்'' என்ற வசனத்தை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம். நல்லது; ஆனால், சுகித்திருக்கும் காலத்திலும், என் மனசாட்சி துடித்திருக்கட்டும். அற்பமான தவறு நேர்ந்தாலும், என் இதயம் அடித்துக் கொள்ளட்டும். எனது தலைவர்களின் சால்வையின் நுனிக்கு, என்னால் சேதம் வந்தாலும், தலையே போய்விட்டது போல, நான் துக்கப்படட்டும்.

ஆவிக்குரிய வாழ்வில், நீண்ட காலம், நடந்து-நடந்து, பழகிப் பழகி, பலருக்கு மரத்துப் போகிற நிலை வந்தது உண்மையல்லவா?

## கையளவு விதைத்தால், பையளவு அறுப்பாய்

நமது பாவங்களைத் தேவன் மன்னித்து விடலாம். ஆனால், அவை விளைவிக்கின்ற வேதனைகளை, அனுபவிக்கக்கூடிய நிலைக்கு, தேவன் நம்மைத் தள்ளிவிடுகிறார். தமது உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, நம்மை மன்னிக்கிறார் என்பது நிச்சயம். தமது வாக்குத்தத்தங்களை அவர் நிறைவேற்றுகிறார் என்பது நிச்சயம். நாம் விதைத்த விதைகளாகிய பாவங்களை, நாம் அறுத்துத்தான் தீர வேண்டும் என்பது அதை விட நிச்சயம். தாவீது, பத்சேபாளிடத்தில் செய்த பாவத்தின் மூலம் விதைத்ததை அறுக்க வேண்டியதாயிற்று. 'மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்'.

கையளவு விதைக்கிறோம். பையளவு அறுக்கிறோம். பிறருக்கு நாம் அறிந்து, செய்கிற தீங்குகளை, நீதிமானாக இருந்தாலும், இயேசுவின் ரத்தத்தால் கழுவப்பட்டிருந்தாலும், அறுத்துதான் தீர வேண்டும். இதை உணர்த்தவே, இச்சம்பவத்தை தேவன் விளக்கமாக எழுதி வைத்துள்ளார்.

இஸ்ரவேலின் சரித்திரம் முழுவதும், தேவன் தாவீதை நினைவுகூராமல் இருந்ததில்லை. ஆனால், அவனது சந்ததியை விட்டு, 'பட்டயம்' அகலவேயில்லை. அவனது பிள்ளைகளால் விளைந்த குழப்பம், தேசத்திலே ஏற்பட்ட குழப்பம் - ஆகிய வடிவங்களில் தாவீது அறுத்துக் கொண்டிருந்தான்.

பிறரைப் பற்றி எளிதாக நாம் தீங்கு பேசி விடலாம். பிறரைப் பற்றி புறங் கூறுவதும் எளிது. பிறரைத் தராசிலே வைத்துக்

குற்றந்தீர்ப்பதும் நமக்கு சுலபமே. ஆனால், நினைவில் கொள்ள வேண்டும். அவற்றிற்கான பலன்களை அறுப்பது கடினமானது மட்டுமல்ல, கசப்பானதும் கூட. அதன் விளைவுகள் நம்மோடு முடிந்து போவதில்லை. நமது சந்ததிகளின் மேலும் தொடரும், என உணர்வடைவோம்.

தாவீது. தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன். அப்படிப்பட்டவனேயானாலும், தவறும் போது, அது அவனது குடும்பத்தையும், தலைமுறைகளையும் பாதித்தது. அவன், தனது மனசாட்சி அழுகிப்போன நிலையில், இரண்டு ஆண்டுகள் கடத்தி விட்டான். சுகபோகமும், உல்லாசமும் அவனது மனசாட்சியை மரத்துப்போகச் செய்துவிட்டன.

''ஆண்டவரே! எனக்கு நெருக்கம் இருந்து கொண்டே இருக்கட்டும். அப்போதுதான், நான் மிகக் கூர்மையான உணர்வுடையவனாக இருக்கமுடியும்' என ஜெபிப்பது என் வழக்கம்.

*பிதாவே, வெற்றியைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க எனக்கு உதவிடுவீராக. எனது உணர்வுக் கூர்மையை, அவ்வப்போது, நெருக்கங்கள் மூலம் பட்டை தீட்டுவீராக. எனது மனசாட்சி அழுகிப்போய் விடாதபடி, என்றென்றும் காத்தருளும். விதைக்கிறதையே அறுப்பேன், என்ற மாறாத பிரமாணத்தை நான் ஒருபோதும், மறந்துவிடாதிருக்க கிருபை தந்தருளும். ஆமென்.*

2

# வாலிபனே! வெளித் தோற்றமா? வாய் மொழியா?

*(IIசாமுவேல் 1:2,5)* "மூன்றாம் நாளிலே ஒரு மனுஷன், சவுலின் பாளயத்திலிருந்து புறப்பட்டு, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு தன் தலையின் மேல் புழுதியைப் போட்டுக் கொண்டு, தாவீதினிடத்தில் வந்து, தரையிலே விழுந்து வணங்கினான்.

சவுலும், அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்து போனது உனக்கு எப்படித் தெரியும் என்று தாவீது தனக்கு அதை அறிவிக்கிற வாலிபனிடத்தில் கேட்டதற்கு,

இப்புத்தகமே, ஒரு வாலிபனைப் பற்றிய சம்பவத்தோடு துவங்குகிறது. அவன் அமலேக்கிய வாலிபன். சவுல், மற்றும் அவனது புதல்வர்களின் மரணச் செய்தியைத் தாவீதுக்கு அறிவிக்க வந்தவன். அவனது வெளித் தோற்றம் சரியாகத்தான் இருந்தது. துக்கச் செய்தியை அறிவிப்பதற்கு ஏற்ற தோற்றம். தாவீதை விழுந்து வணங்கிய செயல், அவனது தாழ்மைக்கு அடையாளமாக இருந்தது; ஆனால் அவனது வாயின் சொற்களே, அவனுக்கு அபாயத்தை வரவைத்து விட்டது.

*(Iசாமு 31:3-5)* வேதப் பகுதி 3 தகவல்களைத் தருகிறது.

1) சவுல் விருத்தசேதனமற்றோரின் கையினால் உயிர்விட, விரும்பவில்லை.

2) சவுல், பட்டயத்தை நட்டு, அதின் மேல் விழுந்தான்.

3) சவுல் இறந்ததை உறுதிப்படுத்திக் கொண்ட, அவனது ஆயுததாரியும் தற்கொலை செய்து கொண்டான்.

ஆனால், II சாமுவேல் 1:6-10ன் படி, அவ்வாலிபன் மேற்கண்ட உண்மைகளை, கீழ்க்கண்டவாறு திரித்துக் கூறினான்.

★ விருத்தசேதனமற்ற அமலேக்கியனின் கையால், சவுல் சாக விரும்பினான்.

★ ஈட்டியின் மேல் சாய்ந்திருந்தான்.

★ நான்தான், சவுலின் வேதனையைத் தாங்க முடியாமல், அவர்

பிழைக்கவும், மாட்டார் என அறிந்து, அவரை கருணைக்கொலை (Mercy Killing) செய்தேன்.

அவன் கூறியவற்றில் பாதி உண்மை. மீதியை, தனக்கு சாதகமாகக் கூட்டிக் குறைத்துக் கூறினான். 'கொஞ்சஞ்தானே மாற்றிக் கூறினேன். இதைப்போய் பெரிதாக எடுத்துக் கொண்டார்களே' என்று நாம் நினைக்கலாம். ஆனால், சிறிது திரித்துக் கூறியதால், இவ்வாலிபன் பட்டயத்துக்குப் பலியானதைக் கவனிக்க, ஆவியானவர் நமக்கு உதவுவாராக!

## பிறர் செய்ததை, தான் செய்தது போல நடித்தல்

பிறர் செய்த வேலைகளைத், தான் செய்தது போல நடிக்கிறவர்கள் உண்டு. சவுல் தற்கொலை செய்து கொண்டான். அவனைத் தற்கொலைக்குத் தூண்டியவர்கள், பெலிஸ்திய ராணுவத்தினர். இந்த அமலேக்கிய வாலிபனோ, பெலிஸ்திய ராணுவத்தின் சாதனையை, தனது சாதனையாகக் காண்பிக்க முயன்றான். அவன் தனது உடையை கிழித்துக் கொண்டதும், தனது தலை மீது புழுதியைப் போட்டுக் கொண்டதும், அவனது நடிப்பின் வார்த்தைகளால், அடிபட்டுப் போனது. அவன் தாழ்மையாக நடந்து கொண்டாலும், அவனது வார்த்தைகளால், குற்றவாளியாகிப் போனான்.

## ஓர் எழுத்தை மாற்றிப் பேசி, கழுத்தை இழந்தோர்

*(நியாயாதிபதிகள் 12:6)*

**"நீ ஷிபோலேத் என்று சொல் என்பார்கள்; அப்பொழுது அவன் அப்படி உச்சரிக்கக்கூடாமல், சிபோலேத் என்பான். அப்பொழுது அவனைப் பிடித்து, யோர்தான் துறையிலே வெட்டிப் போடுவார்கள். அக்காலத்திலே எப்பிராயீமில் நாற்பத்தீராயிரம் பேர் விழுந்தார்கள்".**

'ஷி' என்ற எழுத்தை 'சி' என்று மாற்றி உச்சரித்த காரணத்தினால் 42 ஆயிரம் பேர் உயிரையே இழந்து விட்டனர். ஒரே ஒரு எழுத்தின் உச்சரிப்பில், மிகச் சிறிய மாறுபாடு, எவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்தி விட்டது.

தாவீதினிடத்தில் வந்த அமலேக்கிய வாலிபன், தன்னிடத்தில் தான், சவுல் சாவதற்கு முன், கடைசியாகப் பேசினது போல, நடிப்பு வார்த்தைகளைக் கூறினான். தானே எல்லாவற்றையும் முழுமையாகக் கண்டது போலப் பேசினான்.

வேறு விதத்தில் இறந்த சவுலை, தானே கொன்றதாகக் கூறினால், பரிசு கிடைக்கும், பாராட்டும் கிடைக்கும் என்ற தவறான எதிர்பார்ப்பே, அமலேக்கிய வாலிபனின் கோர முடிவுக்குக் காரணம். எதிர்பார்த்தல் தவறல்ல. ஆனால் தவறான எதிர்பார்ப்பு, தவறான இடத்துக்கு நம்மை எடுத்துச் செல்கிறது. தவறான எதிர்பார்ப்புகள், நமக்கு தோல்வியைத் தருவதோடு, முடிவுரையும் எழுதிவிடுகிறது.

நமது எதிர்பார்ப்புகள் என்ன? எனப் பட்டியலிட்டு, அலசிப் பார்ப்போமாக. வாழ்வுக்கென்று ஓர் எதிர்பார்ப்பு, ஊழியத்திலே ஓர் எதிர்பார்ப்பு, நண்பர்களிடத்தில் ஓர் எதிர்பார்ப்பு, தலைவர்களிடத்தில் சில எதிர்பார்ப்புகள், குடும்பத்தில் சில எதிர்பார்ப்புகள். எதிர்பார்ப்புகள் தவறல்ல. தவறான எதிர்பார்ப்புகளே கலக்கத்தையும், இழப்புகளையும் கொண்டு வருகின்றன. ஒருவரிடத்தில் அன்பை எதிர்பார்க்கலாம். இன்னொருவரிடம் மரியாதையை எதிர்பார்க்கலாம். ஆனால், அவற்றின் அடிப்படை சரியானதாக இராவிட்டால், நாம் கண்ணீரில் முடிக்க வேண்டிய நிலை வந்து விடும்.

ஒரு பதவி உயர்வை, தவறான அடிப்படையில் எதிர்பார்த்தால், அவ்வுயர்வு, உங்களுக்குத் துக்கமான முடிவு ஒன்றை அளித்துவிடும். எனக்குப் புகழ் உண்டாக வேண்டும், எனக்குப் பாராட்டு கிடைக்க வேண்டும், என்ற நோக்கத்தில் உண்மையைத் திரித்துப் பேசும்போது, தீங்கு உண்டாகிவிடுகிறது. இது எந்த நிறுவனத்திலும் நடக்கமுடியும். சபையிலும் நடக்க முடியும். கல்விக் கூடத்திலும் நடந்துவிட வாய்ப்புண்டு. தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்களை, எதையாவது கூறிக் கவர்ந்து, காரியங்களை, சாதித்துக் கொள்ளலாம், என்ற மனப்பான்மை வேண்டவே வேண்டாம்.

**"உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்"** (மத். 5:37) என இயேசு மொழிந்தார்.

பிறரைப் பாதிக்கிற உண்மைகளை, சில வேளைகளில் மறைப்பது சரியாக இருக்கலாம். ஆனால், உண்மையை மாற்றிக் கூறுவது, நமது முன்னேற்றத்துக்கு, நமது ஆசீர்வாதத்திற்கு, நமது வழிகளுக்கு, நமது ஆவிக்குரிய வாழ்வுக்கு, சாவுமணி அடித்துவிடும். அபாயத்தை மட்டுமே கொண்டு வரும்.

*பிதாவே, எச்சரிப்பின் குறிப்புகளுக்காக நன்றி. மாமிச மனப்பான்மையும், செயல்பாடும் எங்களை விட்டு அகலும்படி செய்யும். தவறான எதிர்பார்ப்புகள், தேவையில்லாத எதிர்பார்ப்புகள், எங்களுக்கு முடிவுரை எழுதிவிடாதபடி காத்துக் கொள்ளும். ஆமென்!*

3

# விரோதியின் வீழ்ச்சியில், மகிழ்ச்சியடையாத மனதுள்ளவன்

(II சாமுவேல் *1:20*)

''பெலிஸ்தரின் குமாரத்திகள் சந்தோஷப்படாதபடிக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களின் குமாரத்திகள் களிகூராதபடிக்கும், அதைக் காத் பட்டணத்தில் அறிவியாமலும், அஸ்கலோனின் வீதிகளில் பிரஸ்தாபப்படுத்தாமலும் இருங்கள்''.

சவுலின் சகாப்தம் முடிந்து, தாவீதின் சகாப்தம் மலர்ந்து விட்டது. இரண்டு காரணங்களுக்காக இந்நாட்களைத் தாவீது எதிர்நோக்கிக் கொண்டே காத்திருந்தான்.

*1)* தனது அலைக்கழிப்புகளுக்கும், அல்லல்களுக்கும் முடிவு வர;

*2)* தேவ வாக்கு நிறைவேற

எனவே, சவுலின் மரணம் அவனுக்கு மகிழ்ச்சியை மட்டுமே தந்திருக்க வேண்டும். ஆனால், அவனோ உடைகளைக் கிழித்துக் கொண்டு, புலம்பியழுது, உணவு உண்ணாமல் இருந்தான். புலம்பல் பாடல் ஒன்றும் பாடினான். அப்பாடலின் வரிகள், அவனது உண்மையான துயரத்துக்கு சாட்சி கூறுகின்றன. தன்னை வாழ்நாள் முழுவதும் வாட்டி, வதைத்து, வேதனைப்படுத்திக் கொண்டிருந்தவன், செத்து மடிந்தான், என்ற செய்தியை துர்ச் செய்தியாக எடுத்துக் கொண்டவன், நிச்சயமாக நற்குணசாலிதான். ஆவிக்குரிய நிலையில் உன்னதத்தைத் தொட்டவன்தான்.

நமக்குத் தொல்லை தருவோர் ஒழிந்து போனால், அது பற்றி நிம்மதி பெருமூச்சு விடுவது, நமது இயல்பு. ஓர் அதிகாரி இடமாற்றம் (Transfer) செய்யப்பட்டால், கீழே பணிபுரிவோர் 'சனியன் ஒழிந்தது' என்பார்கள். விடுதிக்காப்பாளர் (Warden) இடம் மாறிப்போனால், மாணவர்கள் நிம்மதி பெருமூச்சு விடுவதுண்டு.

சவுலும், அவனது குமாரர்களும் இறந்த பிறகு, வேறு போட்டியாளர்களும் இல்லை. இவன்தான் அரசன் என்று, உலகமே அறியும். அப்படியிருந்தும், மனப்பூர்வமாக துயரங்கொண்டான். தாவீது.

(நீதிமொழிகள் 24:17,18) "உன் சத்துரு விழும் போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக.

கர்த்தர் அதைக் காண்பார், அது அவர் பார்வைக்கு பொல்லாப்பாயிருக்கும். அப்பொழுது அவனிடத்தினின்று அவர் தமது கோபத்தை நீக்கிவிடுவார்."

என் உயிரைத் தேடிக்கொண்டிருந்த சவுல் மரணமடைந்தது உண்மையே. எனது எதிரி தோற்கடிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்தது உண்மையே. ஆனால், இத் தகவல், விருத்த சேதனமற்றோருக்கு தெரிந்துவிடக்கூடாது. தெரிந்தால் இதற்காக களிகூர்ந்து கொண்டாடுவார்கள், எனத் தாவீது கருதினான்.

ஒரு தேவமனிதன், ஒரு தலைவன் தோல்வியடையும் போதோ, வீழ்ச்சியடையும் போதோ, அதினிமித்தம் அவிசுவாசிகள் ஆனந்தமடைய இடங்கொடுத்து விடக்கூடாது.

## தப்புக்கணக்கு போடுவோரை, துல்லியமாக கணிப்பவன்

அமலேக்கிய வாலிபன், தாவீதைத் தவறாகக் கணித்துவிட்டான். சவுலின் மரணச் செய்தியைக் கூறி, அவனது மரணத்திற்குத் தானே காரணம், என்று தெரிவித்தால், தாவீது மகிழ்ந்து விடுவான். பாராட்டையும், பரிசுகளையும் வாரி வழங்குவான் என கணக்கிட்டுவிட்டான்.

தாவீதோ, சவுலோடு பல ஆண்டுகள் இருந்தவன், நடந்தவன், சவுலின் மனதை நன்கு அறிந்தவன். சவுல், எதிரியாக இருந்தாலும், பின்மாற்றக்காரனாக இருந்தாலும், பிசாசு பிடித்தவனாக இருந்தாலும், விருத்தசேதனமற்ற அமலேக்கியனின் கையில் சாக வாஞ்சித்திருக்க மாட்டான் என உறுதியாகக் கணித்துக் கொண்டான்.

## ஆவி இழந்தவனைக் கூட அபிஷேகிக்கப்பட்டவன்தானே எனமதிப்பவன்

*(II சாமுவேல் 1:14,16)* தாவீது அவனை நோக்கி கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொன்று போடும்படி, நீ உன் கையை நீட்டப் பயப்படாமற்போனது என்ன என்று சொல்லி....

தாவீது அவனைப் பார்த்து, உன் ரத்தப்பழி உன் தலையின் மேல் இருப்பதாக. கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரை நான் கொன்று போட்டேன் என்று உன் வாயே உனக்கு விரோதமான சாட்சி சொல்லிற்று என்றான்."

அபிஷேகம் பண்ணப்பட்டவன் விழுந்துபோனவனாக இருந்தாலும், அவன் மீது கை போட்டேன் என ஒருவன் கூறியதை, தாவீதால் சகிக்க முடியவில்லை. கோபங்கொண்டான், அவனைத் தண்டித்துப் போட்டான்.

சில வேளைகளில், நாம் தேவபயமின்றி, மிக எளிதாக எவரையும் தவறாகப் பேசி விடுகிறோம். அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், கர்த்தரிடம் கணக்குக் கொடுக்கவேண்டியவர்கள், என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர்கள் மீது உரிய மரியாதையை எப்போதும் வைத்திருக்க தேவன் உதவுவாராக. தேவ பயம் குறைய, எவ்விதத்திலும் இடங்கொடாதிருப்போமாக!

**(II சாமுவேல் 2:5-6)**

**"தாவீது கீலேயாத் தேசத்து யாபேசின் மனுஷரிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி, நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய சவுலுக்கு இந்தத் தயவைச் செய்து, அவரை அடக்கம்பண்ணினபடியினாலே, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**கர்த்தர் உங்களைக் கிருபையும், உண்மையுமாய் நடத்துவாராக. நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், நானும் இந்த நன்மைக்குத் தக்கதாக உங்களை நடத்துவேன்."**

தாவீதுக்கு சவுலின் முடிவைப் பற்றிய துக்கம் அவன் அரசனாக முடி சூட்டிக் கொண்டபிறகும், தொடர்ந்தது. சவுலை அடக்கம் பண்ணியவர்களை, தாவீது ஆசீர்வதித்தான். அவர்களுக்கு நன்மைகளைச் செய்வதாக வாக்களிக்கவும் செய்தான்.

பலவேளைகளில், நமக்கு வேண்டாதவர்கள், விழுந்து போனார்களென்றால், உலகம் முழுவதும் கூறிவிடுவோம். ஆனால், ஆவிக்குரியவனான தாவீது, அத்தகவலை அறிவியாதபடி தடைவிதித்ததோடு, சவுலின் உடலுக்கு உரிய மரியாதை அளித்தவர்கள் மீது அனுதாபம் கொள்கிறதையும், நாம் காண முடியும்.

*பிதாவே, எங்களைப் பகைக்கிறவர்கள் இடறும்போது, மகிழாதிருக்கும் மனம் தாரும்; எங்களைத் தவறாகக் கணக்குப் போடுவோரை, சரியாக எடைபோட ஞானம் தாரும். பின்மாற்றக்காரர்களானாலும், அவர்களை அவிசுவாசிகளின் கையில் பிடித்துக் கொடுக்காத வைராக்கியம் தாரும். ஆமென்.*

4

# அநுகூல சூழ்நிலை அல்ல; ஆண்டவரின் அனுமதியே, அவனைத் தீர்மானிக்க வைக்கும்

*(II சாமு 2:1)* **"பின்பு தாவீது கர்த்தரை நோக்கி : நான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றிலே போய் இருக்கலாமா என்று விசாரித்தான். அதற்குக் கர்த்தர்: போ என்றார். எவ்விடத்திற்குப் போகலாம் என்று தாவீது கேட்டதற்கு, அவர் எப்ரோனுக்குப் போ என்றார்."**

அன்றைய அரசன் சவுல் மரித்துப்போனான். பட்டத்து இளவரசன் யோனத்தானும் இறந்து விட்டான். யுத்தவீரர்களான சவுலின், வேறு இரு மகன்களும் இறந்து விட்டனர். உதவாக்கரைகள் மட்டுமே, சவுலின் குடும்பத்தில் மீந்திருந்தனர். எதிர்கால அரசன் தாவீதுதான் என சவுலே பகிரங்கமாக ஒத்துக் கொண்டதுண்டு. யோனத்தான், ஏற்கனவே தாவீதை அரசனாக ஏற்றிருந்தான். கோலியாத்தை கொன்ற நாளிலிருந்து தாவீதிற்கு இஸ்ரவேலிலே பெரும்புகழ் இருந்தது.

இவ்வளவு அனுகூலங்கள் எல்லாம் சாதகமாக இருக்கின்றன. சூழ்நிலைகளின் சாதகரீதியைப் பார்த்து, நாமாக இருந்திருந்தால் உடனே அடுத்த அடி எடுத்திருப்போம். ஆனால், தாவீது நமக்கு நடத்துகிற பாடம் அநுகூல நிலை மட்டும் போதாது. ஆண்டவரின் அனுமதியும் தேவை.

ஓரிடத்தில் நற்செய்தி அறிவிக்க விரும்புவதாக வைத்துக் கொள்ளுவோம். வாசல்கள் திறந்திருக்கலாம், வழிகள் அகன்றிருக்கலாம், வரவேற்புகள் மிகுந்திருக்கலாம், அவற்றை மட்டும் கருத்தில் கொண்டு முடிவெடுத்தால் தோல்வியடைந்து விடுவோம். வானம் திறந்திருக்கிறதா என நோக்க வேண்டும். ஆண்டவர் அனுமதிக்கிறாரா எனக் கேட்க வேண்டியது அத்தியாவசியம்.

தாவீது அவசரப்படவில்லை. 'கர்த்தர் தாவீதோடே கூட இருந்தார்' என வேதாகமம் அடிக்கொருமுறை கூறுகிறது. கர்த்தர்தான் என்னோடே கூட இருக்கிறாரே. நான் போகுமிடமெல்லாம் தேவன் என்னோடே கூட வருவார் என கண்மூடித்தனமாக தாவீது நடந்து கொள்ளவில்லை.

## கர்த்தர் நடத்துகிற இடம் கடினமானதாக இருக்கலாம்

*(II. சாமு . 5:6)*

"தேசத்திலே குடியிருக்கிற எபூசியர் மேல் யுத்தம் பண்ண ராஜாவானவன் தன் மனுஷரோடே கூட எருசலேமுக்குப் போனான். அவர்கள் இதிலே பிரவேசிக்க தாவீதினால் கூடாது என்று எண்ணி தாவீதை நோக்கி, "நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை. குருடரும், சப்பாணிகளும் உன்னைத் தடுப்பார்கள் என்று சொன்னார்கள்."

கர்த்தர் போகும்படி கூறின, எபிரோன் அவ்வளவு எளிதான இடமல்ல. அது எருசலேமுக்கு அருகில் அமைந்திருந்தது. எருசலேமில் எபூசியர் அந்நாட்களில் இருந்தனர். விழியிழந்த எபூசியரும், ஊனமுற்ற எபூசியரும் கூட, தாவீதைத் தடுத்து விடுவார்கள் எனக் கூறப்பட்டதென்றால் எபூசியரின் பெலம் எத்தகையது எனப் புரியும். 'எபிரோனுக்குப் போ' என்றால் 'போகிறேன்'. அவ்வளவு தான். "ஐயோ! அங்கே குருடரும், ஊனமுற்றோரும் கூட மிகுந்த பலசாலிகள்; எனக்கு அங்கே ஆபத்து இருக்கிறது, நான் போக முடியாது" என்று தாவீது கூறவில்லை.

தேவன் என்னை ஒரு இடத்திற்கு அனுப்புகிறார் என்றால், என்னைப் பாதுகாக்க வல்லவர் எனும் விசுவாசம், தாவீதுக்கு இருந்தது. ஆண்டவர்தான் என்னை இங்கே அனுப்பியுள்ளார் என்ற உணர்வு இருக்குமானால், எந்த பிரச்சனையையும், எந்தப் போராட்டத்தையும் சந்திக்கவும், வெல்லவும் நாம் பெலனடைகின்றோம். இந்தக் காரணத்தினாலேயே, தாவீது வரவரப் பெலத்தான் என வேதம் கூறுகிறது.

## விசுவாசமின்மையாலும் கேட்கலாம்! கீழ்ப்படியும் தன்மையாலும் கேட்கலாம்

சில வேளைகளில், நாம் விசுவாசமில்லாத நிலையில் இருக்கும் போது, 'நான் எங்கு போவது என தேவன் காண்பித்தால் மட்டுமே போவேன்' எனக் கூறலாம்.

'தேவன் எங்கு அனுப்பினாலும் மனப்பூர்வமாகப் போவேன்' என்று உண்மையாகவே கீழ்ப்படியும் நோக்கத்தோடும், கேட்க முடியும்.

பலர், "தேவன் எங்களுக்குக் காண்பித்தால், போவோம். அவர் எங்களுக்கு ஒன்றும் காண்பிக்கவில்லை" என சாக்கு போக்கு சொல்லி, ஒதுங்குவது அவிசுவாசம்.

ஆனால், தாவீது அவிசுவாசத்தினால் அல்ல. உண்மையாகவே கீழ்ப்படியும் எண்ணத்துடன் கேட்டான்.

போகலாமா? போகலாம் என்றால் எங்கு? என்ற தெளிவான வழி நடத்துதலோடு தாவீது போனான். ஆவிக்குரியவன் இவ்வாறு நடக்க நடக்க, தேவன் அவனுக்கு வாழ்விலே வெற்றிகளை வைத்திருக்கிறார் என்பதிலே சந்தேகமில்லை.

தாவீது ஒவ்வொரு அசைவிற்கு முன்பாகவும், தேவனைக் கேட்டு விசாரித்தான்.

பல வேளைகளில், தடைபட்ட நிலையிலே, நாம் தேவனிடம் போய்க் கேட்போம். 'ஆண்டவரே, அங்கே கதவு அடைக்கப்பட்டு கிடக்கிறது. இங்கே திறந்த வாசல் இல்லை'.

ஆனால், எல்லாம் சாதகமாக இருக்கும்போது, தேவனை நோக்கிப் பார்ப்பது, சாதாரணமாக யாவரிடத்திலும் காணப்படும் குணமல்ல. ஒன்றும் புரியாமல் இருக்கும் போது, தேவனிடம் போவோம். எல்லாம் எதிர்ப்புகளாய் இருக்கும்போது, தேவனிடம் போவோம். எல்லாம் சாதகமாக இருக்கும்போது, நாம் ஆண்டவரிடம் போவதில்லை. போகக் கற்றுக் கொள்வோம். போவோம்.

*பிதாவே! தடைபட்ட நிலையில் மட்டுமல்ல, எல்லாம் சாதகமாக இருக்கும் போதும், உமது ஆலோசனையை நாட உதவும். நீர் நடத்துகிற வழி கடினமாக இருந்தாலும், உம் ஆலோசனையைக் கடைபிடிக்க உதவும். அவிசுவாசத்தினால் அல்ல; கீழ்ப்படியும் மனதுடன் உம்மிடம் விசாரித்துக் கேட்க உதவும். ஆமென்.*

5

# பாரம்பரிய ஆவியினால் பாழாய்ப் போன அப்னேர்

*(II சாமு. 2:8,9)*

*''சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக் கொண்டுபோய்,*

*அவனைக் கீலேயாத்தின் மேலும், அஷூரியர் மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின் மேலும், பென்யமீனின் மேலும், இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக்கினான்''.*

சவுலுக்குப் பின் தாவீதுதான் ராஜாவாக வேண்டும், என திட்டமாய் அறிந்திருந்தவன் அப்னேர். ஏனெனில், சவுல் கூறியிருந்தான், ''நீ (தாவீது) நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும்,இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்'' (Iசாமு 24:20). அப்போது, அப்னேரும் கூட இருந்திருக்க வேண்டும்.

தேவ வெளிப்பாட்டை அறிந்திருந்தும், 'தகப்பனுக்குப் பின் மகன்தான் அரசனாக வேண்டும்' என்ற பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டான். (Tradition). தேவதிட்டத்தைப் பற்றியோ, தேசத்தைக் குறித்த தேவ தீர்மானத்தைப் பற்றியோ, அவனுக்குக் கவலையில்லை. தன்னுடைய கை ஓங்கியிருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, சவுலின் மகன் இஸ்போசேத்தை ராஜாவாக்குகிறான் அப்னேர். அவன் என்ன செய்திருக்க வேண்டும்? சவுல் இறந்தவுடனே, தாவீதிடம் வந்து 'நீர் என்ன சொல்கிறீர்' எனக் கேட்டிருக்க வேண்டும்.

## அப்னேர் மாம்சீகமான கிறிஸ்தவருக்கு அடையாளம்

தேவனது வெளிப்படுத்தலுக்கு - தேவ திட்டத்திற்கு அவன் தன்னை ஒப்புக் கொடுத்திருந்தால், பல கொலைகளைத் தடுத்திருக்க முடியும். பல வீணான நிகழ்ச்சிகள், பல மனச் சஞ்சலங்கள்

அனைத்திற்கும் அவன் விலகியிருந்திருக்க முடியும். அவன் இறந்தபோது, 'மதிகெட்டவன்போல செத்துப்போனாயே' எனதாவீது புலம்பினானே, அந்த மதிகேடு இங்குதான் துவங்குகிறது. பல வேளைகளிலே, பாரம்பரிய ஆவியினால் தடுக்கப்பட்டு விடலாம். தேவனுடைய நடத்துதலுக்கு, தேவனுடைய மனதிற்கு உகந்தவற்றில் ஈடுபடுவதற்கு, பாரம்பரிய சம்பிரதாயங்கள் நம்மைத் தடுக்குமானால், அதன் முடிவு பெரிய இழப்பாக இருக்கும் என்பதை மறந்து போகக்கூடாது. அப்னேர் மாம்சீகமான கிறிஸ்தவர்களுக்கு ஓர் அடையாளமாகிப் போனான்.

## அலட்சியப் போக்கு அழிவுப்போக்கு

*(II சாமு. 2:14)*

**"அப்னேர் யோவாபை நோக்கி: வாலிபர் எழுந்து நமக்கு முன்பாகச் சிலம்பம் பண்ணட்டும் என்றான். அதற்கு யோவாப்: அவர்கள் எழுந்து அப்படிச் செய்யட்டும் என்றான்."**

அப்னேர் அடிபட்டுப் போனதிற்கு ஒரு காரணம், அவனது அலட்சியப் போக்கு. வாழ்வை மெத்தனமாக எடுத்துக் கொள்கிற மனப்போக்கு. 'சும்மாதானே உட்கார்ந்திருக்கிறோம். விளையாட்டிற்கு, இரண்டு பக்க வாலிபரும் சண்டை போடுவதைப் பார்க்கலாம்' என்று கேலியாகத்தான் துவங்கியது. ஆனால், பக்கத்துக்கு 12பேர் என 24 பேர் மடிந்தனர். 31-ஆம் வசனப்படி, 360 பேர் மடிந்து விட்டனர்.

ஒரு மனிதன் விளையாட்டாக ஆரம்பித்தான். 'சும்மாதானே இருக்கிறோம். எதையாவது செய்வோமே, எதையாவது பேசுவோமே' என்ற மனப்பான்மை 360 உயிர்களைக் குடித்து விட்டது. விளையாட்டாகத் துவங்கி, குரோதம் உருவாகி, யோவாபினுடைய சகோதரன் ஆசகேல் கொல்லப்பட்டு (வ.23), அதற்குப் பழிவாங்கும் செயலாக பின்னர் அப்னேர் கொலை செய்யப்பட்டு (II சாமு 3:27), இறுதியாக யோவாபின் தலை அரச தண்டனையிலே அகற்றப்பட்டு விட்டது. (I ராஜா. 2:34).

பொழுது போக்குக்காக வீணான சொற்கள், வீணான செயல்கள்- என ஈடுபட்டு, உயிரை போக்கிக் கொண்டோர் உண்டு. வீணான சொற்களுக்கு மட்டுமல்ல - வீணான செயல்களுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும். 'சும்மா கதையடிக்க ஆரம்பித்தேன். வம்பிலே மாட்டிக் கொண்டேனே' என அழுதவர்கள் பலர் உண்டு. வாழ்வின்

**'தீவிரத்தன்மையை' (Seriousness) உணராமல், மெத்தனமாக வாழ்வது பெரும் அபாயம்.**

***(நீதிமொழிகள் 30:33)***

**"பாலைக் கடைதல் வெண்ணெயைப் பிறப்பிக்கும்: மூக்கைப் பிசைதல் இரத்தத்தைப் பிறப்பிக்கும், அப்படியே கோபத்தைக் கிண்டிவிடுதல் சண்டையைப் பிறப்பிக்கும்."**

ஏதோ பேசவேண்டும் என பேசியிருப்போம். பேசுவது கிருபை நிறைந்த சொற்களாக இருக்கட்டும். ஏதோ செய்ய வேண்டுமே என எதுவும் செய்திருப்போம். நமது செய்கைகளுக்கு நல்ல நோக்கம் இருக்கட்டும். ஏதோ நடக்கிறேன் என்ற நடக்கை வேண்டாம். கொள்கையுடன் கூடிய நடக்கை அமையட்டும். வாழ்விலே ஒவ்வொரு சந்தர்ப்பமும் முக்கியமானது. வாழ்விலே ஒவ்வொரு சொல்லும் சக்தி வாய்ந்தது. ஏதோ வாழ்ந்தோம் என வாழாது, அர்த்தத்தோடு வாழ, ஆண்டவரே அருள் புரியும்.

'மதி கெட்டவன் போல செத்தாயே' என மாமனிதனைப் பற்றி மன்னன் தாவீது புலம்புகிற நிலைமைக்கும், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு நின்ற யோவாபை எடுத்துச்சென்று வெட்டிப்போடுகிற முடிவுக்கும், வாழ்வின் தீவிரம் புரியாத வம்புக் குணமே காரணம். விளையாட்டான ஒரு சம்பவம், எத்தனையோ தொடர் வினைகளை (Chain Reaction) விளைவித்து விட்டது.

**'செம்மையானவனைக் கவனித்துப்பார். அவனது முடிவு சமாதானம்'** என்கிறதே வேதம். சமாதானமில்லாத முடிவுகளுக்கு, மெத்தன மனப்பான்மை முகவுரை எழுதிவிட்டதே.

*பிதாவே! பல வேளைகளில் நாங்கள் வாழ்வின் தீவிரத்தன்மையை உணராது போகிறோமே. அர்த்தமற்ற பேச்சுகளைப் பேசுகிறோம். அவை எங்களது எதிர்காலத்திற்கும், மக்களுக்கும் கண்ணியாகி விடுகிறதே. ஒவ்வொரு அடியையும், தேவபயத்தோடு எடுத்துவைக்க உதவியருளும். ஆமென்!*

6

# மாமிச பெலத்தைச் சார்ந்து மதிகெட்டுப் போன மாமனிதன்

*(II சாமு 3:6)*

"சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் யுத்தம் நடந்து வருகிற போது அப்னேர் சவுலின் குடும்பத்திலே பலத்தவனானான்.

தேவத்திட்டத்தை விட்டு விலகி செயல்படுகிற மாமிச பெலன் துவக்கத்தில், பெலன் கொள்ளவே செய்யும். அப்னேர் அவ்வாறுதான் பெலத்துப்போனான்.

*(II சாமு. 3:8-10)*

"அப்னேர் இஸ்போசேத்தின் வார்த்தைகளுக்காக மிகவும் கோபம் கொண்டு உம்மைத் தாவீதின் கையில் ஒப்புக் கொடாமல் இந்நாள் மட்டும் உம்முடைய தகப்பனாகிய சவுலின் குடும்பத்துக்கும், அவருடைய சகோதரருக்கும், சிநேகிதருக்கும் தயவுசெய்கிறவனாகிய என்னை நீர் இன்று ஒரு ஸ்திரீயினிமித்தம் குற்றம்பிடிக்கிறதற்கு, நான் யூதாவுக்கு உட்கையான ஒரு நாய்த்தலையா?

நான் ராஜ்யபாரத்தைச் சவுலின் குடும்பத்தை விட்டுத் தாண்டப் பண்ணி, தாவீதின் சிங்காசனத்தைத் தாண் துவக்கிப் பெயர்சேபாமட்டுமுள்ள இஸ்ரவேலின் மேலும் யூதாவின் மேலும் நிலைநிறுத்தும்படிக்கு கர்த்தர் தாவீதுக்கு ஆணையிட்டபடியே நான் அவனுக்குச் செய்யாமற்போனால், தேவன் அப்னேருக்கு அதற்கு சரியாகவும் அதற்கு அதிகமாகவும் செய்யக்கடவர் என்றான்."

அப்னேரின் வாயிலிருந்து 2 உண்மைகள் வெளிவந்தன.

1. தாவீது ராஜாவாவான் என தேவன் ஆணையிட்டிருந்ததை, அப்னேர்அறிந்திருந்தான்.
2. தேவதிட்டத்தை அறிந்திருந்தும், பாரம்பரியத்திற்காக, இஸ்போசேத்துக்கு துணை நின்றான்.

தேவனுடைய திட்டத்தை அறிந்திருந்தும், அதற்கு மாறான ஒரு வழியை ஏற்படுத்தினான். தாவீதுக்கு தேவன் வைத்திருப்பது என்ன என புரிந்திருந்தும், அவனுக்கு எதிராக செயல்பட்டான் அப்னேர்.

மாமிச பெலத்தில் நடப்பவர்கள் எப்படி இருப்பார்கள்? என அப்னேர் படம்பிடித்துக் காட்டுகிறான். தங்களைச் சார்ந்துதான் மற்றவர்கள் வாழ வேண்டும். தங்களுடைய பெலத்தில்தான் மற்றவர்கள் செயல்படுகிறார்கள் என்று காண்பிப்பார்கள். அவர்களைச் சார்ந்துதான் மற்றவர்கள் வாழ வேண்டும் என விரும்புவார்கள். அவர்கள் இல்லாமல் எந்த வேலையும் நடக்காது என நடிப்பார்கள். மற்றவர்கள், தங்களுக்கேற்றாற் போல நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். அவர்க்ளது குற்றங்களை யாராவது குறைகூறினால், கோபம் வந்து விடும் அவர்களுக்கு. உடனே, முரட்டாட்டம் (rebel) பண்ணத் துவங்கி, தலைகீழாகச் செயல்படத்துவங்கி விடுவார்கள். ஏறுக்குமாறாக நடந்து கொள்ளத் தொடங்குவார்கள்.

நான் ஊழியர்கள் கூட்டத்தில் பேசினதை மீண்டும் குறிப்பிடுகிறேன். 'நமக்கு பெலமுள்ளவர்கள் மட்டுமல்ல. பெலவீனர்களும் தேவை. நாம் ஒருவரையொருவர் சார்ந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் தேவை என உணர வேண்டும். ஒரே ஒரு தனிநபரை, சார்ந்து மற்ற யாவரும் செயல்படும்போது அந்த தனிநபர் வீழ்ச்சியடைந்தால், யாவரும் விழுந்து விடுவார்கள். ஒருவரது வீழ்ச்சி அனைவரது வீழ்ச்சி என்று மாறுவதற்கு இடங்கொடுக்கக் கூடாது.

'கூனி இரால்' என்று ஒரு வகை இரால் உண்டு. அதற்கு முதுகெலும்பு கிடையாது. எந்த எலும்பும் கிடையாது. முள் கூட கிடையாது. தோல் மட்டும் அழகாக இருக்கும். தோலை நீக்கி விட்டால், வெறும் சதைப் பிண்டம்தான் மீளும். அவை தனியாக வாழ்வதில்லை. அவை கூட்டாக இணைந்து, ஒரு கப்பலையே நிறுத்தக் கூடிய சக்திபடைத்தவை. நாம் பெலவீனர்களாக இருக்கலாம். ஆனால், இணைந்து கூட்டாக செயல்படும்போது எந்த அரிய - பெரிய செயலையும் சாத்தியமாக்கி விட முடியும். அந்த சிறிய மீன், நமக்கு நல்ல பாடம்.

நமது குழுவிலே-சமூகத்திலே, தனியாக சாதிக்காமல், கூட்டாக சாதிக்கப் பழகுவோம். தனியாக சாதித்துப் பழகுகிற மனிதன், தனது செயல்களை யாரும் விமர்சிக்கக் கூடாது என எண்ணுவான்.

## தொட்டால் சிணுங்குவார்கள்

அப்னேர் சவுலின் மறுமனையாட்டியை எடுத்துக் கொண்டான். 'எனது தகப்பனின் மறுமனையாட்டியை எடுத்துக் கொண்டது சரியா' என இஸ்போசேத் கேட்டது, அப்னேருக்கு பெரிய குற்றமாகப்பட்டது. அவர்கள் தவறு செய்தால் சொல்லிக் காட்டக் கூடாது. வார்த்தைகள் சரியில்லை என்றால் சுட்டிக் காட்டக் கூடாது. ஒழுக்கமின்றி நடந்தாலும், ஒன்றும் சொல்லக் கூடாது. அவர்கள் தொட்டால் சிணுங்கியைப் போன்றவர்கள். என்னைத் தொடாதே. என்னைத் தொட்டால் உனக்கு ஆபத்து - என்பது போல நடந்து கொள்வார்கள். அப்படிப்பட்ட எத்தனை பேரைக் கண்டு நாம் விலகிப் போயிருக்கிறோம். ஒரே அறையில் வசிக்கலாம். ஆனால் அந்தக் குறிப்பிட்ட சகோதரனை மட்டும் கண்டுகொள்ளக்கூடாது. அவரைத் தொட்டுவிட்டால் பெரிய பிரச்சனையாகிவிடும். அவர்களை அப்படியே விட்டுவிட்டால் நன்றாகச் செயல்படுவார்கள். ஆனால், இலேசாக அவர்கள் செயலில் குறுக்கிட்டுவிட்டால், உடனே நமக்கு எதிராக படமெடுத்து ஆடுவார்கள். அப்னேர் அப்படிப்பட்டவர்களுக்கு உதாரணமானவன்.

## பிறரது குறைகளைக் கடுமையாகக் கண்டிப்பார்கள்

*(II சாமு. 3:15,16)*

''அப்பொழுது இஸ்போசேத் அவளை லாயீசின் குமாரனாகிய பல்த்தியேல் என்னும் புருஷனிடத்திலிருந்து அழைத்து வர ஆட்களை அனுப்பினான்.

அவள் புருஷன் பகூரீடம் மட்டும் அவள் பிறகாலே அழுதுகொண்டு வந்தான். அப்னேர் அவனை நோக்கி நீ திரும்பிப் போ என்றான். அவன் திரும்பிப் போய்விட்டான்.''

தாவீது, பெலிஸ்தரின் 100 நுனித் தோல்களைப் பரிசமாகக் கொடுத்து திருமணம் செய்து கொண்ட மீகாளை, சவுல் வேறொருவனுக்கு மனைவியாகக் கொடுத்து விட்டான். இப்போது, தாவீது அவளை மறுபடியும் கேட்டான். மீகாள் அழைத்துவரப்பட்டாள். அவளது இரண்டாவது கணவன் அழுது கொண்டே பின்னால் வருகிறான். சிலர் இப்படித்தான், அது இல்லாவிட்டால் வாழ முடியாது என்பது போல அழுது துடிப்பார்கள். ஓர் அதட்டு போட்டால் அடங்கி விடுவார்கள். அப்னேர் அவனை ஓர் அதட்டுஅதட்டினான். அவன்

திரும்பிப் போய்விட்டான். அப்னேர் என்றால் அவ்வளவு பயம் அவனுக்கு. ஏன்? அப்னேரைத் தீண்டினால், கோபப் பட்டுவிடுவான்.

இவனது தவறை யாராவது சுட்டிக் காட்டினால், இவனுக்குக் கோபம் வந்து விடும். ஆனால், இவன் மட்டும், பிறர் தவறு புரியும்போது 'டேய், சத்தம் போடாதடா' என்பது போல மிரட்டுவான்.

இத்தகைய இயல்புடையோரிடம் ஓர் ஆவி இருக்கும். தான் தவறினால் தப்பில்லை. பிறர் தவறினால் பெருங்குற்றம். மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்ற பழமொழியில் கூறப்பட்டுள்ள மனப்பான்மை இருக்கும். மாமிச பெலத்தில் நிற்பவன் அப்படித்தான் நடந்துகொள்வான். பிறரது தவறுகளைச் சுட்டிக் காட்டும்போது அடாவடித்தனமாக நடந்து கொள்வான்.

நமது தவறுகளை பிறர் சுட்டும்போது, திருத்திக் கொள்கிறோமா? கோபப்படுகிறோமா? இயேசு சொன்னார், 'மனுஷர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களோ, அதையே பிறருக்குச் செய்யுங்கள்' இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் கூறுகிற சத்தியங்களின் சாராம்சம். இந்த சூத்திரத்தின்படி பிறரோடு நடந்துகொண்டால் உலகில் மகிழ்ச்சியும், சமாதானமும் நிலவும். ஆனால், மாமிச இயல்புடையவன் இவ்வாறு நடக்கமாட்டான்.

விமானங்களிலும், விமான நிலையங்களிலும் உள்ள கழிவறைகளில் இவ்வாறு எழுதிப்போடப்பட்டிருக்கும். 'நீங்கள் இந்த கழிவறை எவ்விதம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அந்த நிலையில் இதை விட்டுச் செல்லுங்கள்.' ஆனால், இதுபோன்ற வழிமுறைகளைக் கடைபிடிப்பது கடினமே. பிறர் உபயோகப் படுத்துவதற்காக, நான் இதைச் செய்ய வேண்டுமா? என்ற கேள்வியே மேலோங்கும்.

## நாளானது விளங்கப் பண்ணும்

*(IIசாமு. 3:33)*

*"ராஜா அப்னேருக்காக புலம்பி மதிகெட்டவன் சாகிறது போல அப்னேர் செத்துப் போனானோ?"*

அழிவுக்கு முன்னானது அகந்தை என்ற வேதவாக்கு எவ்வளவு உண்மையாகிவிட்டது. தேவதிட்டத்தை, விட்டு விலகி நாம்

சென்றிருப்போம் என்றால், அதைச்சரிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். தேவ திட்டத்திற்கு எதிராக எதுவும் செய்து விடாதபடி, நம்மைக் காத்துக் கொள்வோமாக! மாம்சத்தைத் தங்கள் புயபலமாக்கிக்கொள்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என வேதம் எடுத்துரைக்கிறது.

பல வேளைகளிலே, நாம் ஆவிக்குரியவர்களாக காட்சியளித்தாலும், மாமிச கிரியைகளை நடப்பித்துக் கொண்டிருக்க வாய்ப்புண்டு. நம்மைக் காண்பவர்கள், நம்மை ஆவிக்குரியவர்களாக மதிப்பீடு செய்யலாம். போகையிலும், வருகையிலும் நாம் அந்நியபாஷை பேசலாம். ஆனால், நமது நடக்கைகளையும், எண்ணங்களையும் வேத வசன வெளிச்சத்திலே ஆராய்ந்தால், அவற்றில் பல நடவடிக்கைகள் மாமிச பிரகாரமானவை என கண்டுக்கொள்வோம். மாமிசத்தின்படி நடக்கிறவர்கள் மதிகெட்டவர்கள்.

நான் ஓரிடத்திற்கு ஊழியத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே, மூத்த ஊழியர் ஒருவர், என்னை அங்கிருந்த இன்னொரு ஊழியரோடு ஒப்பிட்டுப் பேசி, எனக்கு அறிவுரை கூறினார். ''அவர் எப்போதும் ஜெபித்துக் கொண்டும், வேதம் வாசித்துக் கொண்டும் இருக்கிறார். நீங்களோ சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கிறீர்கள்'' என்றார். ஆவிக்குரியவர் யார்' என நாளானது விளங்கப்பண்ணும்' என்று நான் பதிலளித்தேன். நான்கு நாட்களில் அவர் குறிப்பிட்ட நபர் ஆவிக்குரியவரல்ல என தனது செய்கையின் மூலம் நிரூபித்துவிட்டார்.

அப்னேருடைய முடிவு, மதிகெட்டவனின் முடிவு போல இருந்தது. கைகளில் கட்டு இல்லை. கால்களில் விலங்கு இல்லை. அது யுத்தக் காலமும் இல்லை. அவனது மரண நாளானது, அவனது இயல்பை விளங்கப்பண்ணிற்று.

## சாதிக்கலாம், சாதனைகள் ஆசீர்வாதமாயிராது

பத்துக் கோத்திரங்களையும், தன் விருப்பத்துக்கு ஆட்டிவைக்கிற செல்வாக்கு அப்னேருக்கு இருந்தது. தான் நினைத்த நபரை ராஜாவாக்குகிற சக்தியும் இருந்தது. தாவீது யாரைக் கேட்டாலும், அழைத்து வரக்கூடிய திடனும் இருந்தது. இவ்வளவையும் அப்னேரால் சுய பெலத்தினால், மாமிச பெலத்தினால் செய்ய முடிந்தது. ஆனால், அவனது சாதனைகள் அவனுக்கும், பிறருக்கும் ஆசீர்வாதமாக இருக்கவில்லை.

நமது சுயபெலத்தினால், நாம் சில சாதனைகளை படைத்து விடலாம். ஆனால், நமக்கோ நம்முடன் இருப்போருக்கோ அதனால் ஆசீர்வாதம் வராது.

நாம் உண்மையான ஆவிக்குரியவர்கள் என்றால், பிறருக்கு நிச்சயமாக ஆசீர்வாதமாக இருப்போம். இருந்துதான் தீர வேண்டும். மாமிச பெலத்தை சார்ந்து, சரிந்து விடாதபடி தேவன் நம்மைக் காப்பாராக.

உண்மையான மனிதன் நீர்க்கால்களைப் போல புறப்பட்டு ஓடி பலரை மகிழச் செய்வான். அவனிடத்திலிருந்து புறப்படுகிற ஜீவதண்ணீர் ஊற்றுகள் பலரை உயிர்ப்பிக்கும். திடப்படுத்தும், புதுப்பிக்கும், விசுவாசத்தில் அனல் மூட்டி எழுப்பும்.

*பிதாவே! மாமிச பெலத்தில் செயல்படாதபடி தடுத்தருளும். நான் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது என்ற மனப்பான்மையிலிருந்து விடுவியும். எனது தவறுகள் சுட்டிக்காட்டப்படும்போது நான் திருத்திக் கொள்ள பக்குவம்தாரும். பிறர் தவறு செய்யும்போது, அடாவடித்தனமாக நடந்து கொள்ளாதபடி தடுத்தருளும். மதிகெட்டவனைப் போல எனது முடிவு இராதபடி காத்தருளும். எனது சாதனைகள் பலருக்கு ஆசீர்வாதத்தையும், ஆனந்தத்தையும் கொண்டு வர உதவும். ஆமென்!*

7

# பெலத்தைக் காண்பித்த அப்னேரும் பெலவீனத்தை ஒத்துக் கொண்ட தாவீதும்

*(II சாமு.3:33, 34)*

''ராஜா அப்னேருக்காகப்புலம்பி மதிகெட்டவன் சாகிறது போல, அப்னேர் செத்துப்போனானோ?

உன் கைகள் கட்டப்படவும் இல்லை. உன் கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை. துஷ்டர் கையில் மடிகிறது போல மடிந்தாயே என்றான்: அப்பொழுது ஜனங்களெல்லாரும் பின்னும் அதிகமாய் அழுதார்கள்''.

தேவன் இஸ்ரவேலிலே உருவாக்கி வைத்திருந்த அடைக்கலப்பட்டணங்களில் எப்ரோனும் ஒன்று; எப்ரோன் அடைக்கல பட்டணமாக இருந்த படியாலேயே, தாவீதை அங்கு வந்து தங்கும்படி, தேவன் கூறினார். அடைக்கலப் பட்டணத்திலே, கைப்பிசகாக பிறரைக் கொன்றவர்கள் வந்து தஞ்சம் புக முடியும். அங்கே அவர்கள் உயிருக்கு பாதுகாப்பு இருந்தது. அப்னேர் தாவிதினிடத்திலே எபிரோனிலேயே இராமல், பட்டணத்தை விட்டு வெளியே போனதுதான், அவனது உயிருக்கு உலை வைத்தது.

'கைகள்கட்டப்படவில்லை' தற்காப்புக்காக போராடி யிருக்கலாம். 'கால்களில் விலங்கு போடப்படவும் இல்லை'' தப்பி ஓடியிருக்கலாம். பிறரது குற்றங்களையே காண்கிறவனின் கண்கள், தனக்கு வரும் அபாயத்தைக் காண இயலாமல் போய் விடுகின்றன. பிறர் தன்னை ஏமாற்ற முயன்றால், அதைக் கண்டுபிடிக்க முடிந்தவனுக்கு, தன்னைத்தானே வஞ்சிப்பதுதான் பெரும் கேடு விளைவிக்கிறது.

*(I கொரி.11:28)*

''எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து...''

(மத் 7:1-5)

''நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.

ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்: நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

நீ, உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?

''மாயக்காரனே முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்''.

அப்படிப்பட்டவனுடைய விழுதல், அவனுக்கே தெரியாமல் நடந்து விடும். அப்னேருக்கும் அடைக்கலப் பட்டணத்துக்கும் இடையில் சிறிதளவே இடைவெளி இருந்தது. இன்னும் சிறிது தூரம் சென்றிருந்தால் பாதுகாப்பாக எபிரோனுக்குள் இருந்திருக்கலாம்.

*(II சாமு.3:21)*

''பின்பு அப்னேர் தாவீதை நோக்கி: நான் எழுந்துபோய், இஸ்ரவேலரை எல்லாம் உம்மோடே உடன்படிக்கை பண்ணும்படிக்கு, ராஜாவாகிய என் ஆண்டவனிடத்தில் சேர்த்துக் கொண்டு வருகிறேன். அதினாலே உம்முடைய ஆத்துமா அரசாள விரும்புகிற இடமெல்லாம் அரசாளுவீர் என்றான். அப்படியே தாவீது அப்னேரை அனுப்பிவிட்டான்; அவன் சமாதானத்தோடே போனான்''.

நான் போய் நாட்டு மக்கள் அனைவரையும் உம் பக்கம் கொண்டு வருகிறேன், என்று புறப்பட்டுப் போனான். நிற்கிறேன் என்று நினைக்கிறவன் எவனும், விழுந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவன்; என்று வேதம் நமக்கு நினைப்பூட்டுகிறது. அப்னேர் தனது சுயபலத்தை நம்பினான். 10 கோத்திரங்களைத் திசைதிருப்புகிறதற்கு வல்லமையுடையவன் நான், என்று மார்தட்டினான். ஆனால், ஓர் அற்பமான சூழ்நிலையில் உயிரையே இழந்துவிட்டான்.

ஆனால், பவுல் கூறினான், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.

## தலைவனின் கையை மீறி அசம்பாவிதம் நடந்தால்....

ஒரு தலைவனின் கையை மீறி, அசம்பாவிதங்கள், தவறுகள் நடந்தால், அத்தலைவனின் அணுகுமுறை எவ்வாறு அமையவேண்டும்?

அப்னேர் கொல்லப்பட்ட போது, தாவீது அதை கையாண்ட விதம், அதை நமக்குக் கற்பிக்கிறது.

நாட்டையே தாவீதின் பக்கம் திருப்பிவிடுவேன் என்று சூளுரைத்த மாமனிதன் திடீரென மறைந்துவிட்டான். ஆகவேதான் வேதம் கூறுகிறது நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்பவேண்டாம்.

தாவீதின் தளபதி யோவாப், எதிர்த்தரப்பைச் சேர்ந்த அப்னேரைக் கொன்றுவிட்டான். தாவீது தூண்டிவிடாமல், அவனது தளபதி இதைச் செய்திருக்க முடியுமா? என்றே நாட்டு மக்கள் நினைப்பார்கள். தாவீதுக்குத் தெரியாமல் இது நடந்திருக்காது என்றே யாவரும் முடிவுகட்டுவார்கள் இந்தத் தர்மசங்கடமான நிலையை தாவீது தெளிவாகக் கையாளுகிறான்.

1. தனது துயரத்தை வெளிப்படுத்தினான்: அழுதான்.
2. பிறரது துயரத்தில் பங்கெடுத்தான்: அடக்க ஆராதனையில், அப்னேரின் உடலுக்குப் பின்னே நடந்தே சென்றான்.
3. பிறரைத் துயரத்தில் ஈடுபடுத்தினான்: பொது உபவாசத்தை அறிவித்தான்.
4. தனது இயலாமையைப், பெலவீனத்தை வெளிப்படுத்தினான். யோவாபை தன்னால் கட்டுப்படுத்த இயலவில்லை என ஒத்துக் கொண்டான்.

மேற்கண்ட 4 படிகள் மூலம் தவறாகப் புரிந்து கொள்ளப் படக்கூடிய தர்மசங்கடமான நிலையைச், சரிப்படுத்திவிட்டான்.

தனது பெலவீனத்தை, இயலாமையை உணர்ந்து, ஒப்புக் கொண்டு, அதை அறிக்கையிடுவதற்கு ஆயத்தமாயிருக்கிறவன் எவனோ, அவன் பெலத்தின் மீது பெலத்தைப் பெற்றுக்கொள்கிறான். ஏனெனில், 'நான் பெலவீனன்' என்று அறிவிக்கிறவன் 'தேவன் பெலம் மிகுந்தவர்' என சொல்லாமல் சொல்லுகிறான். கர்த்தரிடத்தில் வந்து, என்னைப் பெலப்படுத்தும்' என்று கூறும்போது, அவன் பெலத்தின் மேல் பெலம் பெற்று சீயோனில் காணப்படுகிறான்.

எனக்கு, இந்தப் பகுதியிலே பெலவீனம் உண்டு. எனக்கு மற்றவர்களது உதவி தேவை. தேவனே, எனது பெலவீனத்திலே உதவி செய்யும் எனக் கூறுவோம்.

தலைவனாகிய நான், எனது பெலவீனத்தை மக்களிடம் கூறினால், அவர்கள் என்னை மதிக்கமாட்டார்களே, என்னை அற்பமாக எண்ணுவார்களே; என்று எண்ணவில்லை தாவீது.

*பிதாவே, சுயபெலத்தைச் சார்ந்து அற்பமான நிலையில் அழிந்துவிடாதபடி காத்தருளும். எனது பெலவீனத்தை உணர்ந்து, உமது உதவியையும், உமது மக்களின் உதவியையும் நாட எனக்கு அருள்புரியும். எனது கையை மீறிப்போன நிலைமைகள், உமது கையை மீறிப்போகவில்லை என்று நான் அறியட்டும். எனது பெலவீனத்திலே உமது பெலன் பூரணமாக விளங்கட்டும் ஆமென்.*

8

# பழிக்குப் பழி மிருகத்தின் வழி

**(II சாமு. 3:27)**

**"அப்னேர், எப்ரோனுக்குத் திரும்பி வருகிறபோது, யோவாப் அவனோடே ரகசியமாக பேசப்போகிறவன் போல் அவனை ஒலிமுக வாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போய், தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப் பழியை வாங்க, அங்கே அவனை வயிற்றிலே குத்திக் கொன்று போட்டான்".**

அப்னேரை, யோவாப் கொன்றதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். 1) படைத்தளபதி பதவிக்கு தனக்குப் போட்டியாக வந்துவிடுவானே என்ற பயம். 2) தனது தம்பியாகிய ஆசகேலின் மரணத்துக்குப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு.

யோவாபின் குணங்கள் பெரும்பாலானவை நல்லவை, என்று பின்வரும் சம்பவங்களிலிருந்து காணமுடியும். தனக்குப் பேர் வரக்கூடாது, ராஜாவுக்குத்தான் பேர் வர வேண்டும் என்பதில் கவனமாயிருந்தவன். எதையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தாராளமனப்பான்மையுடையவன். ஆனால், 'பழிவாங்குதல்' என்ற மிருககுணம் அவனுக்குள்ளே இருக்கவே செய்தது. உலகிலே யாவரிடத்திலும் காணப்படும் ஜென்ம சுபாவமிது: இது பிறவிக் குணம்.

அரசியலில் மட்டுமல்ல, ஆவிக்குரிய உலகிலும், பழிவாங்குதலைச் சரளமாக நாம் காணத் துவங்கிவிட்டோம். பழிவாங்குதல் மாமிசக் கிரியை. யோவாபும் மாமிசத்துக்குரியவனாகவே வாழ்ந்திருக்கிறான். அப்னேர் கவனக்குறைவாகயிருக்கும் போது, யோவாப் அவனை எளிதாகக் கொன்று, பழிதீர்த்துக் கொண்டான்.

ஆனால், இச்சம்பவம் தாவீதின் சதிச்செயலாகவே, அனைவருக்கும் தோற்றமளித்தது. ஆள்வைத்து அப்னேரை கொன்றுவிட்டான் என்ற கெட்டப்பெயர். தாவீதுக்கு உருவானது.

## கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர்

(II சாமு 3:39) ''நான் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டவனாகயிருந்த போதிலும், நான் இன்னும் பெலவீனன்: செருயாவின் குமாரராகிய இந்த மனுஷர் என் பலத்துக்கு மிஞ்சினவர்களாயிருக்கிறார்கள். அந்தப் பொல்லாப்பைச் செய்தவனுக்குக் கர்த்தர் அவன் பொல்லாப்புக்குத் தக்கதாகச் சரிக்கட்டுவாராக என்றான்''.

நமக்கும் அதற்கும் தொடர்பில்லை: நாம் அவற்றில் தலையிடவில்லை: ஆனால், நாம் தான் அதைச் செய்ததாக குற்றச்சாட்டு எழுகிறது. சில நபர்களை - சில நிகழ்வுகளை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை: அவர்களை ஒழுங்குபடுத்த எனக்கு போதிய பெலனில்லை: அத்தகைய நிலையில் நாம் ஈடுபடாத நிகழ்வுகள், நம்மால்தான் நடந்ததாக மக்கள் பேசும் போது, நமக்கு எரிச்சல் வரும்: கோபம் வரும்: உடனடியாக பிரதிசெயலில் ஈடுபடுவோம். எனக்கும், அதற்கும் என்னத் தொடர்பு? என வாதிடத் துவங்கிவிடுவோம்.

ஆனால், தாவீது கூறினான்: 'கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுவார் கர்த்தர் பொல்லாப்பு செய்தவனுக்குச் சரிக்கட்டுவார்'. நான் பொல்லாப்பு செய்தால், அதே பொல்லாப்பை எனக்கு திரும்பப்பண்ணுகிறவர் கர்த்தர். தேவனுடைய நீதியைப் பற்றி அறிவும், புரிந்து கொள்ளுதலும், தாவீதுக்கு இருந்தது.

## உணர்வுகளை வெளிக்காட்ட வேண்டிய அவசியம்:

(II சாமு. 3:31,32,36)

''தாவீது யோவாபையும், அவனோடிருந்த சகல ஜனங்களையும் பார்த்து, நீங்கள் உங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இரட்டுடுத்தி, அப்னேருக்கு முன்னாக நடந்து துக்கங்கொண்டாடுங்கள் என்று சொல்லி, தாவீது ராஜா தானும் பாடைக்குப் பின் சென்றான்.

அவர்கள், அப்னேரை எப்ரோனிலே அடக்கம் பண்ணுகையில், ராஜா, அப்னேரின் கல்லறையண்டையிலே சத்தமிட்டு அழுதான்: சகல ஜனங்களும் அழுதார்கள்.

ஜனங்கள் எல்லாரும் அதைக் கவனித்தார்கள். அது அவர்கள் பார்வைக்கு நன்றாகயிருந்தது: அப்படியே ராஜா செய்ததெல்லாம் சகல ஜனங்களுக்கும் நலமாய்த் தோன்றினது''.

தாவீது உடைகளைக் கிழித்துக் கொண்டு, இரட்டு உடுத்தி, உபவாசித்து, பகிரங்கமாக அழுதான். அவன் தனது உணர்வுகளை மறைக்கவோ, அடக்கவோ செய்யவில்லை. சிலவேளைகளில் நமது உணர்வுகளை வெளிக்காட்ட வேண்டும்: அது அவசியம். சிலரது முகபாவனைஉணர்ச்சியற்று இருக்கும். அழுகின்றாரா, சிரிக்கின்றாரா, சிந்திக்கின்றாரா ஒன்றுமே புரியாது. கற்பாறையைப் போல எப்போதுமே இருக்கும். எப்போதும் உரத்தசத்தமிட்டு சிரிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. முகத்தை உணர்ச்சியற்ற நிலையில் 'உம்'மென்று வைத்திருந்தால்தான், ஆவிக்குரியவர்கள் என அர்த்தம், என நினைக்கிறோம்', அப்படியல்ல.

தாவீது, தனது துயரத்தை வெளிக்காட்டத் தயங்கவில்லை. 36ஆம் வசனத்தின்படி, மக்கள் யாவரும் அதைக் கவனித்தார்கள். அவர்கள் பார்வைக்கு அது நன்றாக இருந்தது. உண்மையாகவே துக்கப்படுகிறானா? நடிக்கிறானா? எனப்பலர் கவனிப்பார்கள். உண்மையான புன்னகையா? செயற்கையான புன்னகையா? என கவனிப்பார்கள். மனதார சிரிக்காமல், புகைப்படத்துக்காக சிரிக்கிறார் என்று புரிந்துகொள்ள முடியும்.

'என் மீது சந்தேக நிழல் வந்துவிட்டது. என் மீது கொலைப் பழி வருகிற சூழ்நிலை. ஆகவே என்துயரத்தை வெளிக்காட்டுகிறேன்' என்ற எண்ணத்தோடு அல்ல, உண்மையாக மனதார துக்கப்படுகிறேன் என தாவீது விளங்கப்பண்ணினான்.

37வது வசனத்தின் படி அப்னேரின் கொலைக்கும், தாவீதுக்கும் எந்தத் தொடர்புமில்லை, என மக்கள் புரிந்து கொண்டார்கள். தாவீதின் நடவடிக்கைகளைக் கொண்டு, அவன் மீது படிந்திருந்த சந்தேக நிழலைத், தேவன் அகற்றிப் போட்டார்.

*பிதாவே, 'பழிக்குப்பழி' என்பது மிருகத்தின் குணம் என உணர உதவும். பழிவாங்குதல் உம்முடைய கிரியை என ஒப்புக் கொடுக்கஉதவும் உணர்வுகளை வெளிக்காட்ட வேண்டிய சமயத்தில் வெளிக்காட்ட அருளும். ஆமென்.*

**9**

# உதவுவதாக நினைத்து உடைத்துப் போட்டவர்கள்

*(II சாமு 4:4)*

"சவுலின் குமாரன் யோனத்தானுக்கு, இரண்டு காலும் முடமான ஒரு குமாரன் இருந்தான்: சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி யெஸ்ரயேலிலிருந்து வருகிற போது, அவன் ஐந்து வயதுள்ளவனாயிருந்தான். அப்பொழுது அவனுடைய தாதி அவனை எடுத்துக் கொண்டு ஓடிப்போனாள். அவள் ஓடிப்போகிற அவசரத்தில் அவன் விழுந்து முடவனானான். அவனுக்கு மேவிபோசேத் என்று பேர்".

யோனத்தானது மகன் எவ்வாறு ஊனமுற்றவனானான், என்று நோக்கினால் 2 காரணங்கள் தெளிவாக உள்ளன.

1. அவசியமற்ற அச்சம்
2. அறிவு இல்லாத நிலை

சவுலின் குடும்பம் போரில் கொல்லப்பட்ட போது, சவுலின் குடும்பத்தில் மீந்திருந்தவர்களைத் தாவீது அழித்துவிடுவான், என்று தாதி பயந்ததினால் இவ்வாறு நேரிட்டது. அவசரத்தினாலே நன்றாக இருந்த சிறுவனை முடவனாக்கி விட்டாள். பல வேளைகளிலே பிறரைப் பற்றி சரியாக கணிக்கத் தவறி, நன்மை செய்வதாக எண்ணி, தீமை செய்து விடுவதற்கு வாய்ப்புண்டு. நன்மை செய்யவே வாஞ்சிக்கிறோம். நன்மை செய்வதாகவே நமது பார்வையில் தெரிகிறது. ஆனால், மற்றவர்களைப் பற்றி தவறாக எடைபோட்டு செயல்பட்டதனால், அது தீமையில் முடிய வாய்ப்புண்டு.

## தேவனைப் பற்றிய அறிவு

*(லூக்கா 9:53-56)*

"அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டபோது ஆண்டவரே எலியா செய்தது போல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள்.

அவர், திரும்பிப்பார்த்து நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்''.

பலவேளைகளில் தேவனைப் பற்றிய சரியான கணிப்பு நமக்கு இருப்பதில்லை. ஆகவேதான், சீடர்கள் கேட்டனர், 'நம்மை ஏற்றுக் கொள்ளாத ஊரை அக்கினி இறக்கி அழிக்கட்டுமா?' என்றனர். ஏனெனில் அவர்களுக்குக் கர்த்தருடைய நோக்கம் புரியவில்லை தேவ ஆவியின் இயல்பு புரியவில்லை தங்களது அழைப்பைப் பற்றிய தெளிவு இல்லை.

## தலைவர்களைப் பற்றிய அறிவு

*(II தீமோ.3:10,11)*

**"நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோகியா, இக்கோனியா லீஸ்திரா பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்.." என்று** பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

நம்மை நடத்துகிற தலைவர்களைப் பற்றி, நமக்குச் சரியான அறிவு இல்லை. அவர்களது உண்மையான குணங்களை நாம் அறிந்துகொள்வதில்லை. அவசரப்பட்டு விபத்துண்டாக்கி, சிறுவனின் கால்களை உடைத்துப் போட்டாளே தாதி. காரணம், தாவீதின் இயல்புகள் - குணங்கள் பற்றிய அறிவு அவளுக்கு இல்லாமல் இருந்ததே.

எனது தலைவர் இவ்வாறு தான் சிந்திப்பார். என்னை நடத்துகிறவரின் கண்ணோட்டம் இப்படித்தான் இருக்கும். அவரது மனப்பான்மை எப்படி இருக்கும் என்ற தெளிவு நமக்கு அவசியம்.

நம்மை நடத்துகிறவர்களுக்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும். அவர்கள், அவர்களது தலைவர்களுக்கு கணக்கு ஒப்புவிக்க

வேண்டும். அப்போது தான், நன்மை செய்வதாக எண்ணி தீமையில் சிக்கிவிட மாட்டோம்.

## உடன்படிக்கையைப் பற்றிய அறிவு

*(I சாமு 18:3)*

''யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமாவைப் போலச் சிநேகித்ததினால், அவனும் இவனும் உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்''

தாவீதுக்கும், யோனத்தானுக்கும் இடையேயிருந்த ஆழமான அன்பு, அவர்களுக்கு இடையே ஏற்பட்டிருந்த உடன்படிக்கை இவற்றை தாதி அறியாதிருந்தாள். தாவீது யோனத்தானுக்கு ஆணையிட்டுக் கொடுத்திருந்தான் 'நான் ஒரு போதும் உனது குடும்பத்தை கருவறுக்கமாட்டேன் என்று. தாதியின் நோக்கம் நல்லதாக இருந்தது. ஆனால், அரை குறையான அறிவு அவளது முயற்சியைக் கெடுத்துப் போட்டது. உதவி செய்வதாக ஓடிப்போய் மேவிபோசேத்தின் இருகால்களையும் உடைத்துப் போட்டாள். உதவுவதாக எண்ணி, மற்றவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் நிற்கவோ, நடக்கவோ முடியாதபடி செய்துவிட்டவர்கள் உண்டு.

## அவசியமற்ற அச்சம்

தேவையற்ற பயம் நமக்குள் உருவாவதற்குக் காரணம், தகவலின் முழுப்பகுதியையும் அறியாது, தகவலின் ஒரு பகுதியை மட்டும் அறிந்ததே. அதனால், பாதுகாப்பற்ற உணர்வு எழுகிறது. ஒரு கோணத்தில் மட்டுமே உண்மையை அறிந்து - ஒரு பக்கத் தகவல்களை மட்டுமே அறிந்து, இன்னொரு பக்கத் தகவலை அறியாது - முழுத்தகவலும் அறிந்ததாக நினைக்கும் போது அல்லது செயல்படும்போது பிரச்சனைகள் ஏற்படுகின்றன. நண்பர்களுக்குள்ளே, உடன் ஊழியர்களுக்குள்ளே, சபைக்குள்ளே, குடும்பத்திலே உருவாகின்ற பல பிரச்சனைகளுக்கு இதுவே காரணம். பாதியைத் தெரிந்து கொண்டு, முழுவதும் தெரிந்தது போல காட்டிக்கொள்பவர்கள் உண்டு.

இதே விதத்தில் மனிதர்களை கணித்தால் பிரச்சனைதான். ஒரு நபர் அவரது வேறொரு பிரச்சனையின் காரணமாக முகத்தைச் சோகமாக வைத்திருப்பார். நாமோ, நம்மிடம்தான் அவர் மனத்தாங்கல்

கொண்டிருக்கிறார் என்று முடிவுசெய்து விடுவோம். அத்தகைய அவசர முடிவில்தான் தாதி மேவிபோசேத்தை முடமாக்கிவிட்டாள். நிதானமின்மை நம்மை முடமாக்கி, பிறரையும் முடமாக்கி விடும், விழிப்பாகயிருப்போம்.

## இஸ்போசேத் நீதிமானா?

*(II சாமு 4:11)*

"தமது வீட்டிற்குள் தமது படுக்கையின் மேல் படுத்திருந்த நீதிமானைக் கொலை செய்த பொல்லாத மனுஷருக்கு எவ்வளவு அதிகமாய் ஆக்கினைசெய்ய வேண்டும்? இப்போதும் நான் அவருடைய இரத்தப்பழியை உங்கள் கைகளில் வாங்கி, உங்களைப் பூமியிலிருந்து அழித்துப் போடாதிருப்பேனோ என்று சொல்லி," தனது எதிரியாகிய இஸ்போசேத்தை தாவீது நீதிமான் எனக் குறிப்பிடுகிறான். அவன் எதிரிதான். அவன் உயிரோடிருந்தால் இன்னும் போர் தொடரக்கூடும். தாவீதின் அரசாட்சி பலப்பட முடியாது. எந்த அடிப்படையில் இஸ்போசேத்தை நீதிமான் எனத் தாவீது அழைத்திருப்பான்.

'தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படாதவன் தன்பக்கத்து நியாயங்களை எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படாதவன், அவன் தவறு செய்தவனாக இருந்தாலும், அவன் நீதிமான் என்று கருதப்பட வேண்டும். எதிரியாக இருந்தாலும், அவன் தன்னைத் தற்காத்துக் கொள்ள அவனுக்கு போர்க்களத்தில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அப்படி இல்லாமல் அவனைக் குறுக்குவழியில் அழிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை' என்பதே தாவீதின் கருத்து.

தாதியோ, சவுல் குடும்பத்திற்கு நன்மை செய்வதாக எண்ணி, மேவிபோசேத்தை முடவனாக்கினாள். இங்கே இரண்டுபேர், தாவீதுக்கு உதவுவதாக எண்ணி, இஸ்போசேத்தை வஞ்சகமாகக் கொன்றுபோடுகிறார்கள்.

## தோற்றத்தின் படி தீர்ப்பு செய்தல்

ரேகாபும், பானாவும், தாவீது, தங்கள் செயலுக்காக தங்களைப் பாராட்டுவான் எனத் தவறாக கணித்து விட்டார்கள். ஒருவருடைய நடை உடை பாவனையை வைத்து, அவரைக் கணிப்பது எத்தனை தவறானது. எத்தனையோ நபர்களை, பல்வேறு வேளைகளில், அவர்களின்

புறத்தோற்றத்தை வைத்தே நாம் எடைபோட்டு முடிவுசெய்யவில்லையா? ஒருவரின் முகபாவனையை வைத்து, அவர் இந்த நோக்கத்தோடுதான் வந்திருக்கிறார் என நாம் முடிவு எடுக்கிறோம். அமைதியாக இருப்பவர்களை நல்லவர்கள் என்று கண்ணை மூடிக்கொண்டு கணித்துவிடுகிறோம். இவ்வாறு மனிதர்களை தவறாகப் புரிந்துகொண்டு பிறருக்கு தீமை ஏற்படக் காரணமாகி, நமக்கும் தீமையை வரவழைக்கிற வாய்ப்புண்டு. தாவீது யாரை நீதிமான் என எண்ணினானோ, அவனை இவர்கள் சத்துரு என எண்ணிவிட்டனர்.

## உதவுவதாக இறங்கி உயிரையே இழுத்தல்

தாவீதுக்கு உதவுவதாக எண்ணி, இஸ்போசேத்தைக் கொன்றவர்கள், கொல்லப்பட்டு, கை கால்கள் தறிக்கப்பட்டு, தூக்கில் போடப்பட்டனர் *(வசனம்:12)*

ஒருவருக்கு உதவுவதற்கு முன்பு, விவரங்களை முழுவதும் அறியாமல் இறங்கிவிட்டால், நாமே மூழ்கிப்போவதற்கான அபாயமுண்டு.

ஒரு முறை, ஒரு வேதாகமப் பள்ளி மாணவர் என்னைச் சந்தித்தார். ஒரு குடிகாரனுடைய மனைவிக்காக அக்கறை கொண்டு பரிந்து பேசினார். ''அவர் தனது மனைவியை மிகவும் அடித்து கொடுமைப்படுத்துகிறார். நீங்கள் பீஹாரில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டிக்கொண்டார்.

கண்ணியில் மாட்டிக் கொள்ளாதே. இது உனக்கு தேவையில்லாத வேலை'' என்று அந்த மாணவரை எச்சரித்தேன். அந்த சகோதரிக்கு நற்செய்தியைக் கூறி தேவனுக்குள் வழிநடத்தி, அவர்களை அனுப்பி வைத்தேன்.

அந்த மாணவர், இன்னொரு போதகரிடத்திலும் போய் ஆலோசனை கேட்டார். நான் கூறின அதே எச்சரிப்பை அவரும் கூறினார். ஒரு மாதம் கழித்து, ஒரு கூட்டத்தின் போது, அந்த மாணவரும், சகோதரியும் மறுபடியும் என்னை சந்தித்து, 'நாங்கள் இருவரும் திருமணம் செய்வதாக இருக்கிறோம்' என்றனர். அந்த மாணவர் என்ன நினைத்தார்? 'நான் பெரிய போதகராக அழைக்கப்பட்டவன். ஆகவே, அந்த சகோதரியின் மீது அக்கறை கொண்டு ஏதாவது செய்யட்டும்'

**ஆனால், இன்னொருவரின் மனைவியை மணம் செய்யத் துணிந்ததோடு, இறுதியில் அந்த இருவரும் விஷம் அருந்தி மடிந்தும் போனார்கள்.**

**எல்லோருக்கும் நாம் உதவி செய்ய முடியாது. உதவி செய்ய நாம் அழைக்கப்பட்டவர்கள்தான். ஆனால், தேவநடத்துதலைப் பெற்று அதன்படி செய்யாவிட்டால், உதவுதல் என்ற நல்ல நோக்கம், நம்மை கண்ணியில் சிக்க வைத்துவிடும்.**

***பிதாவே, உம்மைப் பற்றியும், தலைவர்களைப் பற்றியும், மனிதர்களைப் பற்றியும் தெளிவான அறிவைத் தந்தருளும். நன்மை செய்வதாக எண்ணி தீமை செய்துவிடாதபடி காத்தருளும். தேவையற்ற பயம் மற்றும் அவசரத்திலிருந்தும் விடுவியும். முழு விவரத்தையும் அறியாது தேவநடத்துதல் இல்லாது உதவ முயன்று கண்ணியில் சிக்காதபடி காத்தருளும். ஆமென்.***

10

# நிரம்பி வழியும் அபிஷேகம்

(II சாமு 5:5)

"அவன் எப்ரோனிலே யூதாவின் மேல் ஏழு வருஷமும், ஆறு மாதமும் எருசலேமிலே சமஸ்த இஸ்ரவேலின் மேலும் யூதாவின் மேலும் முப்பத்து மூன்று வருஷமும் ராஜ்யபாரம் பண்ணினான்".

இப்புத்தகத்தின் முதல் 10 அதிகாரங்கள் தாவீதின் வெற்றிகளைப் பற்றி பேசுகின்றன. சவுலின் மரணம், தாவீது யூதாவுக்கு வருகை, யூதாவின் அரசனானதால் அப்னேரின் மரணம், இஸ்போசேத்தின் கொலை என உடனுக்குடன் மாற்றங்கள் நிகழ்ந்தன போலத் தோன்றினாலும் 7 1/2 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தாவீதை முழு இஸ்ரவேலும் ஏற்றுக் கொண்டது.

தேவன் நமக்கு பெரிய வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கலாம். அதை யாவரும் அறிந்திருக்கலாம். நாம் நமது திறமையைத் தொடர்ந்து நிரூபித்து வந்திருக்கலாம் என்றாலும் அனைத்து மக்களும் நம்மை அங்கிகரிப்பதற்கு சிறிது காலம் ஆகலாம் என்பதை மறக்கக் கூடாது.

'இன்னும் என்னை அங்கிகரிக்கவில்லையே.! இன்னும் என்னை நம்பவில்லையே'! என சோர்வுகள் நம்மைத்தாக்கலாம். நமது வார்த்தைகளை மற்றவர்கள் ஏற்று கீழ்ப்படிய மறுக்கும் போது, நாம் நம்பிக்கையிழந்து போகலாம். 'எனது உண்மையையும், என்னைக் குறித்த தீர்க்கதரிசனங்களையும் சபையே அறிந்திருக்கிறதே. இன்னும் ஏன் அங்கீகாரம் கிடைக்கவில்லை' என எண்ணலாம். எனக்கு தரப்படவேண்டிய ஈவு, வேறொருவருக்குத் தரப்பட்டுவிட்டதோ, என கேள்வி எழும்பலாம். ஆனால், கர்த்தர் எனக்கென்று வைத்திருப்பவைகளை, ஒருவரும் மாற்ற இயலாது.

## விரிவாகும் எல்லைகள்

தாவீதைத் தேவன் படிப்படியாகத்தான் உயர்த்தினார்.

1) முதலாவது, அவன், தனது குடும்பத்தினர் மற்றும், சகோதரர்

நடுவில் சாமுவேலால் அபிஷேகிக்கப்பட்டான்.

2) பிறகு, தனது கோத்திரத்தாராகிய யூதாவின் நடுவில், அரசனாக அபிஷேகிக்கப்பட்டான்.

3) இறுதியாக, சமஸ்த இஸ்ரவேலின் மேலும், ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான்.

அபிஷேகத்தின் அளவும், எல்லையும் இவ்வாறே பெருகும். ஒரே நாளில், தேவன் அபிஷேகத்தின் முழு அளவையும், ஒரு மனிதனுக்கு அளிப்பதில்லை. நாம் பலப்படப்பலப்படத்தான் நமது அபிஷேகத்தின் அளவு பெருகும். நாம் பயன்படுத்தப்படுகிற எல்லைகளும் பெருகும். அபிஷேகத்தின் துவக்க நிலைக்கும், எல்லைகள் விரிவாகிற கட்டத்திற்கும் இடையே பெரிய இடைவெளியுண்டு. அபிஷேகித்தபின் நம்மை தேவன் சிறிய எல்லைகளுக்குள்ளே பயன்படுத்துகிறார். அதில் உண்மையாக இருக்கும்போது பெரிய எல்லைகளுக்குள்ளே கொண்டு செல்கிறார். அபிஷேகம் பெருகப் பெருக; எல்லைகள் விரியவிரிய, தாழ்மையும் பெருக வேண்டும்.

கோதுமைப் பயிர் முற்றிய நிலையில் நிமிர்ந்து நிற்கும். நெற்பயிரோ முற்றமுற்ற தலை குனிந்து நிற்கும். கோதுமையைப் போல வணங்காக் கழுத்துள்ளவர்களாய் அல்ல தாழ்மையுள்ளவர்களாய் திகழுவோம். தாவீது பொறுப்புகள் பெருகின நிலையில், தாழ்மையிலும் பெருகினான்,என பின்னர் தியானிக்க இருக்கிறோம்.

களிமண்ணில் வெப்பம் பட்டால் அது இறுகும். மெழுகில் வெப்பம் பட்டால் அது உருகும். நிரம்பி வழிகிற நிலை வரும்போது, இன்னும் மென்மையானவர்களாக மாறுவோம். எனது கணிப்பில், தங்களது எல்லைகள் விரியும்போது 90 சதவீதம் பேர் கடினமானவர்களாக மாறிப்போகிறார்கள். 10 சதவீதம் பேர்தான் மென்மையிலே பெருகுகிறார்கள்.

'ஆண்டவரே பல பொறுப்புகள், பல நபர்கள் என் கையில்' தரப்பட்டாலும், நான் பழைய மென்மைத் தன்மையை இழக்காதபடி காத்தருளும். அவ்வாறு நான் இழக்க நேரிட்டால், பெருக்கத்தை என்னை விட்டு எடுத்துப்போட்டு விடும்' என நான் ஜெபிப்பதுண்டு.

## வசமாகும் கோட்டைகள்

*(II சாமு 5:6)*

**''தேசத்திலே குடியிருக்கிற எபூசியர் மேல் யுத்தம்பண்ண ராஜாவானவன் தன் மனுஷரோடே கூட எருசலேமுக்குப் போனான். அவர்கள் இதிலே பிரவேசிக்க; தாவீதினால் கூடாது என்று எண்ணி, தாவீதை நோக்கி நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை: குருடரும் சப்பாணிகளும், உன்னைத் தடுப்பார்கள் என்று சொன்னார்கள்.**

'எபூசிரியரின் குருடருக்கும், சப்பாணிக்கும் இருக்கிற பெலன் கூட தாவீதுக்கு இல்லை' என்று கூறக்கூடிய அளவுக்கு, எபூசியர் பெலம் வாய்ந்தவர்கள். அப்படிப்பட்ட பலசாலிகள் காவல் நிற்கிற கோட்டையைப் பிடிக்கும்படி, தேவன் தாவீதை அனுப்புகிறார்.

யோசுவாவின் நாட்களில் துரத்தப்பட வேண்டிய எபூசியர் இன்னும் விரட்டியடிக்கப்படவில்லை. சவுலின் காலத்திலும் விரட்டியடிக்கப்படவில்லை. அப்படிப்பட்டவர்கள் நடுவிலே எபிரோனிலே தங்கும்படி, தேவன் முன்னதாகத் தாவீதை அனுப்பினார். பல வேளைகளில் நாம் எண்ணுகிறோம், 'ஆண்டவர் நம்மை ஓர் இடத்திற்கு அனுப்புவதற்கு முன்னமே அங்கு எல்லாவற்றையும் சரி செய்து விடக்கூடாதா?'' புறம்பான நிலைகளின் அடிப்படையில், தேவன் நம்மை எங்கு அனுப்புகிறார் என்று முடிவுசெய்யக் கூடாது. 'எல்லாம் சரியாய் இருந்தால்தான் நான் அங்கு செல்வேன்' என்று கூறுவது தேவ நடத்துதலுக்கு தடையாகிவிடும்; தேவ சித்தத்தையும், தேவ வல்லமையையும் புரிந்து கொள்ள முடியாத நிலைக்கு ஆளாக்கிவிடும்.

சிலவேளைகளில், கோட்டையின் கதவுகள், பூட்டிய கதவுகளாக, பலம்மிகுந்த கதவுகளாக, மகாப்பெரிய கதவுகளாகவே தோன்றும். ஆனால் கர்த்தர் நம்மை அனுப்பினால், நாம் அதைப் பிடித்துவிட முடியும்.

*(II சாமு. 5:7,8)*

**''ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்: அது தாவீதின் நகரமாயிற்று.**

**எவன் சாலகத்தின் வழியாய் ஏறி, எபூசியரையும் தாவீதின் ஆத்துமா பகைக்கிற சப்பாணிகளையும், குருடரையும் முறிய அடிக்கிறானோ, அவன் தலைவனாகயிருப்பான் என்று தாவீது**

அன்றைய தினம் சொல்லியிருந்தான்; அதனால் குருடனும் சப்பாணியும் வீட்டிலே வரலாகாது என்று சொல்லுகிற துண்டு''.

தேவ நடத்துதலை நாம் தெளிவாகப் பெற்றிருந்தால், கடினமான கோட்டைகளும், மிக எளிதாக நம் வசமாகும். சீயோனைப் பிடித்து, அதற்கு தாவீதின் நகரம்' என பேரிடும் அளவுக்கு தாவீதின் புகழ் உயர்ந்தது.

## புறசாதிகளைப் போல் பெண்சாதிகளைப் பெருக்கினான்

*(II சாமு 5:12,13)*

"கர்த்தர் தன்னை இஸ்ரவேலின் மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்த போது அவன் எப்ரோனிலிருந்து வந்த பின்பு, எருசலேமில் இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொண்டான்..."

நாம் கற்றுக்கொள்ள வேண்டிய எச்சரிப்பின் சத்தியமிது. தாவீது விருத்தியடைந்து கொண்டே போனான். கர்த்தர் அவனோடே இருந்தார். பல வேளைகளில் எதைச் செய்தாலும் கர்த்தர் என்னோடு இருப்பார்' என்ற தவறான கருத்து, நமக்குள் உருவாகிவிடுகிறது. கர்த்தர் என்னோடே இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஆனால், அதையே தன்னிச்சையாக மனம் போன போக்கில் செயல்படுவதற்கான சாதகமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.

தாவீது இவ்வாறு செய்ததன் காரணமென்ன? தன்னைப் பார்த்தான்: சுற்றிலும் உள்ள ராஜ்யங்களைப் பார்த்தான்; அவற்றின் ராஜாக்களைப் பார்த்தான். அவர்களுக்குப் பல மனைவியரும், மறுமனையாட்டிகளும் இருந்தனர். ராஜா என்றாலே மனைவிகளும் மறுமனையாட்டிகளும் அதிகம் இருக்க வேண்டும், என்று தீர்மானித்தான். புறசாதி ராஜாக்களிடம் கற்றுக் கொண்ட பாடம்: இது எதிலே போய் முடிந்தது. தகப்பன் 8 அடிபாய்ந்தால், மகன் 16 அடி பாய்வது என, சாலமோன் 300 மனைவியரை மணந்து கொண்டதில் போய் முடிந்தது. பல வேளைகளில் நாம் நினைக்கிறோம் 'தேவ மனிதன் செய்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கும். கர்த்தர் அவனோடிருக்கிற படியால், அவர்தான் அவனை அவ்வாறு செய்யச் செய்கிறார்.' இந்த தவறான அபிப்பிராயத்துக்கு, தேவன் நம்மை விலக்கிக் காப்பாராக.

## அதே இடம், அதே எதிரி ஆனால் வெல்வதற்கு வேறு முறைகள்

*(II சாமு. 5:18,19,22,23,24)*

**பெலிஸ்தரோ வந்து ரெப்பாயீம் பள்ளதாக்கிலே பரவியிருந்தார்கள். பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா? அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா? என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது கர்த்தர்: போ, பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக் கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார்.**

**பெலிஸ்தர் திரும்பவும் வந்து, ரெப்பாயீம் பள்ளதாக்கிலே இறங்கினார்கள். தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும் போது சீக்கிரமாய் எழும்பிப் போ: அப்பொழுது பெலிஸ்தியரின் பாளையத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்.**

முதல் முறை பெலிஸ்தர் படையெடுத்தனர். தாவீது தேவனிடம் விசாரித்தான். தேவன் அவனைப் போகச் சொன்னார் போனான்: வெற்றிகிட்டியது மீண்டும் அதே பெலிஸ்தர் அதே ரெப்பாயீம் பள்ளதாக்கிலே வந்து களத்தில் நிற்கின்றனர்.

அதே எதிரி; அதே இடம்; நாமாக இருந்திருந்தால், ஏற்கனவே தேவன் சொன்னாரே. ஏற்கனவே தேவன் வெற்றியும் தந்தாரே. மறுபடியும் தேவனிடம் விசாரியாமல், முதன் முறை கடைப்பிடித்த போர்முறைகளை மறுபடியும் கடைப்பிடித்திருப்போம். ஆனால், தாவீது அப்படி செய்யாததற்காக தேவனைத் துதிக்கிறேன். தேவன் இம்முறை போர் முறைகளை மாற்றுகிறார். ஒரே எதிரியாக இருக்கலாம். அதே இடமாக இருக்கலாம். ஆனால், மறுபடியும் போரிட அவசியம் ஏற்படும்போது, மறுபடியும் தேவனின் பாதத்திற்கு செல்லவேண்டியது அவசியம். தேவனின் அப்போதைய ஆலோசனைகளைப் பெற்று செயற்படுத்த தயாராக வேண்டும்.

'சென்ற கூட்டத்தை இப்படி நடத்தினேன். ஆகவே, இந்தக் கூட்டத்தையும் அப்படியே நடத்துவேன்' என்று கூறுவது தேவநியமம் அல்ல. தேவ பிள்ளைகளுக்கு உகந்ததும் அல்ல. ஆவியானவரின் ஆலோசனையை ஒவ்வொரு அடியிலும் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

தேவன் புறப்படுகிற வரை காத்திருக்கச் சொன்னார். முசுக்கட்டைச் செடியின் இரைச்சலைக் கேட்கிறவரை காத்திருக்கச் சொன்னார். சத்துரு நெருக்கலாம். ஆனால் நாம் அவசரப்பட்டு விடக்கூடாது. தேவன் நமக்கு கேட்கக் கூடிய் காதுகளைத் தருவாராக.

தாவீது முழு இஸ்ரவேலுக்கும் அரசனாகியாயிற்று. சீயோன் கோட்டையையும் பிடித்து நகரமாக உருவாக்கியாயிற்று. தேவன் கூறின வாக்குகளெல்லாம் நிறைவேறிவிட்டன. தாவீது ஸ்திரமான நிலையை அடைந்துவிட்டான். இனி தேவ வழிநடத்துதலுக்கு அவசியமில்லை, என்று அவன் எண்ணவில்லை. தொடர்ந்து பெலிஸ்தியர் அவனுடன் போரிடவருகின்றனர்; பல வேளைகளில் பழைய வெற்றிகளிலேயே தேங்கி, அவற்றையே சார்ந்து விட வாய்ப்புண்டு. தினந்தோறும் புதிய புதிய வெற்றிகளைப் பெற வேண்டியது அத்தியாவசியம். இன்றைக்கு இப்பொழுது இந்த சூழ்நிலையிலே சத்துருவை எதிர்ப்பதற்கு தேவன் எனக்கு காண்பிக்கின்ற வழி என்ன? என்று நாம் அறிந்து முன்னேறும்போது புதிய வெற்றிகளை அடைய முடியும்.

## 'செத்த சிங்கத்தைப் பார்க்கிலும் உயிருள்ள நாய் வாசி'

பலவேளைகளில் செத்த சிங்கத்தை வைத்துக் கொண்டு; சிங்கத்தைக் கொன்று விட்டேன். சிங்கத்தைக் கொன்று விட்டேன்' என்று மார்தட்டுவது பயன்தராது. மறுபடியும் மறுபடியும் எத்தனை முறை தேவனிடத்தில் போய் ஆலோசனை கேட்டாலும், அவர் சலித்துப் போக மாட்டார். மனிதர்களிடத்தில் அவ்வாறு திரும்பத்திரும்பக் கேட்டால் சலிப்படைவார்கள்: எரிச்சலடைவார்கள்: நம்மைத் துரத்திவிடுவார்கள். தேவன் நம்மிடம் களைத்துப்போகாதவர்.

தாவீது, அபிஷேகத்தின் அளவு பெருகினாலும், எல்லைகள் விரிவடைந்தாலும், தேவனிடத்தில் ஆலோசனையைக் கேட்டுப் பெறுவதில் பின் தங்கவேயில்லை.

*பிதாவே, உம்முடைய வேளைவரை காத்திருக்க கிருபை தாரும் 'படிப்படியாக எங்களது எல்லைகளை விரிவாக்குகிறவர் நீர்' என உணர உதவும். 'நீர் எங்களை அனுப்பினால் வெண்கலக் கதவுகளும் நொறுங்கிவிடும்' என்று அறிய அருள்புரியும். உம் அபிஷேகம் எங்கள் மேல் இருக்கிறது என்பதை தன்னிச்சையான செயலுக்குச் சாதகமாக்காதபடி எங்களைத் தடுத்தருளும். அதே எதிரி – அதே இடம் என்றாலும், ஒவ்வொரு முறையும், உமது ஆலோசனையைப் பெற்று, புதிய வெற்றியைப் பெற்றுக் கொள்ள பலப்படுத்தும். ஆமென்.*

11

# நம்மீது மட்டும் முழு கண்டிப்பு நல்மாதிரியாக்கவே

40 ஆண்டுகள் சவுலின் ஆட்சியில், உடன்படிக்கை பெட்டி எண்ணப்படவில்லை. சவுல் ஆவிக்குரியவனாக விளங்கவில்லை. அவன் தேவனைத் தேடவில்லை. மக்களது பொருளாதாரத்தை மட்டுமே வளப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டான். பொருளாதாரத்தை மையப்படுத்துகிற பொதுவுடமை வாதம் (Socialism) போன்ற பாணியில் தான் அவனது ஆட்சி அமைந்திருந்தது.

தாவீதோ, தனது ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டவுடனே, எடுத்த முதல் நடவடிக்கை, தேவனது உடன்படிக்கைப் பெட்டியை தேடினதுதான். இவ்வுலகில் இரண்டு விதமான மனிதர்கள் உண்டு.

1) 'தேவன் ஏன் என்னை உயர்த்தினார்' என்று புரிந்துகொள்ளாமல், தான் மட்டும் அனுபவித்துக் கொண்டிருப்போர்.

2) தேவன் தன்னை ஆசீர்வதித்ததன் நோக்கத்தையும், காரணத்தையும் புரிந்து கொண்டு தேவனைச் சார்ந்து வாழ்வோர்.

முதல் பிரிவினர், தான் ஆசீர்வதிக்கப்பட்டது யாரால்? எதற்காக? என்பவற்றை மறந்துவிட்ட, தன்னலக்காரர்கள். இப்பிரிவினருக்கு சவுல் நல்ல உதாரணம்.

இரண்டாம் பிரிவினர், தான் உயர்த்தப்பட்டது எதற்காக என்பதை கண்டுபிடித்து, அதற்கேற்றாற் போல வாழுவோர். இவர்களுக்கு தாவீது ஏற்றதோர் எடுத்துக்காட்டு.

## ஆசீர்வாதம், தேவனது முத்திரைக்கு அடையாளமல்ல

**(II சாமு. 6:3)**

"தேவனுடைய பெட்டியை ஒரு புது ரதத்தின் மேல் ஏற்றி, அதை கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கொண்டு வந்தார்கள்."

தாவீதின் நோக்கம் சரியாக இருந்தது. அதை நிறைவேற்ற அவன் கையாண்ட முறையோ தவறாகயிருந்தது. நோக்கம் சரியாக இருந்தால்

போதும், முறைகளைப் பற்றி கவலையில்லை, என்ற கருத்து தவறானது. கர்த்தர் முறைகளைப் (Methods) பற்றி அதிக அக்கறையும், கண்டிப்பும் உள்ளவராக இருக்கிறார். பெலிஸ்தியர் ஒரே ஒரு தடவை, அறியாமல், தேவனது உடன்படிக்கைப் பெட்டியை வண்டியில் வைத்து கொண்டு வந்ததை, அப்படியே தாவீது சுவிகரித்துக் கொண்டான்.

நாமும் ஊழியத்திலே, உலகத்தின் முறைகளைக் கையாண்டு விடுவதற்கு வாய்ப்புகள் உண்டு. வியாபாரத் தந்திரங்களையும் ஊழியத்திலே அறிமுகப் படுத்துவதற்கான அபாயம் உண்டு.

ஊசாவை, தேவன் அடித்து அழித்துப் போட்டார். தேவன் அவ்வளவு கண்டிப்பானவர்.

மோசேக்கு, மக்களது தாகத்தைத் தீர்க்க வேண்டும் என்ற வாஞ்சை வந்தது. தேவன், அவனைக் கன்மலையோடு பேசுமாறு கூறினார். அவனோ, கன்மலையை அடித்தான். தண்ணீர் புறப்பட்டு வந்தது. ஆனால் அவனோ கானானுக்குள் பிரவேசிக்க இயலாமல் போய்விட்டது தண்ணீர் புறப்பட்டு வந்துவிட்டதனால் - ஆசீர்வாதம் வந்து விட்டதனால், 'நாம் கையாண்ட முறை சரி' என்று அர்த்தமல்ல. 'எனது வழிமுறைகளைத் தேவன் அங்கிகரிக்கிறாரா? தேவன் அவற்றின் மீது முத்திரை போடுகிறாரா?' என்று அடிக்கடி நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

தாவீது, தனது தவறை உணர்ந்து கொண்டான். தேவ சமூகம் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் என்றும், சரியான வழிமுறையைக் கையாண்டிருந்தால் தேவகோபம் எழுந்திருக்காது என்றும் அறிந்து கொண்டான். எனவே, செய்த தவறைத் திருத்திக் கொண்டான். திருத்தப்பட்ட மனிதனின் ஆனந்தம் பல மடங்காகிறது. தன் முழுப் பெலத்தோடும் கர்த்தரைப்பாடி, நடனம் பண்ணினான்.

## ஆண்டவர் அடிப்பது, அளவு கோலாக்கவே

*(II சாமு 6:8,9)*

''அப்பொழுது கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு அந்த ஸ்தலத்திற்கு இந்நாள் மட்டும் வழங்கி வருகிற பேரேஸ் ஊசா என்னும் பேரிட்டான்.

தாவீது அன்றைய தினம் கர்த்தருக்குப் பயந்து கர்த்தருடைய பெட்டி என்னிடத்தில் வருவது எப்படியென்று சொல்லி''

தாவீதின் விசனத்திற்குக் காரணமென்ன? 40 ஆண்டுகளாக யாரும் தேடாத உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வர

முற்பட்டேன்; கர்த்தர் இப்படி செய்து விட்டாரே! என்ற வேதனை.

கெத்சமனே தோட்டத்தில், பேதுருவுக்கும் அத்தகைய எண்ணம் வந்திருக்கும், பேதுரு, யோவான், யாக்கோபு மூவரை இயேசு தன்னோடு ஜெபிக்க அழைத்துச் சென்றார். மூவருமே தூங்கி விட்டனர். ஆனால், தேவன் பேதுருவை மட்டும்தான் கடிந்து கொண்டார். 'மற்ற இருவரையும் ஒன்றும் சொல்லவில்லையே. அவர்கள் தூங்குவது இவர் கண்ணுக்குத் தெரியவில்லையா? என்று பேதுரு எண்ணியிருக்கக்கூடும்.

தேவன் என்னிடத்தில் மட்டும் ஏன் இவ்வளவு கண்டிப்பாக இருக்க வேண்டும்? மற்றவர்கள் என்னென்னவோ தவறுகள் செய்கின்றனர். அவர்களைத் தண்ணீர் தெளித்து விட்டுவிட்டாரா? என்னை மட்டும் உடனுக்குடன் 'நறுக்'கென குட்டி விடுகிறாரே ஏன்? தேவன் தாவீதைத்தான் எல்லா ராஜாக்களுக்கும் முன்மாதிரியாக முன்னோடியாக அளவு கோலாக வைத்தார். ''தாவீதைப் போல கர்த்தருடைய பார்வைக்கு நலமானதைச் செய்தான்'' அல்லது ''தாவீதின் வழிகளில் நடக்கவில்லை'' என்றுதான் பின்வரும் ராஜாக்களைப் பற்றி வேதம் உரைக்கிறது. தாவீதை அளவுகோலாக வைத்துத்தான் பின்வரும் ராஜாக்களைக் கர்த்தர் நடத்தப்போகிறார். ஓர் அடி அளவுகோலே 11 அங்குலங்கள் இருந்தால், அதைக் கொண்டு அளக்கப்படுவதெல்லாம் 8 அங்குலங்கள் அல்லது 7 அங்குலங்கள்தான் தேறும்.

தாவீதிற்கு இது புரியத் துவங்கியவுடன் பயந்தான். ஆதிச் சபையிலே அனனியாவும், சப்பீராளும் மாய்மாலம் பண்ணியவுடனே செத்து விழுந்தார்கள். இன்றைக்கு இப்படி கர்த்தர் செய்தால், நாம் ஒருவர் கூட உயிரோடு மிஞ்ச மாட்டோம். அப்படியானால், தேவன் தனது தரத்தின் நிலையை (Standard) தளர்த்திக் கொண்டாரா? இல்லவேயில்லை.

நீங்கள் கிறிஸ்தவர்களே இல்லாத ஒரு புதிய பகுதியில் ஊழியம் செய்யும்போது உங்களைக் குட்டி, அடித்து, நொறுக்கி நேராக்கி சரியாக வைத்திருப்பார். அப்போதுதான், கிறிஸ்தவர்கள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள். ஆகவே, முதலில் போனவர்களுக்கு, முன்னோடிகளுக்கு மிகவும் கண்டிப்பு. பின்னால் வருபவர்களுக்கு அவ்வளவு கண்டிப்பு காட்டுவதில்லை. 'என்ன இருந்தாலும், அவரைப் போல இல்லை' என்றோ, 'அவரைப் போலவே இவர் இருக்கிறார்' என்றோ அந்த நபரை முன்மாதிரியாக வைக்க, தேவன் விரும்புகிறார். விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று கூறினவர், கடுமையைக் காட்டுகின்றார்.

*(IIசாமு 6:20-22)*

**"தாவீது தன் வீட்டாரை ஆசீர்வதிக்கிறதற்குத் திரும்பும்போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்கு எதிர்கொண்டு வந்து, அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறது போல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்து போட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.**

**அதற்குத் தாவீது மீகாளைப் பார்த்து, "உன் தகப்பனைப் பார்க்கிலும்; அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும் என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்.**

**இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன் அப்படியே நீ சொன்ன பெண்களுக்குங் கூட மகிமையாய் விளங்குவேன் என்றான்."**

தேவ சமூகத்தைக் குறித்து கவலைப்படாத சவுலின் மகள் மீகாள்; தேவசமூகத்தில் ஆடிப் பாடுகிற தாவீதைக் கேலிசெய்கிறாள். தாவீது வெளியே ஜனங்களை ஆசீர்வதித்தான். தனது குடும்பத்தை ஆசீர்வதிக்கிறதற்கு வரும்போது, வீட்டிலே அவனுக்கு வரவேற்போ, அங்கிகாரமோ கிடைக்க வில்லை. பல தேவ ஊழியருடைய வாழ்விலே இவ்விதம் நடப்பதுண்டு. அவர்களது குடும்பத்திலே ஆசீர்வாதம் இல்லாமற்போக வாய்ப்புண்டு.

நாம் மற்றவர்களை அற்பமாக எண்ணுவது எளிது. ஆனால், நமது பார்வைக்கு நாமே அற்பமாக மாறுவது எளிதல்ல. அது தாழ்மை. தேவன் உயர்த்துவதற்கு முன்பாக தாழ்மையாக இருப்பது முக்கியமல்ல. உயர்த்தப்பட்டபிறகும், தாழ்த்துவதுதான் அரிது.

என் குடும்பத்திலே என்னை ஏற்றுக் கொள்ளாத போது, நான் இன்னும் என்னைத் தாழ்த்துவேன் என தாவீது நடந்து கொண்டான். நாமாக இருந்தால் 'வெளியிலே என்னைப் பற்றிக் கேட்டுப்பார். அப்போதுதான் என் அருமை பெருமை உனக்குத் தெரியும்' என்று கூறுவோம்.

'என்னிடத்தில் வந்து கற்றுக் கொள்ளுங்கள். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்' என இயேசு கூறினார். என்னை மற்றவர்கள் அற்பமாக எண்ணும்போது, அவமதிக்கும் போது, நான் இன்னும் தாழ்மையாக நடந்து கொள்ளுவேன், என்று கூறுவோம்.

என் பார்வைக்கு நான் அற்பனாக இருந்தால்தான், பிறரது பார்வையில் மகிமையாக விளங்கமுடியும். பல வேளைகளில், இதை நாம் தலைகீழாக சிந்திக்கிறோம்.

மற்றவர்களுக்கு மகிமையாக மாற ஒரு வழி, எனது பார்வையிலே நான், எனக்கு அற்பமாக காணப்பட வேண்டும். அந்த நோக்கத்தோடுதான் தாவீது தேவசமூகத்தில் நடனம் பண்ணினான்.

பிதாவே, என்னை நீர் ஆசீர்வதித்ததன் நோக்கத்தைப் புரிந்து, அதற்கேற்றபடி வாழ, எனக்கு உதவும். எனது நோக்கம் மட்டுமல்ல ஆண்டவரே, எனது வழிமுறைகளும், உமக்குப் பிரியமாக இருக்க அருள்புரியும். என்னை நீர் அதிகக் கண்டிப்புடன் நடத்துவது, என்னை பிறருக்கு முன்மாதிரியாக்கவே, என்று அறிந்து துதிக்கிறேன். எனது பார்வையில் நான் அற்பமாக இருந்து, பிறருக்கு மகிமையாக மாற துணைபுரியும். ஆமென்.

12

# நமது வாஞ்சையையோ, நமது வார்த்தைகளையோ தேவன் திருத்தியமைத்தால்...

## எண்ணங்களைப் பகிர்வது எவரிடம்?

*(IIசாமு 7:2)*

**"ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும் போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே என்றான்".**

'நமது இதயத்திலுள்ள வாஞ்சைகளையும், எண்ணங்களையும் பகிர்ந்து கொள்வதற்கு, நாம் தெரிந்து வைத்திருக்கிற நபர் யார், என்பது மிக முக்கியம். பல வேளைகளில், நாம் சொல்வதற்கெல்லாம் தாளம் போடுகிற நபரைத் தெரிந்து கொள்கிறோம். 'ஆமாம்' போடுகிற ஆசாமியிடம் நமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.

அந்த நபர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும். தேவ ஆலோசனைகளை நமக்கு எடுத்துரைக்கத் தயங்காதவராக, தேவனுடைய சத்தத்தைக் கேட்கக் கூடியவராக, தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடியவராக, 'நீர் தேவாலயம் கட்ட மாட்டீர்' என்று எதிர்மறைப் பதிலாக இருந்தாலும் தெளிவாக அறிவிக்கிறவராக, மொத்தத்தில் நாத்தான் தீர்க்கதரிசியைப் போல் இருக்க வேண்டும்.

## ஆலோசனைக்காரர் அவசியமா?

*(IIசாமு 7:3)*

**"அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி: நீர் போய் உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; கர்த்தர் உம்மோடு இருக்கிறாரே என்றான்."**

தாவீதுக்கு "தேவாலயம் கட்ட வேண்டும்" என்ற பாரமும் வாஞ்சையும் உருவானவுடனே, அவன் அதைச் செயற்படுத்த துவங்கியிருக்க முடியும். கர்த்தர் அவனோடே இருந்தார். சமஸ்த

இஸ்ரவேலும் அவனை அங்கிகரித்திருந்தது. சத்துருக்களெல்லாம் அடக்கப்பட்டு விட்டார்கள். கண்ணசைத்தால் காரியங்களை நிறைவேற்றுவதற்கு அதிகார பலமும், ஆட்பலமும் மண்டிக் கிடந்தன. ஆனால், தாவீது அவ்விதம் செய்யவில்லை.

பொதுவாக மனிதன், தனக்கு வசதிவாய்ப்பும், செல்வாக்கும் இருக்கும் போது, ஆலோசனைக்காரரைத் தேட மாட்டான். சாதாரண நிலையில் இருக்கும் போது, அல்லது பிரச்சனைகள் எழும்போது ஆலோசனைகூறுவோரை தேடுவதுண்டு. ஆனால், உயர்த்தப்பட்டு, எல்லாம் சாதகமாக இருக்கும்போது மற்றவர்களது ஆலோசனையை நாடுவது அரிது.

தாவீதோ, நாத்தான் தீர்க்கதரிசியின் ஆலோசனையை நாடுகிறான். 'இவரென்ன எனக்கு ஆலோசனை கூறுவது' என்ற எண்ணம் பலருக்குள்ளும் எழுவதுண்டு.

*(நீதி 11:14)*

**"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள். அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்."**

அதே நேரத்தில் போகிறவர்கள், வருகிறவர்கள் எல்லாருடைய ஆலோசனையையும் கேட்டு, குழம்பிப் போனவர்களுமுண்டு. 'உள்ளதும் போச்சு' என்கிற அளவுக்கு ஆலோசனை சொல்லியே குழப்புகிறவர்களும் உண்டு. நமக்கு ஆலோசகர்கள் தேவை. ஆனால், அவர்கள் ஏற்ற நபர்களாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய முதிர்ச்சியுடையவர்கள், தேவனோடு நடக்கிறவர்கள், நலமானதை தெளிவாகக் கூறக்கூடியவர்கள் நமக்கு ஆலோசகர்களாக இருக்க வேண்டும்.

'நானே எல்லாவற்றையும் தனியாக சாதித்துவிடுவேன். எவருடைய ஆலோசனையும் எனக்கு அவசியமில்லை; என்று கூறக்கூடியவர் தேவன் மட்டுமே. அல்லேலூயா!

'அவருக்கு ஆலோசனைக்காரனாய் இருந்தவன் யார்?' என்று வேதாகமம் கேட்கிறது. ஆனால், ஏசாயா 6-வது அதிகாரத்தில், தேவன் யாரிடத்தில் ஆலோசனை கேட்கிறார்? ஏசாயாவினிடத்தில் 'யாரை நமது காரியமாய் அனுப்பலாம்? என யோசனை கேட்கிறார். 'ஏசாயா! கூறு. நான் உன்னைத் தொட்டிருக்கிறேனே! நான் உன்னை அபிஷேகித்திருக்கிறேனே சொல், நமது காரியமாய் யாரை

அனுப்பலாம்? திரித்துவ ஆள்தத்துவங்களுக்குள் மட்டும் இந்த உரையாடல் நடந்திருக்குமானால், இது ஏசாயாவிற்கு தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏசாயாவும் பதில் உரைத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

5 அப்பம் 2 மீனைக் கொண்டு 5000-க்கும் அதிகமானோரை இயேசு அற்புதமாக உணவினால் நிரப்பிய போது, அதற்கு முன்பு, தனது சீஷர்களிடத்தில் கலந்தாலோசித்தார். தேவனே கலந்தாலோசிக்கும்போது நாம் எம்மாத்திரம்?

தேவத்திட்டத்திற்கு தங்களை ஒப்புவித்தவர்கள், நமக்கு ஆலோசகர்களாகத் தேவைப்படுகிறார்கள். இதுவரை நமது வாழ்விலே அப்படிப்பட்டவர்கள் இல்லையென்றால், உடனே அத்தகைய ஆலோசகர்களைக் கண்டுபிடித்து, நியமித்துக் கொள்வோம்.

## எனது எல்லா ஊழிய வாஞ்சைகளும், நானே செயல்படுத்துவதற்கா?

நமது மனதிலே, தேவ ராஜ்யத்தைக் கட்டுவது தொடர்பான மேன்மையான எண்ணங்கள் தோன்றலாம். ஊழியத்தைப்பற்றிய பலவிதபாரங்களும், வாஞ்சைகளும் நமது இதயத்தில் கொழுந்து விட்டு எரியலாம். நற்செய்தி பரவுவதற்கு பலதிட்டங்களால் நமது உள்ளம் நிரம்பி வழியலாம். ஆனால், நாம் கேட்க வேண்டிய மிக முக்கியக் கேள்வி தேவன் என்னைக் கொண்டே இவற்றை செய்ய சித்தங் கொள்கிறாரா? என்பதுதான்.

ஒரு வேளை, 'நான் இவற்றிற்காக ஜெபிக்க வேண்டும்' என்பதற்காக மட்டும் இந்த வாஞ்சையைத் தேவன் தந்திருக்கலாம். அதற்கு மேலே நாம் ஒன்றும் செய்ய தேவன் நமக்கு அதிகாரம் அளிக்காதிருக்கலாம்.

சில வேளைகளில், நான் ஆயத்த வேலைகளை மட்டும் செய்யவேண்டும் என்பதற்காக, ஒரு பாரத்தை தேவன் நம் இதயத்தில் வைத்திருக்கலாம். முழு வேலையையும்செய்வதற்காக, தேவன் வேறு எவரையும் நியமித்திருக்கலாம்.

அல்லது ஒரு வேலையின் ஒரு பகுதியை மட்டும் நான் செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தைத் தேவன் எனக்குள்ளே போட்டிருக்கலாம். மீதிப் பகுதி வேலையைச் செய்வது, வேறு யாருடைய பொறுப்பாகவோ, தேவனுடைய தீர்மானத்தில் இருக்கக்கூடும்.

பட்டுப் புடவை நெய்கிறதை உற்றுக்கவனித்தால், ஒரு இழை நூல் ஒரு சிறிய பகுதிக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். முந்தானையில் மட்டுமே அதற்கு பங்கு இருக்கும்.மற்றப்பகுதி முழுவதும் மற்ற நாடாக்கள் பயன்படுத்தப்படும். முந்தானையில் இருக்கிற பூ வேலைப்பாடு,புடவையின் வேறு எந்தப் பகுதியிலும் இருக்காது. அந்த பூவேலைப்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்ட நூல் இழை சில நிமிடங்கள் மட்டுமே, பயன்பட்டிருக்கும். அந்த நூல்தான் எல்லோரும் பார்க்கக்கூடிய பூ வேலைப்பாட்டில் இடம் பெற்றிருக்கும். முழு வேளையும் பயன்படுத்தப்பட்ட நூல்களோ, புடவையின் மற்றப்பகுதியில் இடம்பெற்று, மறைந்திருக்கும்.

வேறு ஒருவருக்கென்று தேவன் வைத்திருக்கிற வேலையை, நானே செய்வேன் என நாம் முற்படும் போது, அது தேவனுக்கு உகந்ததாக இருக்காது.தேவனுடைய திருவுளத்தைப் புரிந்து கொண்டு செயல்படுவது நன்று. இத்திட்டத்திலே - இப்பணியிலே எனது பங்கு என்ன? எனது எல்லை எது? என்று தெளிவு பெற்று, அதன்படி செயல்படுவதே தேவனுக்குப் பிரியமானது.

## கவுரவத்தை விட்டால்தான் கர்த்தருக்கு வாயாக முடியும்

*(II சாமு. 7:4, 5, 12, 13)*

*"அன்று ராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, அவர்: நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான்வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?*

*உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன்கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.*

*அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்."*

நாத்தான் தாவீதினிடம் 'நீர் ஆலயத்தைக் கட்டும்' என்று கூறிவிட்டு வந்து விட்டான். இரவிலே தேவன் அவனோடு பேசுகிறார். "நீ என்னைக் கேட்காமல் தாவீதுக்கு ஆலோசனை கொடுத்துவிட்டாயே.

இப்போது நீ போய் தாவீதினிடம் கூறு. நீ ஆலயத்தைக் கட்டக்கூடாது. உன் குமாரன் கட்டுவான்.''

நாமாக இருந்தால் 'கட்டும்' என்று ஆலோசனை கூறிய நானே 'கட்டாதிரும்' என்று மறுபடியும் கூறினால் எனக்கு அவமானம், எனக்கு கவுரவ பிரச்சினை; என்று தேவனிடம் வாதிட்டிருப்போம். 'நான் சொன்னதற்காக தாவீது கொஞ்சமாவது ஆலய வேலையைச் செய்யட்டும். பிறகு போய், நிறுத்தி விடுகிறேன்' என்று கூடச் சொல்லியிருப்போம்.

தீர்க்கதரிசியாக, தேவனுடைய வாயாக இருக்க வேண்டுமானால், முதலில் கவுரவத்தையும், மதிப்பையும் தூக்கி, குப்பையில் எறிய வேண்டும்.

நமது பிரச்சனையே 'எனது கவுரவம் என்ன ஆகும்' எனது மதிப்பு என்ன ஆகும்?' என்பது தான். பலர் தேவதிட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போவதற்கு இதுவே காரணம். நான் அவமானப்பட வேண்டுமா? அப்படியென்றால் இந்த ஊழியமே தேவையில்லை என்ற முடிவுசெய்வோர் பலர் உண்டு.

எசேக்கியா அரசனிடம் போய், 'அவன் ஆயுள் முடிந்து விட்டது' என்று கூறுமாறு தேவன், ஏசாயாவுக்குச் சொன்னார். ஏசாயாவும் அப்படியே செய்தான். ஆனால், எசேக்கியா அழுது ஜெபித்தபோது, முற்றத்தைக் கூட கடக்காத ஏசாயாவிடம், 'நீ மறுபடியும் போய் எசேக்கியாவிடம் கூறு. உனக்கு நான் 15 ஆண்டுகள் கூட்டித் தந்துள்ளேன்' என்றார் கர்த்தர். நாமாக இருந்தால், ''ஏன் இப்படி மாற்றி மாற்றிப் பேசுகிறீர்'' உம்மால் நான் பயப்படுகிறேன் என்று வாதிட்டிருப்போம்.

யோனாவுக்கும் இதே பிரச்சனைதான்; நீர், நினிவேயை அழிக்கமாட்டீர் என்று எனக்கு முன்பே தெரியும். அதனால் தான், ஓடிப் போனேன். என்னை விடவும் மாட்டேன் என்கிறீர். 'நினிவே அழிந்து போகும்' என்று பகிரங்கமாக அறிவித்து விட்டேன். இப்போது அழிக்கப்போகிறீரா? இல்லையா? என்று யோனா தேவனோடு போராடினான். இதனால்தான் பலர் 'கர்த்தர் சொன்னார்' என்று கூறிவிட்டு இத்தகைய நிலை வரும்போது வேறு எதையாவது சொல்லி சமாளிப்பார்கள்.

மேடையிலே, 'கர்த்தர் சொன்னார்' என்று அறிவித்து விட்டேன். இப்போது அதை மாற்றுகிறீரே என்று ஆண்டவரிடத்தில் கேட்க

வேண்டிய நிலைமை வரலாம். ஆகவே, நமது மதிப்பையும், நமது கவுரவத்தையும் தியாகம் செய்யாதவரை தீர்க்கதரிசியாக மாற முடியாது. சுய மதிப்பை - தன்மானத்தை - சுயமரியாதையைச் சிலுவையில் அறைந்தால்தான், தேவனுடைய வாயாக மாறமுடியும்.

## என் சித்தமல்ல உம் சித்தம்

தேவனது வழிநடத்துதல் நமது வாஞ்சைக்கு எதிராக இருக்கும்போது அதை ஏற்றுக்கொள்வது மிகவும் கடினம். எனக்குள்ளே பொங்கி வழிந்த விருப்பத்துக்கு முரணாக, எனக்குள்ளே பற்றியெரிந்த பாரத்துக்கு மாறாக தேவனது ஆலோசனை அமைந்தால், அதை ஜீரணித்துக் கொள்வது மிக மிக அரிது.

*(1நாளா 29:2)*

**"நான் என்னாலே இயன்ற மட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று** பொன் வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பல வருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதகம் முதலிய கற்களையும் **ஏராளமாகச் சவதரித்தேன்."**

பாரம், வாஞ்சை என்ற அளவோடில்லாமல் ஆலய வேலைக்காக அளவற்ற செல்வத்தையும் அள்ளித் தந்திருந்த தாவீதிடம், 'நீ என் ஆலயத்தைக் கட்ட வேண்டாம்' என்று கூறிவிட்டார்.

உனது கரங்கள் மிகுந்த இரத்தத்தை சிந்தியிருக்கிறது. ஆகவே, நீ ஆலயம் கட்ட தகுதியானவனல்ல, என்றார். 'கர்த்தரின் யுத்தங்களை நீர் நடத்துகிறவராமே' என்றே தாவீதைப் பற்றி மக்கள் கூறினர்.

எனது கரங்கள் இரத்தம் சிந்தியது யாருக்காக? நான் துன்மார்க்கமாக நடந்ததினாலா? கர்த்தருக்காகத்தானே. கர்த்தருடைய யுத்தங்களை நான்நடத்தியதால்தானே, என் கரங்கள் ரத்தம் சிந்தவேண்டியதாயிற்று. இதைக் காரணம் காட்டி, கர்த்தர் எப்படி என்னைத் தடுக்கலாம்? பாதி வேலையாவது என்னைக் கொண்டு செய்யக்கூடாதா? நான் சிறிதளவேனும் ஆலயக்கட்டிடத்தின்

வடிவத்தை பார்க்க முடியுமே, என்கின்ற மனப் போராட்டம் வேறு எவருக்கும் வர வாய்ப்புண்டு.

தேவன் கூறுகிற காரணத்தைப்புரிந்து கொள்வது, நமக்கு முடியாததாக இருக்கிறது. எனது காலத்திற்குப் பிறகு இது நடந்து என்ன பயன்? என் கண்கள் காண வேண்டாமா?

எனது காலத்திற்குப் பிறகு, நான் அனுபவிக்க முடியாத ஆசீர்வாதம் இருந்தென்ன பயன்? என்று கேள்விகள் எழுந்திருக்கலாம். ஆனால், தேவனது தீர்மானத்தைத் தாவீது அப்படியே தலைவணங்கி ஏற்றுக் கொண்டான்.

இரத்தம் சிந்தாத ஒரு குமாரனைக் கொண்டு ஆலயத்தைக் கட்டுவேன். ஏனென்றால் அவன் யுத்தம் செய்யப்போவதில்லை, என்று கர்த்தர் சொன்னார். என்னுடைய வைராக்கியம், வேறு எவருக்கும் இருக்காதே. நான் செய்யாவிட்டால், யார் செய்வார்கள்? என்று கர்த்தரிடம் தாவீது எதிர்த்துப் பேசவில்லை. ஏற்றுக்கொண்டான்.

## 'கிறிஸ்து உன் வீட்டில் பிறப்பார்' என்ற வாக்கைப் பெற்றான்

*(II சாமு. 7:16)*

**"உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்: உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச் சொன்னார்."**

தேவனுடைய வார்த்தைகளை, நாத்தான் மூலம் தாவீது கேட்டவுடன் தேவசமூகத்திற்கு ஓடி, தேவனைத் துதிக்கின்றான். தேவனே நீர் செய்தால் அது நன்மையானதாக, ஆசீர்வாதமானதாக, நித்தியமானதாக இருக்கும் என்று அறிக்கையிட்டான்.

தேவன் சுட்டிக்காட்டிய குறைகளை ஏற்றவன், அவர் வாக்களித்த நிறைவான நன்மைகளையும் ஏற்றுக்கொண்டான். தேவன் தாவீதின் ஆலயங்கட்டும் எண்ணத்தை நிறைவேற்ற அனுமதிக்காவிட்டாலும், அவனது வாஞ்சையையும், வைராக்கியத்தையும் பாராட்டி, ஒரு நித்திய வாக்குத்தத்தத்தை அருளினார்.

தேவனுடைய வீட்டைப் பற்றி பாரங்கொண்ட அவனது வீட்டை; ஆசீர்வதிக்க தேவன் சித்தங்கொண்டார். 'உனது வீடும், உனது ராஜ்யமும், உனது சிங்காசனமும் என்றென்றைக்கும் நிற்கும், என்ற வாக்கு கிறிஸ்து, தாவீதின் சந்ததியில் பிறந்தபோதுதான் நிறைவேறியது.

**தேவராஜ்யத்தைப் பற்றிய நமது வாஞ்சைகள், தேவனிடமிருந்து நமக்கு மேன்மையான வாக்குகளைப் பெற்றுத் தருகின்றன.**

**நான் வாஞ்சித்ததற்கே எனக்கு இவ்வளவு ஆசீர்வாதம் என்றால், எனது மகன் அதை நிறைவேற்றும்போது, எவ்வளவு ஆசீர்வதிக்கப்படுவான் என்று எண்ணிப் பார்த்தான். துதி தானாக ஊற்றெடுத்துப் பொங்கிப் பாய்ந்து வந்தது. அவனை துதிக்கும்படி உற்சாகப்படுத்த எவரும் தேவைப்படவில்லை.**

***பிதாவே, நான் யாரிடம் எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வது, யாரிடம் ஆலோசனை பெறுவது என்று வழிநடத்தும். எனது வாஞ்சைகள் நிறைவேறுவதில், நீர் என்னைப் பயன்படுத்த சித்தங்கொள்கிறீரா என்று பகுத்தறிய எனக்கு உதவும். சுயகவுரவத்தை சிலுவையில் அறைய உதவி செய்யும். எனது வாஞ்சையை, உமது திட்டத்திற்காக தியாகம் செய்ய அருள் புரியும். எனது வாஞ்சைகள், நிறைவேறாவிட்டாலும், மேன்மையான வாக்குகளைப் பெற்றுத் தருகிறதற்காக ஸ்தோத்திரம். ஆமென்.***

13

# எனது எல்லைகளில் மட்டுமல்ல, எதிரியின் எல்லைகளிலும் வெற்றி

*(II சாமு. 7:1)* ''கர்த்தர் ராஜாவைச் சுற்றிலும் இருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி, இளைப்பாறப்பண்ணின போது...''

*(8:1)* ''இதற்குப் பின்பு தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி''

*(8:2)* ''அவன் மோவாபியரையும் முறியடித்து...''

*(வ.3)* ''தாவீது அவனையும் (சோபாவின் ராஜாவையும்) முறியடித்து...''

*(வ.6)* ''சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டினார்கள்..''

*(வ:9)* ''தாவீது ஆதாதேசருடைய எல்லா ராணுவத்தையும் முறிய அடித்த செய்தியை..''

*(வ.11)* ''தாவீது ராஜா கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதியார்களிடத்திலும்..''

*(வ.14)* ''ஏதோமியர் எல்லாரும் தாவீதைச் சேவிக்கிறவர்களானார்கள்.''

தாவீதோடு போர்புரிய வந்த, அண்டை நாட்டு அரசர்கள் யாவரையும் தோற்கடித்து, விடுதலையோடு, தாவீது இளைப்பாறிக் கொண்டிருந்த போது, அவனாக வலிய போரைத்தேடிப் போய், எதிரிகளை முறியடித்தான். எனது எல்லைகளில் அமைதி நிலவுகிறது. எதிரியின் போராட்டம் இல்லை. அது எனக்குப் போதும், என அவன் வாளாதிருக்கவில்லை. எதிரி என்னைத் தொடாத வரைக்கும் எனக்கு நிம்மதி, என்று இராமல், ஏன் எதிரி நாட்டிற்குள்ளே சென்று போரை ஆரம்பிக்க வேண்டும்? தேவ பிள்ளைகள் சும்மா இளைப்பாறிக் கொண்டிருப்பதற்காக அழைக்கப்படவில்லை.

## சாலமொன் ஆலயங்கட்டும் போது, சத்துரு தலைதூக்காதிருக்க:

தாவீது எதிரிகளிடம் வலியப் போய், அவர்களை வென்று, அடக்கியதில் ஒரு நோக்கம் உள்ளது. வருங்காலத்தில் அவனது மகன் ஆலயத்தைக் கட்டும்போது, எந்த எதிரியும் அதற்கு இடையூறு விளைவிக்கக்கூடாது. ஆகவே, அடுத்த தலைமுறை வரை சத்துரு தலைதூக்காத அளவுக்கு, எழுந்திருக்க முடியாத அளவுக்கு, தனக்கு இருக்கிற சக்தியையெல்லாம் ஒன்று திரட்டிப் போராடுகிறான். 'என் தலைமுறையிலே நான் சுகமாக மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்பது போதாது. அடுத்த தலைமுறையிலும் சத்துரு தடை செய்யவேக்கூடாது' என்று எண்ணித் தாவீது முன்பைவிட தீவிரமாகப் போரிடுகிறான்.

## சத்துருவின் பிடியிலுள்ள செல்வத்தை சுதந்தரிப்போம்:

*(II சாமு 8:8,10,11,12)*

''ஆதாதேசரின் பட்டணங்களாகிய பேத்தாகிலும் பேரொத்தாயிலுமிருந்து தாவீது ராஜா மகா திரளான வெண்கலத்தையும் எடுத்துக் கொண்டு வந்தான்.

ஆதாதேசர் தோயீயின் மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக் கொண்டிருந்தபடியால் ராஜாவாகிய தாவீதின் சுகச் செய்தியை விசாரிக்கவும், அவன் ஆதாதேசரோடே யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்ததற்காக அவனுக்கு வாழ்த்துதல் சொல்லவும், தோயீ தன் குமாரனாகிய யோராமை ராஜாவினிடத்தில் அனுப்பினான். மேலும் யோராம் தன் கையிலே வெள்ளியும், பொன்னும் வெண்கலமுமான தட்டுமுட்டுக்களைக் கொண்டு வந்தான்.

அவன் கொண்டு வந்தவைகளைத் தாவீது ராஜா கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர் அமலேக்கியர் என்னும் சகல ஜாதியார்களிடத்திலும், ரேகாபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவினிடத்திலும் கொள்ளையிட்டதிலும் எடுத்து, கர்த்தருக்கு நியமித்த வெள்ளியோடும், பொன்னோடும் கூட கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணினான்.''

இன்னொரு இடத்தில் எழுதப்பட்டுள்ளது, 3250டன் தங்கத்தையும், 32500 டன் வெள்ளியையும் அவன் ஆயத்தப்படுத்தினான். அவன் சேகரித்து வைத்திருந்த ஆலயக் கட்டுமானப் பணியின் தேவைகளுக்காக சம்பாதித்து வைத்திருந்த செல்வம் எங்கிருந்து வந்தது?

மோசே ஆசரிப்புக் கூடாரத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், விலையேறப்பட்ட கற்களும் எங்கிருந்து வந்தன? இஸ்ரவேல் மக்கள் கொடுத்த காணிக்கை. அடிமையாக இருந்தவர்களுக்கு அவ்வளவு செல்வம் ஏது? எகிப்தை விட்டுப் புறப்படும் போது, எகிப்தியரிடமிருந்து கேட்டு வாங்கி வந்தது, கொள்ளையிட்டது போல ஏராளமாக கேட்டு வாங்கி வந்தார்கள். எகிப்திலிருந்து வந்த செல்வம் தேவனற்ற இடத்திலிருந்து வந்த செல்வம்தான் ஆசரிப்புக் கூடாரத்திற்குப் பயன்பட்டது.

அதே தத்துவமே தேவாலய கட்டுமானத்திற்கும் பொருந்துகிறது. சாலமொன் ஆலயங்கட்டின போது, வெள்ளியை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. வெள்ளி, கற்களைப் போல மிக சாதரணமாகக் கிடந்தது. இச்செல்வமெல்லாம் எங்கிருந்து வந்தது? போரிட்டு சத்துருக்களின் பிடியிலிருந்து, தாவீது சுதந்தரித்துக் கொண்டு வந்தது.

இன்று ஜீவனுள்ள கற்களை வைத்து, ஆத்துமாக்களை தேவ ஆலயங்களாகக் கட்டி வருகிறோம். ஆத்துமாக்கள் சத்துருவின் அதிகாரத்துக்குள் இருக்கின்றன. அவற்றை நாம் போய் சுதந்தரித்துக் கொள்ளவேண்டும். நான் ரட்சிக்கப்பட்டு விட்டேன். எனது ஆத்துமாவில் இளைப்பாறுதல் இருக்கிறது, என்பது போதாது தேவ ராஜ்ஜியம் கட்டப்பட வேண்டுமானால், சத்துருவின் கோட்டைகளுக்குள் ஊடுருவிச் சென்று ஊழியம் செய்யவேண்டும்.

**பாதுகாக்கும் தேவகரத்தை ருசிக்க, பகைவனின் முகாமுக்குள் ஊடுருவுவோம்:**

***(II சாமு.8:6,14)***

*"... தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.*

*...தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்"*

தேவனது பலத்த கரத்தைக் காணவேண்டுமானால், சத்துருவின் கோட்டைகளுக்குள் ஊடுருவிச் சென்று, போராடவேண்டும். இருக்கிற இடத்திலேயே இருந்து கொண்டு, தேவனது பராக்கிரமம் செய்யும் வலது கரத்தைக் காண்பது அரிது. எதிரியின் முகாமின் மீது துணிந்து பாயும் போதுதான் 'காக்கும் கரங்கள் உண்டெனக்கு' என்பதை கண்கூடாகக் காணமுடியும்.

## தற்காப்போடு நின்றுவிடாது, தாக்குவோம்:

நமது வாழ்விலே வருகின்ற போர்களெல்லாம், நமக்கு நன்மைகளைக் கூட்டுவதற்கும், நமது கரங்களைப் பெலப்படுத்துவதற்கும், திரள் திரளானவற்றை நாம் சுதந்தரிப்பதற்கும் தான் என்று அறிந்து கொள்வோமானால் எந்தப் போராட்டமும் நம்மை தள்ளவும் முடியாது: தாழ்த்தவும் முடியாது.

இரண்டு விதமான போராட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டியது வருகிறது.

*1)* நமது நிலைகளை தற்காப்பதற்கான போர் (Defensive)

*2)* சத்துருவின் நிலைகளை சுதந்தரிப்பதற்கான போர் (Offensive)

பல தேவபிள்ளைகள், சாத்தானிடமிருந்து தங்களைத் தற்காத்துக்கொண்டால் போதும், என கருதுகிறார்கள், அவ்வாறே செயல்படுகிறார்கள். நல்லது; ஆனால், தற்காப்பு மட்டும் வெற்றி ஆகிவிடாது. அடுத்த படியையும் நிறைவேற்ற வேண்டும். கிரிக்கெட்டிலே 'விக்கட்' மட்டும் விழாமல் பார்த்துக்கொண்டால் போதும்; ரன்கள் எடுக்க வேண்டியதில்லை' என்று யாராவது விளையாடினால் எப்படியிருக்கும்?

எனது குடும்பத்தை, எனது குழுவை, எனது சபையை, விலையேறப்பெற்ற என் ஆத்துமாவை சத்துரு தொடமுயன்றால் மட்டுமே, நான் போரிட்டு வெற்றிபெறுவேன், என்பது அரை குறை வெற்றி. சத்துருவின் பிடியில் சிக்கியிருக்கின்ற கோடிக்கணக்கான விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை சுதந்தரித்துக் கொள்வதற்கு, பிசாசின் ஆவிக்குரிய எல்லைகளுக்குள் ஊடுருவி போர்புரிவதே முழுமையான வெற்றியாம்.

*பிதாவே, அடுத்த தலைமுறைக்காகவும் சத்துருவோடு போராடக் கூடிய, பாரத்தைத் தாரும் சத்துருவின் பிடியிலுள்ள விலையேறப் பெற்ற ஆத்துமாக்களை மீட்டு, உமது ராஜ்ஜியத்தைக் கட்ட உதவிசெய்யும். உமது பலத்த கரத்தைக் காணக்கூடிய இடத்திலே நான் செயல்படட்டும். தற்காப்புக்காக மட்டும் போராடாமல், தாக்குதலுக்காகவும் போராடி, பிசாசின் கோட்டைகளை உமக்காக வென்றெடுக்க வல்லமைதாரும். ஆமென்.*

14

# செத்தநாயைப் போன்ற நிலையிலுள்ளோருக்கு 'செய்தி' சேர வேண்டும்

*(II சாமு.9:1,2)*

**''யோனத்தான் நிமித்தம் என்னால் தயவுபெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவன் உண்டா என்று தாவீது கேட்டான்.**

**அப்பொழுது சவுலின் வீட்டு வேலைக்காரனாகிய சீபா என்னும் பேருள்ளவனைத் தாவீதினிடத்தில் அழைத்து வந்தார்கள்...''**

## உன்னதரின் தயவு உடன்படிக்கையை நினைவுகூரும்:

தாவீதுக்கு யோனத்தானின் குடும்பத்தின் மீது தயவு உண்டானபோது அவன் யோனத்தானோடு தான் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தான். அதே போல, தேவ கிருபை உண்டாகும் போதெல்லாம், தேவன் தமது உடன்படிக்கையை நினைவுகூர்வதை, வேதாகமெங்கும் காண்கிறோம். இஸ்ரவேலர் நெருக்கப்பட்டு தேவனை நோக்கிக் கூப்பிட்ட போதெல்லாம், தேவன் அவர்களுக்கு இரங்கினார். அவரது இரக்கம் அவருக்கு உடன்படிக்கையை நினைப்பூட்டியது. ஆதாமோடு செய்த உடன்படிக்கை, நோவாவோடு பண்ணிய உடன்படிக்கை, ஆபிரகாமோடு ஏற்படுத்திய உடன்படிக்கை, தாவீதுக்கு ஆணையிட்ட உடன்படிக்கை, எல்லாவற்றிற்கும் மேலாக தேவகுமாரனாகிய கிறிஸ்து தனது ரத்தத்தால் ஏற்படுத்திய உடன்படிக்கையைத் தேவன் நினைவுகூருகிறார். ஜெபம் தேவ கிருபையை இறங்கச் செய்கிறது. தேவ தயவு பாய்ந்தோடும் போது, தேவனுடைய உடன்படிக்கை ஆட்டுக்குட்டியானவர் 'இது உங்களுக்காக சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கையின் ரத்தம்' என்றாரே, அப்புதிய உடன்படிக்கை நினைவுகூறப்படுகிறது.

புதிய உடன்படிக்கை ஆவிக்குரியது, உயிர்ப்பிக்கக் கூடியது, அதிக மகிமையுள்ளது, நீதியைத் தரக்கூடியது, நிலைத்திருப்பது, விடுவிக்கக் கூடியது என்று பவுல் IIகொரி. 3-வது அதிகாரத்திலே எடுத்துரைத்தான். ஒழிந்து போகக்கூடிய பழைய உடன்படிக்கையே

அவ்வளவு மகிமையுள்ளதாக இருந்ததானால், நிலைத்திருக்கிற புதிய உடன்படிக்கை அதிக மகிமையுள்ளதாக இருக்குமே என்று 11-வது வசனத்தில் காண்கிறோம்.

பழைய உடன்படிக்கை எஜமான் வேலைக்காரன் உறவை, நமக்குத் தேவனோடு ஏற்படுத்தியது. புதிய உடன்படிக்கையோ, நம்மை தகப்பன் பிள்ளைகள் உறவுக்குள் தேவனோடு இணைக்கிறது.

## அறியாமை அந்தகாரத்தில் அடைத்து வைக்கிறது:

*(II சாமு.9:4)*

**"..இதோ அவன் லோதேபாரிலே அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டில் இருக்கிறான் என்றான்"**

லோதேபார் என்ற இடத்தில் யோனத்தானின் மகன் மேவிபோசேத் இருந்தான் 'லோதேபார்' என்றால் 'புல்கூட முளைக்காத வறண்ட இடம்' என்று பொருள்.

அவன் மாகீரின் வீட்டில் இருந்தான் 'மாகீர்' என்றால் 'கட்டப்பட்டிருக்கின்றது' என்று பொருள்'அடிமைத்தனம்' என்றும் விளக்கலாம்.

தாவீது யோனத்தான் உடன்படிக்கையை' மேவிபோசேத் அறியாதிருந்தபடியால், வறண்ட இடத்தில், அடிமைத்தனத்தில் கிடந்தான். அறியாமை 'வறட்சி' எனும் இருளிலும், 'அடிமைத்தனம்' எனும் அந்தகாரத்திலும் ஆத்துமாக்களை அடைத்து வைக்கிறது.

புதிய உடன்படிக்கையை; சுவிசேஷத்தை அறியாத மக்கள், பாவத்தின் அடிமைத்தனத்திலும், தரித்திரத்திலும் கட்டப்படுகிறார்கள்.

ஒருவேளை, நாம் ரட்சிக்கப்பட்டிருக்கலாம். புதிய உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு விசுவாசித்திருக்கலாம்; அதன் ஆழங்களை தெளிவாகப் புரியாத நிலையில் இருந்தால், நாமும் செழிப்பற்ற நிலையில் கட்டுண்டு கிடக்க நேரிடும்: கட்டுகளுக்குள்ளே தவிக்க வாய்ப்புண்டு.

புதிய உடன்படிக்கைக்குள்ளே வந்திருக்கிற நாம் வெறும் வேலைக்காரர், ஊழியக்காரர், தாசர்கள் மட்டுமல்ல தேவனுடைய சுதந்தரர்களாக, பங்குள்ளவர்களாக, உரிமையுள்ளவர்களாக, அதிகாரமுள்ளவர்களாக, புத்திரசுவீகாரமுள்ளவர்களாக தேவனுடைய உறவிலே, இணைக்கப்பட்டிருக்கிறோம்.

## அழைத்து வர அறுப்பின் ஆட்கள் அவசியம்

தாவீதின் ஊழியக்காரர் 'சீபா'வை அழைத்து வந்தார்கள். அவன்தான் மேவிபோசேத்தை அழைத்துவர உதவினான்.

(மத்தேயு 9:38) "ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்".

ஆட்கள் தேவை அறுப்புக்கு வேலையாட்கள் அனுப்பப்படாவிட்டால் எப்படி அறியாமலிருக்கிற ஆத்துமாக்களைக் கொண்டு வர முடியும்?

கனியற்ற பூமியில், ஊழியர் எழும்புவது எப்போது? பிதாவை வேண்டிக் கொள்ளுங்கள், என்றார் இயேசு. ஜெபம் மிஷனரிகளை எழுப்புகிறது: ஜெபம் நற்செய்தியாளர்களை எழுப்புகிறது.

புல்கூட முளைக்காத வறண்ட இடங்களுக்கு, வேலையாட்கள் அனுப்பபட ஜெபியுங்கள். கட்டப்பட்டு, அடிமைத்தனத்திலுள்ளோரை அழைத்து வர வேலையாட்கள் அனுப்பப்பட ஜெபியுங்கள்.

## நிலைமை உயர்ந்த பிறகு, பழையதை நினைப்போர் சிலரே:

மனிதன், வெற்றிகள் பல கண்டு, உயர்ந்த சிகரத்தில் வைக்கப்படும் போது, தான் தரித்திரத்தில் வாடியதையும், ஒன்றுமில்லாமல் அலைந்த நாட்களையும் நினைத்துப் பார்ப்பது, மிக அரிது. அவனது திறமைகளுக்கு அங்கீகாரம் கிடைத்து, அவன் பெலத்தின் மேல் பெலம் அடைந்த பிறகு, பழைய நிலைமையை எண்ணுவது, மிகக் கடினம்.

சிலருக்கு அதிகார போதை நேரே தலைக்கு ஏறிவிடும். ஆசீர்வாதங்கள் பெருகுகையில் அற்பமான ஆரம்பங்கள் யாருக்கு ஞாபகம் வரும்? ஆனால், தாவீதோ யோனத்தானோடு தனக்குள்ள நட்பை; அவன் செய்த உதவிகளை நினைவுகூருகிறான். சவுலின் குடும்பம் முழுதும் அழிக்கப்பட்டுவிட்டது என்று தெரிந்தும், யாராவது, எங்கேயாவது மீந்திருக்கமாட்டார்களா என்று தேடிப்பார்த்தான். நல்ல தலைவனாக மட்டுமல்ல, தன்னை ஒரு ஆவிக்குரிய மனிதனாகவும் தாவீது நிலைநிறுத்திக்கொண்டான்.

## சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வோம்

நன்மை செய்வதற்கு ஏதாகிலும் வாய்ப்பு வருமா? என்று சிலர் காத்திருப்பார்கள் சிலர் சந்தர்ப்பம் கிடைக்குமா? என்று

தேடிக்கொண்டிருப்பார்கள். சில வேளைகளில், சந்தர்ப்பங்கள் நம்மைத் தேடி வந்து, நமது கதவைத் தட்டுகின்றன, என்பது உண்மையே. ஆனால், அது எப்போதும் சாத்தியமல்ல.

உதவிசெய்வதற்காகட்டும் - ஊழியம் செய்வதற்காகட்டும் நாம் தான் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

சிலர் சொல்வார்கள் 'எங்களை யாருமே உபயோகப்படுத்துவதில்லை' என்பார்கள். எங்களுக்கு யாருமே வாய்ப்பளிப்பதில்லை என்று சலித்துக் கொள்வார்கள். அந்தப் புகாரை நான் ஏற்றுக்கொள்ளவே மாட்டேன். தாவீது யாரையும் எதிர்பார்க்கவில்லை: 'நான் பண்ணின உடன்படிக்கையை எப்படியாகிலும் நிறைவேற்ற வேண்டும்' என்று, சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொண்டான்.

**"..** ***(சங்.15:4)*** **ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்"**

கர்த்தருடைய கூடாரத்தில் பிரவேசிக்கவும், அவரது பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணவும் தகுதி படைத்தவன் யார்? தனக்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, சொன்ன சொல்லை நிறைவேற்றிவிட வேண்டும் என்று முயல்பவனே.

## செத்த நாய் போன்றவனை செல்வக் குமாரனாக்கினான்

***(II சாமு 9:8,11)***

"அப்பொழுது அவன் வணங்கி **செத்த நாயைப் போலிருக்கிற** என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம் என்றான்.

.... **ராஜகுமாரரில் ஒருவனைப் போல** மேவிபோசேத் என் பந்தியிலே அசனம் பண்ணுவான் என்று ராஜா சொன்னான்".

மேவிபோசேத் சொன்னான், 'நான் ஒரு செத்த நாய் போன்றவன்' செத்த நிலையிலிருக்கின்றவனை விழுந்து போன ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவனை தூக்கியெடுத்து, உயர்த்தி, தன்னோடு பந்தியிருக்கும்படி செய்தான்: தன்னுடைய ராஜகுமாரர்களோடும், பிரபுக்களோடும் சமமாக உட்கார வைத்தான். இரண்டு கால்களும் முடமானவனுக்கு, அவனது குடும்பத்தின் இழந்துபோன பூர்வீக நிலங்களை திரும்பத் தந்து, அவனை எருசலேமில் குடியிருக்கச் செய்து, அவனுக்கு நன்மை செய்தான், தாவீது.

ஆகவேதான், 'என் இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்' என தேவன் தாவீதைப் பற்றி சான்றிதழ் தந்தார். மரத்திலே பிசின் தைலம் எப்படி வெளிவருகிறது? பெரிய மரத்தின், ஒரு சிறிய வெடிப்பிலே தன்னை வெளிப்படுத்துகிறது; வாசனை வீசுகிறது: அது போல, நமக்கு கிடைக்கிற மிகச்சிறிய வாய்ப்புகளை, நமது நற்குணத்தை வெளிப்படுத்த பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதனாக வாழமுடியும்.

## தேவ மனிதனின் செய்கைகளும் தீர்க்கதரிசனமாகிவிடுகிறது

தாவீது தேடினான், அழைப்பித்தான், இழந்து போனவற்றை திரும்பத் தந்தான், உயர்த்தினான், தனது மகனாக ஏற்றுக் கொண்டான், தனது பந்தியிலே அவனோடு போஜனம் பண்ணினான்.

தேவனும் அவ்வாறே செயல்படுகிறவர். இயேசுகிறிஸ்துவாக தேடிவந்தார், ஊழியக்காரர் மற்றும் தேவபிள்ளைகள் மூலம் ஆத்துமாக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார், ஆதாம் காலத்தில் இழந்துபோன தேவ உறவை, திரும்பவும் அருளுகின்றார், உன்னதத்தில் கிறிஸ்துவோடு அமரச் செய்கின்றார், தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் தருகின்றார், ஒரு பந்தியை ஆயத்தம்பண்ணி நம்மோடு போஜனம் பண்ணுகின்றார்.

தாவீதைப் போல தேவன் செயல்படவில்லை; தேவன் செயல்படுவது போல, தாவீது தன்னையறியாமலேயே செயல்பட்டான். அவனது செயல்களில், தேவ செயல்களின் சாயல் இருந்தது "பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்' என்று இயேசு கூறினார்.

தாவீது பாடுகளின் நடுவே பாடல் பாடினான். அது இயேசுவின் சிலுவைப்பாடுகளைப் பற்றிய தீர்க்கதரிசனமாக அமைந்துவிட்டது. ஒரு தீர்க்கதரிசியின் சொற்கள் மட்டுமல்ல, செயல்களும் தீர்க்கதரிசனமாக வேண்டும். அவனது செயல்கள் அப்படியே, புதிய ஏற்பாட்டின் ரட்சிப்பின் அனுபவத்திற்கு நிழலாக அமைந்து விட்டது.

*பிதாவே,* **உமது தயவு பாய்ந்து,** *உடன்படிக்கையை நினைவுகூரச் செய்யும் அறியாமையால் அடிமைத்தனத்திலுள்ளோரைப் பற்றிய பாரத்தை தந்தருளும். அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டுகிறோம், எஜமானனே! எவ்வளவு உயர்த்தப்பட்டாலும், எங்களது அற்பமான ஆரம்ப நாட்களை மறந்து விடாதபடி காத்தருளும். சந்தர்ப்பங்களுக்காக காத்திராதபடி, சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ள உதவியருளும். செத்த நிலையிலுள்ளோரை, செழிப்பான நிலைக்கு கொண்டு வர எங்களைப் பயன்படுத்தும் பிதாவைப் போல் பூரண சற்குணராக செயல்பட, எங்களை ஆட்கொள்ளும். ஆமென்.*

**15**

# சந்தேகம் சத்துரு விதை, தந்திடும் சித்ரவதை

*(II சாமுவேல் 10:3)*

"அம்மோன் புத்திரன் பிரபுக்களைத் தங்கள் ஆண்டவனாகிய ஆனூனைப் பார்த்து தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது உம்முடைய தகப்பனைக் கனம் பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? இந்தப்பட்டணத்தை ஆராய்ந்து உளவுபார்த்து அதைக் கவிழ்த்துப்போட அல்லவோ தாவீது தன் ஊழியக்காரரை உம்மிடத்தில் அனுப்பினான் என்றார்கள்"

சந்தேகம் எனும் விதை சாத்தானின் தயாரிப்பு அந்த விதை குறைந்த பட்சம் 5 விதமான கசப்பான கனிகளைத் தருவதை, இந்த அதிகாரம் படம்பிடித்துக் காட்டுகிறது.

1. பிறரது அன்பை ஏற்காது; அவர்களை காயப்படுத்தும்.
2. நல்லவர்களை நம்பாமல், கெட்டவர்களுக்குச் செவிகொடுக்கும்.
3. பிறரை அவமானப்படுத்தும்
4. ஒருவர் மீதுள்ள கோபத்தை, இன்னொருவர் மீது காட்டும்
5. பாதுகாப்பற்ற உணர்வைத் தரும்.

## பாதாள ஆவி, ஏதேனில் ஏவிய சூதான ஆயுதம்:

*(II சாமு.10:2)*

"அப்பொழுது தாவீது: ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குத் தயை செய்தது போல, அவன் குமாரனாகிய இவனுக்கு நான் தயை செய்வேன் என்று சொல்லி, அவன் தகப்பனுக்காக அவனுக்கு ஆறுதல் சொல்ல தன் ஊழியக்காரரை அனுப்பினான்..."

அம்மோன் புத்திரரின் அரசன் மரித்துப்போனான் அவனது மகன் அரசப் பதவிக்கு வந்தான். அவனுக்கு ஆறுதல் கூற, தாவீது தனது தூதர்களை அம்மோன் தேசத்திற்கு அனுப்பினான். அம்மோன் பிரபுக்களோ, புதிய அரசனுக்குள் சந்தேக விதைகளை விதைக்க,

அவனும் அதை நம்பி, தாவீதின் தூதர்களை அவமானப்படுத்தி அனுப்பினான்.

பிறர் நன்மை செய்ய வரும்போது, அவர்களது நோக்கத்தையே சந்தேகக் கண்களோடு பார்க்கக் கூடியவர்களாக நாம் இருக்கலாம். அவர்கள் நன்மை செய்வதற்கு ஏதோ பின்னணி இருக்கிறது, என்று எண்ணும்போது, அவர்களது அன்பையே ஏற்றுக்கொள்ள முடியாமல் போய்விடுகிறது. சந்தேகம் எவனுக்குள் நுழைகிறதோ, அவனால் உண்மையான அன்பையும் அந்த அன்பினால் விளைகிற நன்மைகளையும் புரிந்து கொள்ள முடியாது. அன்பின் வெளிப்பாடாக விளைகிற எந்த செயலையும் அங்கிகரிக்க முடியாமல் போய்விடும். நமக்குத் துணையாய் நிற்கிறவர்களுக்கே, காயம் உண்டாக்கும்படி சந்தேகம் செய்துவிடும்.

சந்தேகம் ஏதேன் தோட்டத்திலே, ஆதாம் ஏவாளில் ஆரம்பித்தது 'தேவன் எதற்காக நன்மை தீமை அறிகிற அறிவின் பழத்தை விலக்கி வைத்துள்ளார்? என்ற சந்தேக விதையைச் சாத்தான் அவர்களிலே விதைத்தான். அவர்கள் தேவனின் அன்பை சந்தேகப்பட ஆரம்பித்தனர் சாத்தானின் ஆயுதங்கள் நமக்கு தெரியாதவை அல்லவே. அவை எல்லாம் பழைய உபாயங்கள்தான் இரண்டு சகாக்களைப் பிரிப்பதற்கு; தலைவனையும், பணியாளனையும் பிரிப்பதற்கு, இரண்டு நண்பர்களை பிரிப்பதற்கு; சகோததர்கள் நடுவே பிரிவினை உண்டு பண்ண, கணவன் மனைவிக்கிடையே கலக்கம் ஏற்படுத்த; இந்த சந்தேக விதையைத் தான் பிசாசு பயன்படுத்துகிறான். இந்த விதை எங்கே விழுகிறதோ, அங்கே நாம் கவனமாக இல்லாவிட்டால், சேதங்கள் விளைந்துவிடும்.

தாவீதுக்கும், மரித்துப்போன அம்மோன் அரசனுக்கும் நல்ல உறவு இருந்தது. அவ்வரசன் தாவீதுக்கு நன்மை செய்தான், தயவுகாட்டினான். இப்போது அவனது மகனுக்குப் பதில் நன்மை செய்ய முற்பட்ட தாவீதின் அன்பை, புதிய அரசனால் புரிந்துகொள்ள முடியவில்லை, கிரகிக்க முடியவில்லை.

## ஆறுதல் கூறுவோரை நம்பாது, புறங்கூறுதலை நம்பும்

தாவீதின் தூதர்கள், அம்மோன் தேசத்து புதிய அரசனுக்கு ஆறுதல் கூற வந்தபோது, அம்மோன் பிரபுக்கள் என்ன கூறினார்கள்? 'இவர்களை நம்பாதேயும் இவர்கள் உளவு பார்க்க வந்திருக்கிறார்கள்''

அவ்வரசனும் அதைத்தான் நம்பினான்; தாவீதின் தூதர்களை நம்பவில்லை.

நாமும் கூட உண்மையாய் அன்புகூருகிறவர்களை நம்பாமல், எதோ சொல்லவேண்டுமே என்பதற்காக சொல்லுவோரின் வார்த்தைகளை நம்பக்கூடிய நிலை வரலாம். நமது இதயத்தில் சந்தேகம் எழுமானால், பிறரின் சந்தேகத்தின் வார்த்தைகளை உடனே பிடித்துக் கொள்ளுவோம். நமது இதயத்தில் சந்தேகம் ஒரு துளி எழுமானால், மழை போல் சந்தேக வார்த்தைகளைப் பேசுவதற்கு யாராவது தானாக வருவார்கள். சந்தேகம் நல்லவர்களின் சொற்களை ஏற்க விடாது. கூடாத வார்த்தைகளை உடனே கிரகித்துக் கொள்ளச் செய்யும்.

## அன்பு செலுத்துவோரை அவமானப்படுத்தும்

*(II சாமு 10:4)*

''அப்பொழுது ஆனூன், தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து அவர்களுடைய ஒரு பக்கத்து தாடியைச் சிரைத்து. அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிட மட்டும் வைத்துவிட்டு, மற்றப் பாதியை கத்தரித்துப்போட்டு அவர்களை அனுப்பி விட்டான்''.

சந்தேகப்பிராணிகள் பிறரை அவமானப்படுத்துவதற்கு தயங்கமாட்டார்கள்; ஒரு பக்கத்து தாடியை விட்டுவிட்டு, இன்னொரு பக்கத்து தாடியை மட்டும் எடுத்து அனுப்பியதன் காரணம் என்ன? ஒரு பக்கத்தாடியோடு ஊருக்குள் போகமுடியாது. தன்னை அனுப்பிய தாவீது அரசனுக்கு முன், இத் தூதர்கள் போய் நிற்க முடியாது. அவர்களை வெட்கத்துக்கு ஆளாக்குகின்ற ஒரு செயலை அம்மோன் அரசன் செய்தான்.

சந்தேகம், தன்னை நேசிப்போரையே துக்கப்படுத்துவதற்கும், புண்படுத்துவதற்கும் தயங்காது. அவர்களது உடைகளையும் வெட்டி அனுப்பினான்.

## ஒருவர் மீதுள்ள கோபத்தை இன்னொருவர் மீது கக்கும்

அம்மோன் அரசனுக்கு தாவீதின் மீது தான் கோபம். போன இடங்களிலெல்லாம் பெரும் வெற்றியைப் பெற்ற தாவீது, நமது நாட்டையும் கைப்பற்ற முயல்கிறானே என்ற கோபம். அதை அவனது தூதர்கள் மீது பிரதிபலிக்கிறான்.

தாவீது மீதுள்ள கோபத்தில், ஒன்றுமறியாதவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். சந்தேகம் பலவேளைகளில் இவ்வாறே நடந்துகொள்ளும், யார் மீதோ இருக்கிற கோபத்தை, எவர் மீதோ சாட்டிவிடும்.

## பாதுகாப்பற்ற உணர்வலைகளைப் பாய்ச்சும்

*(II சாமு 10:6)*

"அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஸ்தானாபதிகளை அனுப்பி, பெத்ரேகோப் தேசத்துச் சீரியரிலும் சேபாவிலிருக்கிற சீரியரிலும் இருபதினாயிரம் காலாட்களையும், மாக்கா தேசத்து ராஜாவினிடத்தில் ஆயிரம்பேரையும், இஷ்தோபிலிருக்கிற பன்னீராயிரம் பேரையும், கூலிப்படையாக அழைப்பித்தார்கள்.

சந்தேகப்பிராணி பாதுகாப்பற்ற உணர்வால் தாக்குண்டு போய், தனக்கு பாதுகாப்பைத் தேடத் தொடங்குவான். தாவீது நடந்ததை அறிந்தபோது அம்மோன் புத்திரர் மீது வெறுப்படைந்தானே தவிர, அவர்கள் மீது படையெடுக்கவோ போர்புரியவோ முற்படவில்லை.

சந்ததேகப்பிராணிகள் பிறரை காயப்படுத்திவிட்டு, அதன் விளைவுகளைப் பற்றி எண்ணி, அஞ்சி நடுங்கி, அங்கும் இங்கும் ஓடி, அவர்களையும் இவர்களையும் துணைக்கு அழைத்துக் கொள்வார்கள்.

எங்கு சந்தேகம் எழுகிறதோ, அங்கு உறவுகளில் வெறுப்புணர்வு உண்டாகும். அம்மோன் அரசன் கூலிப்படையை அமர்த்திக்கொண்டான். எதிரிக்கு எதிரி நண்பன், என்ற அடிப்படையில் அவனோடு சிலரைச் சேர்த்துக் கொண்டான். தேநீர் வாங்கிக் கொடுப்பதிலிருந்து பெரிதாக கொடுப்பது வரை ஏதாவது செய்து, சந்தேகம், தன்னோடு சிலரை கூட்டிக் கொள்ளும்.

## சந்தேகத்துக்குரியவனை 'சிநேகிதனே' என்றழைத்து, வென்றார்:

யூதாஸ் காரியோத் மாய்மாலமான அன்பை இயேசுவிடம் காண்பிக்க முயல்கிறான்: முத்தமிடுகிறான். இயேசுவிற்குத் தெரியும். இவன் சந்தேகமில்லாமல் சந்தேகத்துக்குரியவன்' என்று இவன் முத்தத்தினால் காட்டிக் கொடுக்கவே வந்திருக்கிறான், என்று இயேசுவுக்குத் தெரியும். 'என்னை காட்டிக்கொடுக்கிறவனின் கை

இங்குதான், இருக்கின்றது' என்றார். நாமாக இருந்தால் இப்படிக் கூறியிருப்போம், "டேய் ஏண்டா, முத்தத்தினால் காட்டிக்கொடுக்கின்றாய்? நேரடியாக காட்டிக்கொடேண்டா" என்று அன்பு செலுத்துவதன் மூலம், சந்தேகப்பட வேண்டியதையும், சந்தித்து வென்றார். 'சிநேகிதனே' என்று அவர் யூதாஸ் காரியோத்தை அழைத்த ஒரு சொல்தான், அவனைப் பாடாய்ப்படுத்தி, தூக்கு மாட்டித் தொங்கும் படி செய்தது. யூதாசை யாரும் கொல்லவில்லை. சீடர்களோடு இருந்திருந்தால், ஒருவேளை அவ்னை அடித்துக் கொன்றிருப்பார்கள். நன்மை செய்வதினால், சத்துருவின் தலையில் நெருப்புத் தழலைக் குவிக்கிறாய், என்று வேதம் கூறுகிறது 'சிநேகிதனே' என்ற அந்த ஒரே ஒரு வார்த்தைதான், அவனைத் துரத்தித் துரத்தி துக்கப்பட வைத்து, தற்கொலை செய்யும்படி செய்தது.

## சந்தேகப் புண்ணுக்கு, சரியான புதிய ஏற்பாட்டு மருந்து

தாவீது அம்மோனியரை அருவருத்தான். அவர்கள் படைதிரட்டி வந்த போது, இவனும் படையனுப்பி போரிட்டான். அது பழைய ஏற்பாடு; நாம் புதிய ஏற்பாட்டுக்காரர்கள், அவ்விதம் அணுகக்கூடாது.

தீமைக்குப் பதிலாக நன்மை செய்வோம். தீமைக்கு தீமை, நமது அழைப்பல்ல ஆசீர்வதிக்கவே அழைக்கப்பட்டோம். ஆசீர்வதிப்போம். 'உங்களைக் குறித்து பொய்யாய் சொல்வார்களானால் அவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்; உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபியுங்கள் என்றே புதிய ஏற்பாடு நமக்கு கற்பிக்கிறது.

பழைய ஏற்பாடாக இருந்தால், அவர்களிடம் போய் போராடலாம். ஆனால் புதிய ஏற்பாடோ, தேவனை நோக்கிப் பாருங்கள், என்கிறது; தேவன் பார்த்துக் கொள்வார் என உறுதியளிக்கிறது.

## நன்மை செய்வதில் நலிந்து போகாதிருப்போம்

நான் நன்மை செய்ய முற்படுவதைக் கூட தவறாகப் புரிந்து கொள்கிறார்கள், என்று சோர்ந்து போய், நன்மை செய்வதையே பலர் நிறுத்திவிடுகிறார்கள். என்னை அவமானப்படுத்தினால் கூட பரவாயில்லை, என்னோடு இருப்பவர்களை அவமானப் படுத்துகிறார்களே. அவர்கள் என்னபாவம் செய்தார்கள்? என்று சோர்ந்து போக வாய்ப்புண்டு.

*(எபி.13:16)*

**''அன்றியும் நன்மை செய்யவும் தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்'' இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்''**

*(கலா 6:9)*

**"நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்''**

**தவறாகப்புரிந்தாலும், வெறுத்தாலும், அவமானப்படுத்தினாலும் என்ன வந்தாலும், நன்மை செய்வதில் சோர்ந்து போகவோ; தளர்ந்து போகவோ வேண்டாம்.**

## ஒரு கண் சத்துருவின் மேல், இன்னொரு கண் சகோதரனின் மேல்

*(II சாமு.10:9-12)*

**''யோவாபோ இராணுவங்களின் படைமுகம் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிறதைக் காண்கையில், அவன் இஸ்ரவேலிலே தெரிந்து கொள்ளப்பட்ட எல்லாராணுவங்களிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து, அதைச் சீரியருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தி, மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராக அணிவகுத்து, நிறுத்தும்படி தன் சகோதரனாகிய அபிசாயினிடத்தில் ஒப்புவித்து**

**சீரியர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும். அம்மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன்.**

**தைரியமாயிரு நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம். கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றான்''**

**தாவீது போரைத் துவக்கவில்லை. அம்மோன் ராஜாவே, கூலிப் படைகளைக் கூட்டிக்கொண்டு போரை ஆரம்பிக்கிறான். ஏனென்றால் அம்மோன் அரசனுக்குள் தாழ்வு மனப்பான்மை இருந்தது. பிறர், நாம் நன்மை செய்கிறதை சந்தேகிப்பதற்குக் காரணம், அவர்களது தாழ்வு மனப்பான்மை; எனக்கும் அது பொருந்தும் பிறரது நன்மையை நான் சந்தேகித்தாலும், எனக்கு 'தாழ்வு மனப்பான்மை' இருப்பதாகவே பொருள். அதே சமயம், 'உயர்வு மனப்பான்மையும்' (Superiority complex) தவறுதான்.**

யோவாப், இஸ்ரவேல் நாட்டின் தளபதி மூத்த சகோதரன் அனுபவசாலி ஆனால், தனது இளைய சகோதரனைப் பார்த்து, 'எனக்கு உனது உதவி தேவை' என்கிறான். 'நானும் உனக்கு உதவுவேன்' என்றான். 'நான் அனுபவசாலி நான் மூத்தவன். நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டு பேசாமலிரு என்ற மனப்பான்மை செயற்கையான, பிறர் நலனுக்கு உகந்ததல்லாத மனப்பான்மையாகும்.

நாம் ஒரு கண்ணை சத்துருவின் மீது வைப்போம் அவனை மேற்கொள்வதற்காக இன்னொரு கண்ணை சகோதரன் மீது வைப்போம் அவனுக்கு உதவி செய்வதற்காக.

இதுவே சரியான 'குழு ஒருங்கிணைப்பு' (Team work) எனக்கு எல்லாம் தெரியும்; உனக்கு ஒன்றும் தெரியாது என்பது குழு ஒருமைப்பாட்டையே உடைக்கிற மனப்பான்மை; குழு ஒருமைப்பாட்டிலே நமது' என்ற உணர்விருக்கும். 'எனது - உனது' என்ற எண்ணமே இருக்காது.

இப்போரின் விளைவு, என்ன? எழுநூறு ரதவீரரை அழித்ததனால், அந்த ரதங்களும், 40,000 குதிரை வீரரை அழித்ததினால், அவ்வளவு குதிரைகளும் இஸ்ரவேல் நாட்டுக்குச் சொந்தமாயின. (வசனம். *18*)

(II கொரி *10:8*)

"மேலும் உங்களைநிர்மூலமாக்குகிறதற்கல்ல உங்களைஊன்றக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி..."

சகோதரருக்கு உதவி செய்து, சத்துருவை மேற்கொள்ளுவதற்கு மாறாக, சகோதரருக்கு தீங்கு செய்வதன் மூலம், சத்துருவுக்கு உதவிசெய்வோர் பலருண்டு. சகோதரரை நிர்மூலமாக்க நமக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

*பிதாவே, சந்தேகம் பிசாசின் விதை என்று உணர உதவிசெய்யும் பிறரது அன்பையும், நன்மையையும் ஏற்கக்கூடிய திறந்த மனதைத் தாரும் 'நாம் ஒளியிலே நடந்தால்' ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்' என்ற வசனத்தின்படி ஒளிவு மறைவில்லாத வெளிப்படையான வாழ்வு வாழ உதவி செய்யும். எவ்வளவு அவமானங்கள் வந்தாலும், நன்மை செய்வதில் சோராது, முன்செல்ல பெலப்படுத்தும். சகோதர சகோதரிகளின் உதவி எனக்குத் தேவை என்ற மனப்பான்மையோடு, சத்துருவை மேற்கொள்ள அருள்செய்யும் ஆமென்.*

16

# உன்னதரின் உள்ளத்தில் உயர்ந்து நிற்கும், உத்தமன் உரியா

*(II சாமு 11:8?11 - 13)*

''பின்பு தாவீது உரியாவை நோக்கி: நீ உன் வீட்டிற்குப் போய், பாதசுத்தி செய் என்றான். உரியா ராஜ அரமனையிலிருந்து புறப்பட்ட போது, ராஜாவினிடத்திலிருந்து உச்சிதமான பதார்த்தங்கள் அவன் பின்னாலே அனுப்பப்பட்டன.

ஆனாலும் உரியா தன் வீட்டிற்குப் போகாமல், ராஜ அரமனையின் வாசலிலே தன் ஆண்டவனுடைய எல்லாச் சேவகரோடுங்கூடப் படுத்துக் கொண்டிருந்தான்.

உரியா, தன் வீட்டிற்குப் போகவில்லையென்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்ட போது; தாவீது உரியாவை நோக்கி, நீ பயணத்திலிருந்து வந்தவன் அல்லவா? நீ உன் வீட்டிற்குப் போகாதிருக்கிறது என்ன என்று கேட்டான்.

உரியா தாவீதை நோக்கி: பெட்டியும், இஸ்ரவேலும், யூதாவும் கூடாரங்களிலே தங்கி; என் ஆண்டவனாகிய யோவாபும், என் ஆண்டவனின் சேவகரும் வெளியிலே பாளயமிறங்கியிருக்கையில், நான் புசிப்பதற்கும், குடிக்கிறதற்கும் என் மனைவியோடே சயனிக்கிறதற்கும், என் வீட்டிற்குள் பிரவேசிப்பேனோ? நான் அப்படிச் செய்கிறதில்லை என்று உம்முடைய பேரிலும்; உம்முடைய ஆத்துமாவின் பேரிலும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் என்றான்.

தாவீது அவனைத் தனக்கு முன்பாகப் புசித்துக் குடிக்கிறதற்கு அழைத்து, அவனை வெறிக்கப்பண்ணினான். ஆனாலும் அவன் தன் வீட்டுக்குப் போகாமல், சாயங்காலத்திலே தன் ஆண்டவனின் சேவகரோடே தன் படுக்கையிலே படுத்துக் கொண்டான்.''

உரியாவின் வைராக்கியம் எவ்வளவு பெரியது! அவனது பொறுப்புணர்வு எவ்வளவு பெரியது! 'எனது தளபதியும், எனது சகாக்களும் குடும்பங்களைப் பிரிந்து போர்க்களத்தில் இருக்கும்போது, நான் மட்டும் எப்படி எனது வீட்டுக்குப் போவேன்? போர் முடியும் வரை

வீடு செல்லேன்' என்ற வைராக்கியம் உரியாவுக்கு இருந்தது. அரசனே வீட்டுக்குப்போ என்று கட்டளையிட்டும், அரண்மனையிலிருந்து அறுசுவை உணவு ராஜாவினால் அவன் வீட்டுக்கு அனுப்பப் பட்டும், அவன் தனது வைராக்கியத்தில் உறுதியாயிருந்தான். தாவீதால், உரியாவைக் குடித்து வெறிக்கும்படி செய்யத்தான் முடிந்தது, அந்த போதையிலும் பொறுப்புணர்வு தவறாத போர்ச்சேவகனாக உரியா விளங்கினான். *(மத் 1:6).*

**''ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான். தாவீது ராஜா உரியாவின் மனைவியாயிருந்தவ்ளிடத்தில் சாலமொனைப் பெற்றான்''**

இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாறு பட்டியலில், 'சாலமொன் பத்சேபாளிடத்தில் பிறந்தான்' என எழுதாமல், 'உரியாவின் மனைவியாய் இருந்தவளிடத்தில் பிறந்தான்' என தேவன் எழுதி வைத்தார். அங்கே உரியாவின் பெயருக்கு அவசியமே இல்லை. தனது எஜமானுக்கு உண்மையாயிருந்தவனைத் தேவன் நினைவுகூர்ந்து, அவனது பெயரைத் தனது வம்ச வரலாற்றில் புகுத்தி, அவனை கனப்படுத்தினார். ஆயிரம் ஆண்டுகளானாலும் தேவன் உண்மையுள்ளவர்களை மறக்க மாட்டார்.

'உண்மையாயிருந்து என்ன பயன்? உரியாவின் உயிர்தானே போனது. தாவீதின் சொற்படி, அவன் வீட்டிற்குப் போயிருந்தால் உயிர் பிழைத்திருப்பானே. உரியா மிஞ்சின நீதிமான்' என எண்ணுவோர் உண்டு. உண்மையாயிருப்பதினால் ஒருபோதும் நாம் எதையும் இழந்து போவதில்லை. உண்மையாயிருக்கும் உத்தமர்களை உன்னத தேவன் ஒருபோதும் மறவாது, உயர்வாக நடத்துவார்.

## சிறப்பான வாழ்விலே கறுப்பான புள்ளி

*(I ராஜா 15:5)*

**''தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்று தவிரக் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து வந்தான்''.**

உரியா தொடர்பாக தாவீது செய்த பாவம், அவன் காலத்திற்குப் பிறகும், சில தலைமுறைகளுக்குப் பிறகும், அவனது வாழ்க்கை வரலாற்றிலே கரும்புள்ளியாக நிலைத்து நின்றுவிட்டது.

II சாமுவேல் புத்தகத்தில், 10-ஆம் அதிகாரம் வரை வெற்றிகளையேக் கண்டுவந்த தாவீதுக்கு 11-ஆம் அதிகாரம் முதல் நிலைமை மாறுகிறது. சாதகமில்லாத சம்பவங்கள் நடக்கத் துவங்குகிறது. காரணம், நல்மனசாட்சியைத் தாவீது இழந்து போனதே. சவுலின் சால்வையின் தொங்கலை அறுத்த போது, அடித்துக் கொண்ட மனசாட்சி, மாற்றான் மனைவியை அபகரித்துக் கொண்டபோது அமைதிகாத்தது.

மனசாட்சி என்பது சூழ்நிலையினால் தாக்கம் அடையக்கூடியது. 'அசைவ உணவு பாவம்' என்ற சூழலில் வாழுவோரின் மனசாட்சி, அசைவ உணவைப் பாவமாகக் கருதும்; காந்தி, தனது சுயசரிதையிலே, ஆட்டு இறைச்சியைத் தான் உண்ட பிறகு, அன்று இரவு தனது வயிற்றில் ஆட்டுக்குட்டி சத்தமிடுகிறது போல இருந்ததாகவும், தான் தூக்கமின்றி தவித்ததாகவும் எழுதியுள்ளது, இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு.

'நல் மனசாட்சியோ' ஞானஸ்நானத்தின் மூலம் கிடைக்கிறது. அது வசனங்களைச் சார்ந்ததாக விளங்குகிறது. நமது நல்மனசாட்சி, மழுங்கத் துவங்குகிற போதே, அதைச் சரி செய்யாவிட்டால், நாம் தொடர்ந்து வீழ்ச்சியடைவதற்கு ஏதுவாகும்.

*(யாக் 1:14,15)*

**''அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.**

**பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்''.**

*(I தீமோ. 1:19)*

**''இந்த நல்மனசாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்.''**

தாவீதின் மழுங்கிப் போன மனசாட்சி, மாற்றானின் மனைவியோடு விபச்சாரம் புரிகிறது. அவளது கணவனை வீட்டுக்கு அனுப்புவதன் மூலம், தனது பாவத்தை மூட முயல்கிறது. அவனை குடித்து வெறிக்கத் தூண்டுகிறது. அவனைத் தந்திரமாகக் கொல்கிறது. அந்தப் பாவத்தில் யோவாபையும் ஈடுபடுத்துகிறது. இறுதியாக அவளைத் தனது மனைவியாகவே எடுத்துக் கொள்கிறது.

நல் மனசாட்சியை இழந்து, நமது வாழ்வில் கறுப்புப் புள்ளிகள் பதியாதபடிக் காத்துக் கொள்வோம்.

## பாவத்தை மூடி வைத்தால் பாதிப்புகள் மூன்று, பிறர்க்கு

நாம் பாவத்தில் இடறி - தவறினவுடனே மனந்திரும்பாவிட்டால், அது நம்மை மட்டுமல்ல, நம்மைச் சூழ்ந்திருப்போரையும், நம்மைச்சார்ந்திருப்போரையும் எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்று இச்சம்பவம் காண்பிக்கிறது.

1) நம்மைச்சார்ந்திருப்போர், நமது பெலவீனத்தைக் கூறிக்கூறியே, கண்டிப்பிலிருந்தும், தண்டனையிலிருந்தும் நழுவிவிடுவர்.

2) நமது இதயக் கடினம், நம்மைச் சார்ந்திருப்போருக்குள்ளும் தொற்றி, பரவிவிடும்

3) நம்மிடம் விசுவாசமாகவும், உண்மையாகவும் இருப்போரை நாம் இழக்க நேரிடும்.

## கிருபை வரத்தைப் பிரயோகிக்க இயலாது

*(II சாமு 11:18-21)*

''அப்பொழுது யோவாப் அந்த யுத்தத்தின் செய்திகளையெல்லாம், தாவீதுக்கு அறிவிக்க ஆள் அனுப்பி,

தான் அனுப்புகிற ஆளை நோக்கி: நீ யுத்தத்தின் செய்திகளையெல்லாம் ராஜாவுக்குச் சொல்லித் தீர்த்த போது,

ராஜாவுக்குக் கோபம் எழும்பி, அவர்: நீங்கள் பட்டணத்திற்கு இத்தனை கிட்டப்போய் யுத்தம் பண்ண வேண்டியது என்ன? அலங்கத்தில் நின்று எய்வார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா?

எருப்பேசேத்தின் குமாரன் அபிமெலேக்கைக் கொன்றது யார்? தேபேசிலே ஒரு பெண்பிள்ளை அலங்கத்திலிருந்து ஒரு எந்திரக்கல்லின் துண்டை அவன் மேல் போட்டதினால் அல்லவோ அவன் செத்தான்: நீங்கள் அலங்கத்திற்கு இத்தனை கிட்டப்போனது என்ன என்று உன்னோடே சொன்னால், அப்பொழுது நீ உம்முடைய சேவகனாகிய உரியா என்னும் ஏத்தியனும் செத்தான் என்று சொல் என்றான்''

யோவாப் எனும் படைத் தளபதியின் வாழ்விலே, தாவீதின் மனந்திரும்பாத நிலை ஏற்படுத்திய பாதிப்பைக் காண்கிறோம். தாவீதின் பெலவீனத்தைப் பிடித்துக்கொண்டான். அரசனாகிய தாவீது, தளபதியாகிய யோவாபைக் கண்டிக்கக் கூடிய நிலைவரும் போது, தாவீதின் இந்தப் பாவத்தை, யோவாப் குறிப்பிட்டு, அதைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தினான்.

நமது பாவங்களைத் தாமதமின்றிஅறிக்கையிட்டு மனந்திரும்பாமல், மறைத்து வைத்திருந்தால் சத்துருவும்,சத்துருவால் தூண்டப்பட்டவர்களும் நமது பாவத்தைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி, நம்மை மறைமுகமாக மிரட்டுகிற வாய்ப்பு வரலாம்.

தாவீது இப்பெலவீனத்தால், யோவாபின் மீது தனதுதலைமைத்துவ அதிகாரத்தை பயன்படுத்த இயலாமல், செயலிழந்து விட்டான்.

Iகொரி 12ல் கூறப்பட்டுள்ள 9 வரங்களும் ஆவிக்குரிய வரங்கள். அது எல்லாருக்குள்ளும் உண்டு. ஆனால், ரோமர் 12ல் கூறப்பட்டுள்ள வரங்கள் (வசனம் 6 முதல் 8 வரை) தீர்க்கதரிசனம், ஊழியம், போதனை, புத்தி சொல்வது, பகிர்ந்து கொடுப்பது, முதலாளி (தலைமைத்துவம்),இரக்கஞ்செய்தல் போன்றவை கிருபை வரங்கள் அவை இன்னும் அதிகம் உண்டு; அதற்கு எண்ணிக்கை இல்லை. கிருபை வரங்களை, நாம் வைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய இடத்திற்கு நிலைமைக்கு ஏற்றவாறு கர்த்தர் அருளுகிறார்.

தாவீதுக்கு ஆட்சிப்பொறுப்பு, ஆளுகை என்பது தலைமைத்துவம் என்ற கிருபை வரமாகும். அந்த கிருபைவரம், அவனில் செயல்படாதபடி, இந்தப் பாவம் தடுத்துவிட்டது.

இதயக்கடினம் நமது வாழ்வில் தேவன் அருளியுள்ள கிருபை வரங்கள் செயல்படாதபடி தடுத்துவிடுகிறது. எச்சரிக்கையாயிருப்போம்.

## இதயக் கடினம் ஒரு தொற்று நோய்

*(IIசாமு.11:5)*

"அந்த ஸ்திரீ கர்ப்பம் தரித்து, தான் கர்ப்பவதியென்று தாவீதுக்கு அறிவிக்கும்படி ஆள் அனுப்பினாள்.

பத்சேபாளில் ஏற்படுகிற பாதிப்பைக் கவனிப்போம். கணவன் இல்லாத நேரத்திலே, இன்னொருவனோடு விபச்சாரம் புரிந்து விட்டதனால், கர்ப்பம் தரித்துவிட்டாள். ஆனால், அதை அவள் ஒரு பொருட்டென்று பெரிதாக எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அவளது இதயமும் கடினப்பட்டுவிட்டது. தாவீதின் இதயக்கடினம், பத்சேபாளுக்குள்ளும் பாய்ந்து பரவி விட்டது.

தவறான தொடர்பினால் கருத்தரித்ததை, ஒரு பாவமாக பத்சேபாள் எண்ணவேயில்லை. இந்தக் கடின இதயம் தன்னோடு நின்றுவிடாது, பிறருக்கும் பரவிக்கொண்டேயிருக்கும் எச்சரிக்கை.

உரியா தாவீதுக்கும், நாட்டிற்கும் உண்மையும் விசுவாசமுமுள்ள போர்ச்சேவகன், பராக்கிரமசாலி தனது குடும்பத்தையே நாட்டிற்காக, தாவீதுக்காக தியாகம் செய்யத் துணிகிறவன். தாவீதின் இதயக்கடினம், உரியாவையே தந்திரமாக கொல்லத் துணிந்தது; விசுவாசமுள்ள உண்மையுள்ள சேவகனை இழந்துவிட்டது.

இதயக்கடினம், நல்ல நண்பர்களை நம்மை ஆதரிப்போரை, நமது துன்பத்திலே பங்கெடுக்கக்கூடியோரை, இழப்பதற்கு காரணமாகிவிடும். பலருக்கு, நிலையான நண்பர்களே இருக்கமாட்டார்கள். ஒரு நபரோடு, மூன்று மாதங்கள் கொஞ்சிக் குலாவுவார்கள்; அதன் பிறகு, 6 மாதங்கள் கீரியும் பாம்பும் போலாகிவிடுவார்கள். மறுபடியும் வேறு நண்பர்களைப் பிடிப்பார்கள் அவர்களும் இரண்டு மாதங்கள் கழித்து காணாமற்போய் விடுவார்கள். இதயக்கடினமுள்ளவன், யாருக்கும் உண்மையாயிருக்கமாட்டான். அவனது நண்பர்கள் நிலைத்திருக்கமாட்டார்கள். 'இப்போது உங்கள் நண்பர் யார்?' என்று கேட்டால், அவர்களுக்கே தெரியாது. ஒரேத் தட்டில்சாப்பிடுகிற அளவு நெருக்கமான அன்புள்ளோரைக்கூட இழந்து விடுவார்கள்.

தங்களது பாவங்களை அறிக்கைசெய்து விட்டு விடுகிறவர்களே, எவ்வளவு தூர இடைவெளியிருந்தாலும், நீண்டகாலம் நட்பு போன்ற உறவுகளைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள். தவறு நடக்கலாம் ஆனால், அதைத் தாமதமின்றி திருத்திக்கொள்வதுதான் முக்கியம்.

*பிதாவே, உண்மைத் தன்மைக்கு ஆயிரம் ஆண்டுகள் சென்றும், உம்மிடத்தில் கனம் உண்டு, என்று உணர உதவும். எங்களது நல்மனசாட்சியை அவ்வப்போது புதுப்பித்து, எங்கள் வாழ்விலே கரும்புள்ளிகள் விழுந்து விடாமல் காக்க உதவும். கடின இதயத்தால், எங்களுக்கும், பிறருக்கும் வருகிற பாதிப்புகளின் என் தீவிரத்தை உணர எங்கள் கண்களைத் திறந்தருளும். எவரும் எங்கள் பலவீனத்தைப் பயன்படுத்தி எங்களை செயலிழக்கச் செய்யாதவாறு காத்தருளும். எங்களது கிருபை வரத்தை எப்போதும், நாங்கள் கூர்மையாக வைத்துக்கொள்ளட்டும். உண்மையானோரை நாங்கள் இழந்துவிடாமல் தக்கவைத்துக் கொள்ள எங்களுக்கு அருள்புரியும். ஆமென்.*

# சிட்சிக்கிறார் சீர்ப்படுத்த, ஈடுகட்டுகிறார் ஈவுகளால்

## காட்டிக் கொடுக்காமல், காத்திருக்கும் தேவன்

தாவீது; பாவம் செய்து இரண்டு ஆண்டுகள் கடந்த பிறகுதான், நாத்தான் தீர்க்கதரிசியை, தேவன், தாவீதிடம் அனுப்பினார். சிலர் ஓராண்டு கழித்து அனுப்பினார் என்று கருதுகின்றனர். நான் 2 ஆண்டுகள் கழித்து அனுப்பினார், என்று அபிப்பிராயப்படுகிறேன்.

தேவபிள்ளை எவ்வளவு பெரிய பாவம் செய்தாலும், தேவன் உடனே அவனைப், பகிரங்கமாகக் காட்டிக் கொடுப்பதில்லை. அவனாக திருந்துவான் எனக் காத்திருக்கிறார். இரண்டு ஆண்டுகள் விட்டுப் பிடிக்கிறார். அதுவரை தாவீதின் பாவம் உலகிற்குத் தெரியாது. ஒரு சிலருக்குத் தெரிந்திருக்கும்: அரசனின் பாவத்தை, வெளியில் கூற எவருக்குத் துணிவு வரும்? ஆனால், தாவீதின் மனமோ மென்மேலும் கடினப்பட்டுக்கொண்டே போனது. எனவே, அவனை அரசசபையிலே, பிறர் முன்னிலையில் தேவன் கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தாவீதின் நல்மனசாட்சி மழுங்கிப்போனதாலேயே, நேரடியாக பாவத்தை எடுத்துரைக்காமல், கதை போலக் கூற வேண்டியதாயிற்று. *(IIசாமு. 12:1)*

*"கர்த்தர் நாத்தானைத் தாவீதினிடத்தில் அனுப்பினார்; இவன் அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி, ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள்; ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன்..."*

## போதாதிருந்தால் பொழிந்திருப்பார், பாவம் ஏன்?

*(II சாமு 12:8,9)*

"உன் ஆண்டவனுடைய வீட்டை உனக்குக் கொடுத்து உன் ஆண்டவனுடைய ஸ்திரீகளையும் உன் மடியிலே தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்: இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன்.

கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டை பண்ணினது என்ன?..."

ஆண்டவர் தாவீதின் மீது இரண்டு புகார்களைக் கூறுகிறார். உனக்குத் தேவையென்றால் இன்னும் கொடுத்திருப்பேன் நீ ஏன் பாவம் செய்தாய்? ஏன் மாற்றானைக் கொன்று அவனது மனைவியை அபகரித்தாய்?

'எனது வார்த்தையை அசட்டை பண்ணினாயே' நாம் தாவீதைப் போல பெரிய பாவத்தைச் செய்யாதிருக்கலாம். ஆனால், தேவ வார்த்தையைப் பல வேளைகளில் அசட்டை பண்ணியிருப்போம். அது தேவனை எவ்வளவு துக்கப்படுத்தியிருக்கும் என்று உணர்வோமானால், நாம் ஓடிப்போய், தேவசமூகத்தில், அவரது பாதத்தைப் பிடித்துக் கதற வேண்டியிருக்கும். வெளிப்பார்வைக்கு, பெரிய பாவத்தை செய்யாமல் இருக்கலாம். ஆனால், எத்தனை முறை நாம் வசனத்தை அசட்டை பண்ணியிருக்கிறோம். பலவேளைகளில், பிரசங்க வடிவத்திலே, போதனை வடிவத்திலே, ஆலோசனை வடிவத்திலே வசனங்களை கேட்க நேரிட்டபோது, அவற்றை மெத்தனமாக எடுத்திருக்கிறோம் தீவிரமாக எடுக்கத் தவறியிருக்கிறோம். நம்மையே ஆராய்ந்து, மனந்திரும்புவோமாக.

## "சகோதரனை, சத்துருவைக் கொண்டு அடித்தாயே"

*(II சாமு. 12:9)*

"...ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து... அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்று போட்டாய்".

இரண்டாவது புகார் உரியாவை சத்துருவின் கையினால் அழித்தாயே; உனது கையினால் அழித்திருந்தால் கூட, உன்பாவத்தின் தன்மை கொஞ்சம் குறைவுள்ளதாகயிருந்திருக்குமே. அதுதான், எனது மனதை நோகடிக்கிறது.

நாம் பலவேளைகளில் இவ்வாறு செய்கிறோம். நமக்கு ஒருவரைப் பிடிக்கவில்லையென்றால் அவரோடு நேரடியாக மோதாமல், இன்னொருவரை அவரோடு மோத விடுகிறோம். வேறு எவரையாவது தூண்டிவிட்டு, ஒன்றுமறியாத அப்பாவி போல தோற்றமளிக்கிறவர்கள் பலர் உண்டு உலகத்திலே.

இது ஆள் வைத்து அடிப்பது போன்றது.

*(II சாமு. 12:13,14)*

*"அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில் : நான் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தேன் என்றான். நாத்தான் தாவீதை நோக்கி நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்.*

**ஆனாலும், இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய்ச் சாகும் என்று சொல்லி..."** தாவீது 51வது சங்கீதம் பாடி, தனது பாவங்களை அறிக்கையிட்டதும், கர்த்தர் அவனை மன்னித்து விட்டதும் உண்மைதான். ஆனாலும், தேவன் அவனை சிட்சிக்க வேண்டியதாயிற்று இல்லையென்றால், கர்த்தருடைய எதிரிகளாகிய விழுந்துபோனத் தூதர்கள் கூறுவார்கள், "தேவன் தமது பிள்ளைகளைத் தண்டிப்பதேயில்லை: மற்றவர்களை மட்டும் தண்டிக்கிறார்."

தாவீதின், பாவத்தால் சத்துருக்கள் தூஷிப்பதற்கு இடமுண்டாயிற்று. நாம் பாவம் செய்யும்போது கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்பட காரணமாகிவிடுகிறோம்.

*(நீதிமொழி 11:31)*

**"இதோ, நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே, துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம்..."**

நீதிமானின் பாவங்களை, மன்னிக்கிற போது, அவற்றிற்காக குறைந்தபட்ச சிட்சையை நீதிமானுக்கு அளித்து, அவனது பாவங்களுக்கு பூமியிலேயே தேவன் முடிவுகட்டுகிறார். எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம். எந்த அளவினால் அளக்கிறோமோ, அதே அளவினால் நமக்கும் அளக்கப்படும்.

*(II சாமு.12:15)*

*"அப்பொழுது கர்த்தர் உரியாவின் மனைவி தாவீதுக்குப் பெற்ற* **ஆண்பிள்ளையை அடித்தார்.."**

*கர்த்தர் தண்டிக்கவில்லை: அடித்தார்: சிட்சித்தார்: சிட்சைக்கும்,* தண்டனைக்கும் வேறுபாடு உண்டு. பாவத்திலேயே வாழும் போது, கிடைப்பது தண்டனை. பாவத்திலிருந்து மனந்திரும்பும்போது கிடைப்பது சிட்சை.

*(எபிரெயர் 12:7-11)*

''நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால், தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லோருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும் நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள், நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா?

அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சகாலம் சிட்சித்தார்கள் இவரோ; தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்திற்காகவே நம்மை சிட்சிக்கிறார்.

எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்''

## சிட்சை இரண்டு கிரியைகளைச் செய்கிறது

1) தேவனுடைய பரிசுத்தத்தில் நம்மை பங்குள்ளவர்கள் ஆக்குகிறது.

2) நீதியாகிய சமாதான பலனைத் தருகிறது.

'பாவிக்கும் தண்டனை, எனக்குமா தண்டனை? எனக் கேட்காதிருப்போம். அவர் நம்மைத் தண்டிக்கவில்லை சிட்சிக்கிறார்.

## இழப்பை இருவிதங்களில் ஈடுகட்டினார்

*(II சாமு. 12:24-26,29)*

''பின்பு தாவீது, தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொல்லி, அவளிடத்தில் போய், அவளோடே சயனித்தான் அவள் ஒரு குமாரனைப் பெற்றாள் அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான், அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார்.

அவர் தீர்க்கதரிசியாகிய நாத்தானை அனுப்ப, அவன் கர்த்தரின் நிமித்தம் அவனுக்கு யெதிதியா என்று பேரிட்டான்.

அதற்குள்ளே யோவாப், அம்மோன் புத்திரருடைய ரப்பா பட்டணத்தின் மேல் யுத்தம்பண்ணி, ராஜதானியைப் பிடித்து,

அப்படியே தாவீது ஜனங்களையெல்லாம் கூட்டிக் கொண்டு, ரப்பாவுக்குப் போய் அதின்மேல் யுத்தம்பண்ணி அதைப்பிடித்தான்"

தாவீதுக்கும், பத்சேபாளுக்கும் பிறந்த முதல் மகன் மரித்துப்போனான். மரித்துப்போன மகனுக்கு பதிலாக ஞானியாக சாலமொனைத் தந்தார். அவனிடத்தில் தேவன் அன்பாயிருந்தார். நாத்தான் தீர்க்கதரிசியை அனுப்பி தேவன் அவனுக்கு பெயர் சூட்டினார். இழந்துபோனேன், என்று துக்கிக்க வேண்டியதில்லை. இழப்பை ஈடுசெய்கிற தேவ அன்பு நமக்குண்டு.

இரண்டாவது ஈடுகட்டல்:- அம்மோன் புத்திரருக்கும், இஸ்ரவேலுக்கும் இரண்டு ஆண்டுகளாகப் போர் நடந்து கொண்டிருந்தும், அதுவரை எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. தாவீது தன்னைக் கர்த்தருக்குள் சரிப்படுத்திக்கொண்டவுடனே அப்போரில் வெற்றி கிடைத்தது. உள்ளே குடும்பத்திலேயும் ஆசீர்வாதம்; வெளியே நாட்டிலேயும் வெற்றி.

நமது முயற்சிகளெல்லாம் தொடர்ந்து தோல்வியடைந்து கொண்டே வருமானால், ஒரு வேளை நமது தனிப்பட்ட வாழ்வை சரி பண்ணாதது காரணமாக இருக்கலாம். நமது வாழ்வை சோதித்துப் பார்ப்போம். தாவீது தனது தனிப்பட்ட வாழ்வை நேராக்கியவுடனே, வெற்றியைப் பெற்றுவிட்டான். நமது தேவன் இழந்து போனவற்றை ஈடுகட்டுகிற தேவனல்லவா!

## விண்ணப்பித்ததற்கு மாறாக விளைவுகள் அமையும் போது...

*(II சாமு 12:16,19,20)*

"அப்பொழுது தாவீது அந்தப் பிள்ளைக்காகத் தேவனிடத்தில் பிரார்த்தனை பண்ணி உபவாசித்து, உள்ளே போய், இரா முழுவதும் தரையிலே கிடந்தான்....

தாவீது தன் ஊழியக்காரர் இரகசியமாய்ப் பேசிக் கொள்ளுகிறதைக் கண்டு பிள்ளை செத்துப் போயிற்று என்று அறிந்து, தன் ஊழியக்காரரை நோக்கி பிள்ளை செத்துப் போயிற்றோ என்று கேட்டான். செத்துப் போயிற்று என்றார்கள்.

அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக் கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்து கொண்டு, தன் வீட்டுக்கு வந்து போஜனம் கேட்டான்..."

தாவீது தனது பிள்ளை வியாதியாக இருந்தபோது, உபவாசித்து ஜெபித்தான். மரித்த போதோ, குளித்து, உடை மாற்றி, உணவு உட்கொண்டான். அவனது செய்கை அவனது ஊழியக்காரருக்கு புரியவில்லை. அவனிடம் கேட்டேவிட்டார்கள். அவன் பதிலளித்தது, ''பிள்ளைக்கு உயிர் இருக்கும்போது கர்த்தர் ஒரு வேளை அதற்கு இரங்குவாரோ, என்று முயற்சித்துப் பார்த்தேன். துக்கத்தோடு ஜெபித்தேன்; இப்போது பிள்ளை மரித்து விட்டது. இனி துக்கித்து என்ன பயன்?''

பொதுவாக பிள்ளை வியாதியாயிருக்கும்போது துக்கிப்பதைவிட, பிள்ளை இறந்த போனபிறகு, எவரும் அதிகமாக அழுவார்கள். இது ஜென்மசுபாவம் ஆனால், ஆவிக்குரிய கண்ணோட்டம் என்ன? 'என்னால் எவ்வளவுக்கதிகமாய் ஜெபிக்க முடியுமோ, அவ்வளவு ஜெபிப்பேன் அதற்கு மாறாகக் கர்த்தர் செய்தால், கர்த்தரின் முடிவை மனதார ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து செல்வேன்'

பல வேளைகளில், நமது ஜெப வாழ்விலே, ஆவிக்குரிய அணுகுமுறைக்குப் பதிலாக, ஜென்ம சுபாவத்தையே வெளிப்படுத்துகிறோம். நமது ஜெபத்திற்கு மாறாக முடிவுகள் அமையுமானால், நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? சிலவேளைகளில், உலகத்தாரை விட மோசமாக, நாம் பிரதிபலிக்கிறோம். துக்கப்படவோ, கோபப்படவோ, விரக்தியடையவோ செய்கிறோம்.

தாவீது ஜெபத்தில் கேட்ட வேண்டுதலுக்கு, தேவன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். அதைத் தாவீதும் ஏற்றுக் கொண்டான்.

பல வேளைகளில், கர்த்தர் எதற்கு முற்றுப்புள்ளி வைத்தாரோ, அதை 'கமா' வாக்கி, அதையே எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட நபரை மணந்துகொள்ள வேண்டும் என நீங்கள் ஜெபித்திருக்கலாம். நீங்கள் ஜெபித்ததற்கு மாறாக, இன்னொரு நபரை நீங்கள் மணந்து, பிள்ளைகளையும் பெற்ற பிறகு, 'அந்த நபரை மணந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே' என்று எண்ணினாலோ, பேசினாலோ, நீங்கள் தேவன் முற்றுப்புள்ளி வைத்ததை 'கமா' வாக்குகிறீர்கள், என்றே பொருள். அவ்வாறு பேசுகிறவர்களை நான் கண்டிருக்கிறேன்.

*(II சாமு.12:28)*

***"நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என் பேர் வழங்காதபடிக்கு, நீர் மற்ற ஜனங்களைக் கூட்டிக் கொண்டு வந்து, பட்டணத்தை முற்றுகை போட்டு பிடிக்க வேண்டும் என்று சொல்லச்சொன்னான்."***

இரவும் பகலும்-பனியிலும் வெயிலிலும் வீட்டை விட்டு விட்டு தூரத்திலே கடுமையாக உழைத்துப் போர்புரிந்த யோவாப், வெற்றிக்கனி கிடைக்கின்ற வேளையிலே, கனியைப் புசிக்கிறதற்கு விரும்பாமல், தாவீதை அழைத்தான். காரணம், தனது பெயர் வழங்கிவிடக்கூடாது என்பதிலே கவனமாயிருந்தான்.

ஜென்ம சுபாவம் எப்படிப்பட்டது? தான் செய்யாததையும், தான் செய்தது போலக் காட்டி, பெயர் வாங்கத் துடிக்கும்.

ஆவிக்குரிய தன்மை எத்தகையது? தானே கடினமாக உழைத்து, ஒன்று கிடைத்தாலும், அதற்குரிய மகிமை தனக்கு வந்துவிடக்கூடாது என்பதிலே கவனமாயிருக்கும்.

சில கூட்டங்களிலே, நன்றியறிவிப்பிலே, தங்களது பெயர் விடுபட்டுப் போனால், கோபப்படுகிறவர்கள் உண்டு. ஆகையினால்தான், சில நிகழ்ச்சிகளிலே நீண்ட நேரம் நன்றியறிவிப்புக்கும், குறைந்த நேரம் தேவச்செய்திக்கும் ஒதுக்குகிறார்கள். 'அவருக்கு நன்றி' இவருக்கு நன்றி நாற்காலிகளை கொண்டுவந்தவருக்கு நன்றி: நாற்காலிகளை போட்டவருக்கு நன்றி..." என்று அந்தப் பட்டியல் நீளும்.

மனிதனுடைய இயற்கையான சுபாவம், தன்னைப் பிறர் பாராட்ட வேண்டும், என எதிர்ப்பார்த்தல் ஆகும்.

ஆனால், யோவாப் என்ன விரும்பினான்? என் ராஜாவின் பெயர் வழங்க வேண்டும். ஒரு தலைவன் தனது சகாக்கள் நன்றாக பணிபுரியும்போது, அவர்களைப் பாராட்டுவது நன்று. ஆனால், பாராட்டையே எதிர்பார்த்து செயல்பட்டால், உங்கள் வாழ்வு சுவையில்லாமல் போய்விடும். வாழ்விலே மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் இருப்பதற்கு ஒரு வழி, பாராட்டை எதிர்பாராதிருப்பது. பிறரைப் பாராட்டுவதையே நோக்கமாகக் கொண்டால்

மகிழ்ச்சியடைவோம். என்னைப் பாராட்ட வேண்டும். என்று எதிர்பார்த்தால் ஏமாற்றங்களையே சந்திப்போம். அதோடு சோர்ந்து போய், படிப்படியாக நமது உற்சாகத்தையே இழந்து விடுவோம்.

பிறரைப் பாராட்டக் கற்றுக் கொண்டவனே வசீகரம் (Charism) கொண்ட தலைவனாக இருப்பான். பாராட்டை எதிர்பார்க்கவில்லை, என்பதற்காக பிறர் பாராட்டும் போது அதை மறுக்காதீர்கள், ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த தன்மையைக் கடைபிடித்தால், நமது சுபாவமே, மாறிவிடுவதோடு, நாம் யாவராலும் விரும்பப்படக்கூடியவர்களாகி விடுவோம்.

படை நடத்திப் போர் புரிந்து பாடுபட்ட தனக்குப் பெயர் வேண்டாம், தனது தலைவனுக்கு பேர் உண்டாகட்டும், என்று எண்ணிய யோவாபின் மனப்பான்மையை எனக்கும், தந்தருளும் ஆண்டவரே என்று வேண்டிக்கொள்ளுவோம்.

*பிதாவே, நான் மனந்திரும்பும்படி, நீர் காத்திருக்கிற அவகாசத்தை வீணாக்கிவிடாதபடி காத்தருளும். உமது வசனத்தை அசட்டை செய்யாது, அதற்கு அஞ்சி நடுங்க உதவும். சகோதரனை சத்துருவினிடம் காட்டிக் கொடுக்காதபடி காத்தருளும். பரிசுத்தத்தையும், பலனையும் எனக்கு அருளுகிற உமது சிட்சைகளுக்காக நன்றி: எங்கள் இழப்பை, இரண்டு விதங்களில் ஈடுகட்டுகிற தேவனே, துதிக்கிறோம். எனது ஜெபம் கேட்கப்படாதபோது, அதை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து முன்னேற பெலன் தாரும். பாராட்டை எதிர்பாராது, பிறரைப் பாராட்ட நாடுகின்ற தன்மையுள்ள பரவச வாழ்வைத் தந்தருளும். ஆமென்.*

**18**

# அக்கறையற்ற தந்தை - அலங்கோலமான பிள்ளைகள்

*(II சாமு 13:6,7)*

''அப்படியே அம்னோன் வியாதிக்காரன் போல் படுத்துக் கொண்டு, ராஜா தன்னைப் பார்க்க வந்தபோது, ராஜாவை நோக்கி என் சகோதரியாகிய தாமார் வந்து நான் அவள் கையினாலே சாப்பிடும்படிக்கு, என் கண்களுக்கு முன்பாக இரண்டு நல்ல பணியாரங்களைப் பண்ணும்படி உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான்.''

அப்பொழுது தாவீது, வீட்டுக்குத் தாமாரிடத்தில் ஆள் அனுப்பி, நீ உன்சகோதரனாகிய அம்னோன்வீட்டுக்குப் போய், அவனுக்குச் சமையல் பண்ணிக்கொடு என்று சொல்லச் சொன்னான்.''

தாவீது ஆவிக்குரியவன்தான்; ஆற்றல்மிக்க தலைவன்தான்: ஆயிரம் தன்மைகள் உண்டு அவனைப் பாராட்ட ஆனால், அவன் சிறந்த தகப்பனாக குடும்பத்தலைவனாகத் திகழவில்லை என்பது கசப்பான உண்மை. தேவனின் இதயத்திற்கேற்றவன்தான், மக்களின் மனங்கவர்ந்த அரசன்தான் ஆனால், பிள்ளைகளுக்குப் பொறுப்புள்ள தந்தையாக விளங்குவதில் தோற்றுவிட்டான். அதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம்.

1) அவனது பாவங்களின் பிரதிபலிப்புகள்

2) சவுலுக்கு தப்ப, நிலையற்று ஓடிக்கொண்டிருந்த நிலை, இவை இரண்டும் தவிர்க்க முடியாதவை

3) தனது வேலைப் பளுவினால், பிள்ளைகளுக்கு நேரம் ஒதுக்காமை

அம்னோன் கேட்டான், 'தாமாரை எனக்கு பணியாரம் சுட்டுக் கொடுக்கும்படி அனுப்புங்கள். உடனே, தாவீது அவளை போகச் சொல்கிறான். எதையும் புரிந்துகொள்ளவோ, பிள்ளைகளின் கோரிக்கைகளை ஆராய்ந்து பார்க்கவோ அவனுக்கு நேரமில்லை. அவர்களோடு அவனுக்கு தகவல் இடைவெளி (Communication gap) ஏற்பட்டுவிட்டது. அதனால்தான், அத்தனை அலங்கோலங்களும்

அவனுக்கு ஏற்பட்டன. அவனது வேலைப்பளுவினால், பிள்ளைகளின் நிலைமைகளை அலசிப்பார்க்க, அவன் நேரம் ஒதுக்கத் தவறிவிட்டான்.

## தன் விருப்பத்திற்கு விடப்பட்ட பிள்ளை தலைக்குனிவை உண்டுபண்ணும்

அம்னோனின் கோரிக்கையை, உடனே கொடுத்துவிட்டான்; அது தாமாரின் மானபங்கத்தில் முடிந்தது. வசனம் 27ல் அப்சலோம் தனது விருந்துக்கு, அனைத்து அரசகுமாரர்களையும் அனுப்பிவைக்குமாறு, தாவீதிடம் கேட்டான். அப்படியே செய்தான் தாவீது; அது அம்னோனின் கொலையிலே முடிந்தது.

பிள்ளைகள் கேட்டதையெல்லாம் கொடுத்தால், கேடுகளே உண்டாகும். பிள்ளைகளின் தாளத்திற்கேற்ப பெற்றோர் ஆடினால், அழிவு மட்டுமே சம்பவிக்கும்.

அம்னோன் 'வியாதி' என்றான் பணியாரம் சாப்பிட்டால் சுகமாகிவிடும் என்பது போல மறைமுகமாகக் கூறினான். உடனே தாவீது தலையசைத்து விட்டான். குடும்பமே அசைந்து போய்விட்டது.

பணியாரம் சாப்பிட்டு, எந்த வியாதியாவது குணமாகுமா? என்று யோசித்துப் பார்த்தானா, தாவீது? (அப்படியென்றால், மருத்துவமனைகளில் மருந்துகளுக்குப் பதில் பணியாரம் கொடுக்கலாமே!)

-பணியாரம் வேண்டுமென்றால் கூட, அது தாமாரின் கையால்தான் சாப்பிடவேண்டுமா? வேறு யார் கையிலும் சாப்பிடக் கூடாதா? என்றும் யோசிக்கத்தவறி விட்டான் தாவீது.

நாமாக இருந்தால், 'பணியாரம் சாப்பிட்டால் - அதுவும் அந்த வாலிபப்பெண்ணின் கையினால் சாப்பிட்டால்தான் சுகமாகுமோ? என்று இரண்டு அடி கொடுப்போம்.

பிள்ளைகள்தான் என்றில்லை. யாராகிலும் நம்மிடம் 'தேவை' என்று வந்து கோரிக்கைகள் வைத்தால், அதைப்புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். சக விசுவாசியோ- நண்பர்களோ- எவர் கோரிக்கை விடுத்தாலும், அதை நேரம் எடுத்து, மனதைச் செலுத்தி, ஆழமாக சிந்தித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவரிடத்தில், இன்னொருவர் வந்து 'இந்தக் காகிதத்திலே கையெழுத்துப் போடு' என்றார், இவரும் போட்டுக்கொடுத்தார். சிறிது காலம் கழித்து, '10 ஆயிரம் ரூபாய்க்கு நீ தான் பொறுப்பாளி, 'என்று நீதிமன்ற நடவடிக்கை, இவர் மீது வந்தது. பிறகுதான் தெரிந்தது, இவர்

போட்டது கடன் உத்திரவாதத்துக்கான (Guarantee) கையெழுத்து என்று.

## கண்டிப்புத் தன்மையில் கசிவு ஏற்படுவது, எப்பகுதியில்?

*(II சாமு. 13:5)*

**"அப்போது யோனதாப் அவனைப் பார்த்து: நீ வியாதிக்காரனைப் போல் உன் படுக்கையின் மேல் படுத்துக்கொள். உன்னைப் பார்ப்பதற்கு உன் தகப்பனார் வரும்போது..." (வசனம்:23) "இரண்டு வருஷம் சென்ற பின்பு, அப்சலோம்... ராஜகுமாரர் எல்லோரையும் விருந்துக்கு அழைத்தான்"**

தாவீதின் கண்டிப்புத் தன்மை, எந்தப் பகுதிகளில் பெலவீனமாக இருந்தது, என்று அம்னோனும், அப்சலோமும் அறிந்திருந்தார்கள்.

-பிள்ளைக்கு வியாதி, என்றால் தாவீது என்ன கேட்டாலும், செய்துவிடுவான்.

-2 ஆண்டுகள் போனால், எப்படிப்பட்ட தீவிரமான அசம்பாவிதத்தையும் தாவீது மறந்து விடுவான்.

இவைதான், பிள்ளைகள் தங்கள் தகப்பனாகிய தாவீதிடம் கண்டுபிடித்து வைத்திருந்த பெலவீனங்கள்.

*(II சாமு. 13:27)*

**"அப்சலோம் பின்னையும் அவனை வருந்திக் கேட்டுக்கொண்டபடியினால்,..."** 'வருந்தி கேட்டுக்கொண்டது,' என்பது இந்தி மொழி பெயர்ப்பில் 'கட்டாயப்படுத்துதல்,' 'அழுத்தம் கொடுத்தல்' போன்றதொரு பொருளில் கூறப்பட்டுள்ளது.

நம்முடைய பிள்ளைகளுக்கு, நம்மை எங்கு அழுத்தினால், என்ன காரியம் நடக்கும் என்று தெரியும் நமது பிள்ளைகளின் தேவையை - கோரிக்கையை, சரியாகப் புரிந்து கொண்டு செயல்படாவிட்டால், அது நமக்கும், நமது பிள்ளைகளுக்கும் பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தும்.

பிள்ளைகள்தான் என்றல்ல, நம்மிடத்தில் கோரிக்கை வைக்கிற அனைவருக்கும் இம்முறையை கையாள வேண்டும். ஊழியத்திலே, பணியிலே எவ்வளவு பெரிய தலைவனாக இருந்தாலும், இந்தப் பகுதியில் வழுவினால், பெரிய வீழ்ச்சியைச் சந்திக்க வேண்டியது வரலாம்.

## ஆலோசனையை எடை போடுவது எப்படி?

**(II சாமு. *13:2,3*)**

''தன் சகோதரியாகிய தாமாரினிமித்தம் ஏக்கங்கொண்டு வியாதிப்பட்டான்; அவள் கன்னியாஸ்திரீயாயிருந்தாள்: அவளுக்குப் பொல்லாப்புச் செய்ய, அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது.

அம்னோனுக்கு, தாவீதுடைய தமையன் சிமியாவின் குமாரனாகிய யோனதாப் என்னும் பேருள்ள ஒரு சிநேகிதன் இருந்தான். அந்த யோனதாப் மகா தந்திரசாலி.''

தனது சகோதரிக்குப் பாதிப்பு உண்டாக்க தயங்கிக் கொண்டிருந்த, அம்னோனுக்குள் துணிகரம் ஏற்படுத்தியது, அவனது நண்பனின் ஆலோசனைதான். அவனை 'மகா தந்திரசாலி' என வேதம் வர்ணிக்கிறது. நண்பனது ஆலோசனை, அம்னோனை கவிழ்த்துப் போட்டுவிட்டது. அந்த ஆலோசனையினால், அவனது நண்பனுக்கு எந்த லாபமுமில்லை: ஆனால், அவனுக்கு இழப்பு ஏற்பட்டுவிட்டதே?

ஓர் ஆலோசனையை எடை போடும்போது, 'இந்த ஆலோசனையினால், அதைக் கூறுகிறவருக்கு எந்த லாபமுமில்லை! ஆகவே, இந்த ஆலோசனை, ஏற்ற ஆலோசனையே' என்று நாம் முடிவுசெய்யக்கூடாது. ஆலோசகருக்கு லாபம் இருக்கிறதா என்பது முக்கியமல்ல, 'எனக்கு இழப்பு ஏற்படுமா? இந்த ஆலோசனை எனக்கு பாதிப்பை உண்டாக்குமா?' என்ற கண்ணோட்டமே சரியான எடைக்கல்.

லாபநோக்கில்லாத நண்பனின் ஆலோசனை, அந்நண்பனே தனது தோழன் அம்னோனை சாகக் கொடுக்கிற நிலைக்கு, பிற்காலத்தில் கொண்டுவந்து நிறுத்தியது.

சிலர் 'இந்த ஆலோசனையை நான் உங்களுக்குக் கூறுவதனால் எனக்கு என்ன லாபம்?' என்ற முன்னுரையோடு அறிவுரை வழங்குவார்கள். இத்தகைய தந்திரசாலிகளின் வலையிலே சிக்கிக் கொண்டவர்கள் பலர். நண்பனின் ஆலோசனையாயிற்றே என்று கருதாமல், நட்டம் ஏற்படுத்துகிற ஆலோசனையா? இல்லையா என்று அலசிப்பார்ப்பதே சாலச் சிறந்தது.

ஆலோசனையைக் கேட்பதற்கு மட்டுமல்ல, ஆலோசன்யைக் கூறுவதற்கும் இதுவே அளவுகோல். இவ்வாலோசனை லாபத்தை ஏற்படுத்துமா என்ற பார்வைக்கு இடங்கொடாமல், இது யாருக்கேனும் பாதிப்பை ஏற்படுத்திவிடுமா என்று ஆராய்ந்து, ஆலோசனை வழங்குவதே பாதுகாப்பானது.

இதையே இயேசு வேறுவிதத்தில் அழகு மொழியாகச் சொன்னார் 'உன்னிடத்தில் அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக' ''மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்...''

இந்த வழிமுறையைப் பின்பற்றுகிறவர்கள், யாரையும் காயப்படுத்த மாட்டார்கள். நாம் பிறருக்குக் காயங்கட்ட வேண்டுமே தவிர, பிறரைகாயப்படுத்தக்கூடாது. 'பிறரைக்காயப்படுத்துமா?' என்ற கேள்வியையே, முதல் சோதனையாகச் செய்து விட்டு, பிறகு 'இவ்வாலோசனையால் யாருக்கு லாபம்?' எனச்சிந்தித்துப் பார்ப்போம்.

*பிதாவே, நான் ஆலோசனையைக் கேட்டாலும் அல்லது பிறருக்குக் கூறினாலும், மேற்சொன்ன சோதனையைச் செய்து பார்க்க, உதவுவீராக ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை என்னில் செயல்படச் செய்வீராக. எங்களது பிள்ளைகளைத் தங்கள் விருப்பத்திற்கு விடாமல், அவர்களது கோரிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு நேரம் செலவிட பெலப்படுத்தும். பிள்ளைகளைக் கையாள்வதில் எங்களது பெலவீனமான பகுதிகள் எதுவென்று அடையாளங்கண்டு, சரிப்படுத்திக் கொள்ள கிருபை தாரும். ஆமென்.*

19

# கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்; கண் மூடித்தனமாக அல்ல

II சாமுவேல் 13ஆம் அதிகாரத்தில், மூன்று கதாபாத்திரங்களிடமிருந்து, கற்றுக்கொள்ள வேண்டியவை உண்டு.

1. அம்னோன், இச்சைக்கும், அன்புக்கும் வேறுபாடு அறியாதவன்
2. தாமார், கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிந்து கற்பிழந்தவள்
3. அப்சலோம், பிறருக்குப் போதித்து விட்டு, தானே அதை மீறியவன்.

## தலைகீழாக மாறும் தற்காலிக ஆசைகள்

*(II சாமு. 13:15)*

*''பிற்பாடு அம்னோன் அவளை மிகவும் வெறுத்தான். அவன் அவளை விரும்பின விருப்பத்தைப் பார்க்கிலும், அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாகயிருந்தது. ஆகையால்: நீ எழுந்து போய்விடு என்று அம்னோன் அவளோடே சொன்னான்''.*

ஒரே நாளில் ஒரு பெரிய தலைகீழ் மாற்றம் அம்னோனுக்குள் எழும்பினது ஏன்? தாமாரை விரும்பி, அந்த நினைவிலேயே ஏக்கங்கொண்டு வியாதிப்பட்ட நிலையிலிருந்து, அவளை வெறுத்து, வேலைக்காரனை விட்டு, வெளியே தள்ளுகிற நிலைக்கு ஒரே நாளில் வந்தது ஏன்? காமத்திற்கும், காதலுக்கும் வேறுபாடு தெரியாததே அன்பிற்கும், அற்ப ஆசைக்கும் வித்தியாசம் காணாததே.

நமக்குள் எழும்புகிற இச்சைகளுக்கு, மோகத்திற்கு ஆசைகளுக்கு நாம் வேறு பெயர் சூட்ட முடியும். ஒரு பெண்ணையோ ஆணையோ விரும்புவது மட்டுமல்ல, வேறு எதை இச்சிப்பதற்கும் இது பொருந்தும்.

இச்சைகளுக்கு தரப்படுகிற பொய்யான இனிய பெயர்கள், கிறிஸ்தவ உலகில் பல.

1. தேவசித்தம்　　2. அன்பு

3. கரிசனை　　4. விசுவாசப்பார்வை

5. ஆவியில் உணர்ந்தேன்

நமது ஆசைகளுக்கு, தேவசித்தம் என்று எப்படி பெயர் சூட்டுகிறோம்? 'வேதாகமத்தைத் திடீரென்று திறந்து, ஒரு வசனத்தில் கை வைத்தேன். அதில்.. ''செய்...'' என்றிருந்தது. ஆகவே செய்தேன்' என்று சொல்கிறவர்கள் உண்டு. வேதாகமத்திலே 'போ; பார், செய்' போன்ற சொற்கள் அடங்கிய வசனங்கள் ஏராளம் இவ்வாறு செய்துவிட்டு; 'தேவசித்தம்' என்பார்கள்.

தேவசித்தம், தேவ ஒழுங்கிற்கு உட்பட்டது. வசனத்தின் படியும், இயற்கையின் படியும் தேவன், ஒழுங்குகளை நியமித்திருக்கிறார். அவற்றிற்கு உட்படாதவை தேவசித்தமாக இருக்கமுடியாது.

நமக்குள் எழும்புகிற ஆசைகள், இச்சைகள், மோகங்கள் யாவற்றையும் 'ஆவியில் உணர்ந்தேன்' என்றோ, 'விசுவாசக்கண்களால் பார்க்கிறேன்' என்றோ அழைப்போமென்றால், அதிலேயே பிடிவாதமாக இருப்போமென்றால், நமக்கு இழப்புகள் ஏராளமாக இருக்கும். ஒரு காரியம் தேவசித்தமாக இருக்குமானால், கர்த்தரே அதை நிறைவேற்றுவார். அதற்காக நாம் ஒன்றும் பெரிதாகச் செய்ய வேண்டியதில்லை.

அன்பு என்றும், கரிசனை என்றும் சுய ஆசைகளுக்குப் பெயர் சூட்டி, நம்மை நாமே வஞ்சியாதபடி, தேவன் காப்பாராக.

## சர்ப்பத்தைப் போல வினா!

*(II சாமு. 13:7,8)*

''அப்பொழுது தாவீது வீட்டுக்குத் தாமாரிடத்தில் ஆள் அனுப்பி, நீ உன் சகோதரனாகிய அம்னோன் வீட்டுக்குப் போய், அவனுக்கு சமையல் பண்ணிக்கொடு என்று சொல்லச் சொன்னான்.

தாமார் தன் சகோதரனாகிய அம்னோன் படுத்துக்கொண்டிருக்கிற வீட்டுக்குப் போய்...''

தாமார் தனது தகப்பனுக்குக் கீழ்ப்படிந்துதான், அம்னோன் வீட்டுக்குச் சென்றாள். அங்கு அவள் சென்றதுதான், அவளது வாழ்வை சிதைத்துவிட்டது. 'பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்' என்றே வேதாகமம் கூறுகிறது. கண்மூடித்தனமாக, கண்டதற்கெல்லாம் கீழ்ப்படியுங்கள் என்று கூறவில்லை? பெற்றோருக்குக் கீழ்ப்படிதலை மட்டுமல்ல, நமக்கு மேலான அதிகாரத்திலுள்ள எவருக்கும், கீழ்ப்படிதலை, நாம் இந்த வசனத்தின் வெளிச்சத்தில் வரையறை செய்ய முடியும்.

தந்தையின் சொல்லைத் தட்டாமல், கீழ்ப்படிந்து கெட்டுப்போன தாமாருக்கு அழகு இருந்தது. சீர்தூக்கிப் பார்க்கும் அறிவு இல்லாமல் போய்விட்டது. அழகும், அறிவும் ஒன்றிணைந்து போவது அபூர்வம்.

அறிஞர் பெர்னாட்ஷாவிடம் அழகி ஒருத்தி கேட்டாள், 'நாம் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம் அப்போது எனது அழகோடும், உங்களது அறிவோடும் பிள்ளை பிறக்கும்.' அதற்கு பெர்னாட்ஷா, 'எனது அழகோடும், உனது அறிவோடும் பிள்ளை பிறந்து விட்டால், என்ன செய்வாய்? என்று பதிலுரைத்தார்.

அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது. பேதைப் பெண் தாமாரும், அப்படித்தான் வஞ்சிக்கப்பட்டாள்.

ஆகவே தான், கர்த்தர் சொன்னார், ''புறாவைப்போல கபடற்றவர்களாயும், சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவர்களாயும் இருங்கள்''.

தாமார் கபடற்றவளாய் இருந்தாள். ஆனால், வினாவுள்ளவளாய் இருக்கத் தவறி விட்டாள். சகோதரிகளுக்கு குறிப்பாக ஓர் ஆலோசனை கூற விரும்புகிறேன். உங்களை யாரோ ஒருவர் நேசிக்கிறார் என்று நம்பி, உங்களையே ஒப்புக் கொடுக்கிற நிலைபற்றி எச்சரிக்கையாக இருங்கள்: கசக்கிப் பிழிந்து விட்டு தூர எறிந்து விடுவார்கள்.

அனுதாப அலையினால் அடித்துச் செல்லப்படாதபடி எச்சரிக்கை கொள்வோம். அம்னோன் வியாதியாயிருக்கிறான் என்று தாமார் கொண்ட அனுதாபமே அவளை சிக்கவைத்துவிட்டது. ஒருவருக்காக ஒருவர் பரிதாபப்படுவது நல்லதுதான். ஆனால், அதன் அடிப்படை என்ன என்று சிந்திக்க வேண்டியது அவசியம்.

## ஊருக்கு உபதேசம், உள்ளுக்குள் ஒரு வேஷம்

**(II** *சாமு 13:20 & 22)*

''அப்பொழுது அவள் சகோதரனாகிய அப்சலோம் அவளைப் பார்த்து, உன் சகோதரனாகிய அம்னோன் உன்னோடிருந்தானோ? இப்போதும் என் சகோதரியே நீ மவுனமாயிரு, அவன் உன்னுடைய சகோதரன். இந்தக் காரியத்தை உன் மனதிலே வைக்காதே என்றான். அப்படியே தாமார் தன் சகோதரனாகிய அப்சலோமின் வீட்டில் தனித்துக் கிலேசப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அப்சலோம் அம்னோனோடே நன்மையாகிலும், தீமையாகிலும்

பேசவில்லை. தன் சகோதரியாகிய தாமாரை அம்னோன் கற்பழித்த காரியத்தினிமித்தம் அப்சலோம் அவனைப் பகைத்தான்.

பிறருக்கு நல்உபதேசத்தைக் கற்பித்துவிட்டு, தானே அதை மீறி, சிக்கிக் கொள்கிற ஒரு வேதனையான கதாபாத்திரம் அப்சலோம் தனது சகோதரியைப் பார்த்து, மனதில் வைக்காதே அவன் உன்னுடைய சகோதரன், குடும்ப பிரச்சனை வெளியிலே வர வேண்டாம் நடந்தது நடந்துவிட்டது. அமைதியாக இரு என்று நல்லாலோசனை வழங்கினான் ஆனால், அப்சலோமோ நடந்ததை மனதில் வைத்து, பகை வளர்த்து இரண்டு ஆண்டுகள் கழித்து பழிக்குப் பழி வாங்கினான்.

'ஊருக்குத்தான் உபதேசம்' என்ற மனப்பான்மையில் அப்சலோம் சிக்கிக் கொண்டான். நாமும் இந்த வலையில் விழ வாய்ப்புண்டு. தனது குடும்ப மானத்தை வெளியே விட்டுவிடக்கூடாது, பாதிக்கப்பட்டத் தன் சகோதரியைப் பாதுகாக்க வேண்டும், என்ற நோக்கத்தில் செயல்பட்ட அப்சலோம், பிற்காலத்தில் நாட்டை விட்டே ஓட வேண்டிய நிலை ஏற்பட்டதற்குக் காரணம், இதுவே: சகோதரிக்கு புத்தி சொன்னவன், தனது புத்தியைக் கெடுத்துக்கொண்டதே. 'மனதிலே வைக்காதே' என கூறினவன், மனதில் வைத்துக்கொண்டதே. இறுதியாக ஒரு மரத்தில் தொங்கி மரிக்க வேண்டிய நிலைக்கு ஆளானதற்கு இதுவே காரணம்.

இயேசு தன் வாழ்வில் கடைபிடித்ததை பிரசங்கித்தார். பிரசங்கிப்பது எளிது. ஆலோசனை கூறுவது எளிது. கடைபிடித்து, பிரசங்கிப்பது கடினம். *(மத் 5:19)*

''ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்: இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் எனப்படுவான்.''

*பிதாவே, பிறருக்கு நாங்கள் கூறுகிற ஆலோசனையை, நாங்கள் கடைபிடித்து வாழ உதவிசெய்யும். 'மன்னித்துவிடு' என்று பிரசங்கித்து விட்டு, நாங்களே மன்னியாமல் வாழுகிறதை மாற்றியருளும் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலிலிருந்து கர்த்தருக்குள்ளான கீழ்ப்படிதலுக்கு, எங்களை எடுத்துச் செல்லும். தற்காலிக ஆசைகளை அடையாளங்கண்டு, நாங்களும் வஞ்சிக்கப்பட்டு, பிறரையும் வஞ்சிக்கிற அபாயத்திலிருந்து தப்புவதற்கு அருள்புரியும். ஆமென்.*

20

# உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யும் மாய்மாலம்

அப்சலோமின் வாழ்விலிருந்து மாய்மாலத்தின் தன்மைகளைக் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.

## மாய்மாலம்:

1) உள்ளே பகையை வைத்துக்கொண்டு, வெளியே உபசரிக்கும்.
2) தேவ சமூகத்தை நேசிக்காமல், தேவனது ஈவுகளை மட்டும் நேசிக்கும்.
3) மாயமான தாழ்மையைத் தரித்துக் கொள்ளும்
4) அனுதாப சொற்களைப் பேசி பிறரை வசப்படுத்திக் கொள்ளும்.
5) ஆவிக்குரியவனைப் போல காட்டிக் கொள்ளும்
6) களைகளோடு கை கோர்க்கும்

II சாமுவேல் 13வது அதிகாரத்திலே, தனது தங்கைக்குப் புத்தி சொன்ன அப்சலோம், தானே அதற்கு மாறாக நடந்துகொண்டான் என கடந்த அத்தியாயத்தில் சிந்தித்தோம்.

## உபசரிப்பிலும் உள்நோக்கம்

*(II சாமு. 13:23,28)*

"இரண்டு வருஷம் சென்ற பின்பு, அப்சலோம் எப்பிராயீமுக்கு சமீபமான பாலாத்சோரிலே ஆட்களை வைத்து, ஆடுகளை மயிர்க்கத்தரிக்கிற வேலையில் இருந்தான். அங்கே ராஜகுமாரர் எல்லாரையும் விருந்துக்கு அழைத்தான்.

அப்சலோம் தன் வேலைக்காரரை நோக்கி: அம்னோன் திராட்சரசம் குடித்துக் களித்திருக்கும் சமயத்தை நன்றாய்ப் பார்த்திருங்கள் அப்பொழுது நான் அம்னோனை அடியுங்கள் என்று சொல்லுவேன்: உடனே நீங்கள் பயப்படாமல் அவனைக் கொன்று போடுங்கள்..."

எல்லாரையும் நேசித்து, அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதாகக் காட்டிக்கொண்டான். உள்நோக்கமோ, அம்னோனை

கொல்ல வேண்டும் என்பது. அவனை அடித்துக் கொன்றபிறகு, நாட்டை விட்டே ஓடி 3 ஆண்டுகள் எங்கேயோ இருந்தான். யோவாபின் மதியூகத்தால், மறுபடியும் எருசலேமுக்கு அழைத்து வரப்பட்டான்.

கிறிஸ்தவ குணநலன்களில் ஒன்றாகிய உபசரிப்பில் கூட மாய்மாலம் செயல்படமுடியும். புன்னகையோடு, இன்சொல்லோடு விருந்து வைக்கலாம். 'உள்ளுக்குள்ளோ புண்பட்ட நெஞ்சோடும், வஞ்சக எண்ணத்தோடும் இருக்க முடியும். பிறரை வரவேற்பதில், பிறரை வாழ்த்துவதில், பிறரை உபசரிப்பதில் மாயமற்ற இதயம் நமக்கு இருக்கிறதா, என ஆராய்ந்து பார்ப்போமாக!

## ஆசீர்வதிக்கிறவர் மீதல்ல, ஆசீர்வாதத்தின் மீது அன்பு வைக்கும்

*(II சாமு 14:24, 28,29,32)*

**"ராஜா, அவன் என் முகத்தைப் பார்க்க வேண்டியதில்லை: தன் வீட்டுக்குத் திரும்பிப் போகட்டும் என்றான். அப்படியே அப்சலோம் ராஜாவின் முகத்தைப் பார்க்காமல் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்.**

**அப்சலோம் ராஜாவின் முகத்தைக் காணாமலே, இரண்டு வருஷம் எருசலேமில் குடியிருந்தான்.**

**ஆகையால், அப்சலோம் யோவாபை ராஜாவினிடத்தில் அனுப்பும்படி அழைப்பித்தான்: அவனோ அவனிடத்திற்கு வரமாட்டேன் என்றான். இரண்டாம் விசையும் அவன் அழைத்தனுப்பினான். அவன் வரமாட்டேன் என்றான்.**

**அப்சலோம் யோவாபைப் பார்த்து, இதோ, நான் ஏன் கேசூரிலிருந்து வந்தேன். நான் அங்கே இருந்துவிட்டால் நலம் என்று ராஜாவுக்குச் சொல்லும்படி உம்மை ராஜாவினிடத்தில் அனுப்புவதற்காக உம்மை இங்கே வரும்படி அழைப்பித்தேன்: இப்போதும் நான் ராஜாவின் முகத்தைப் பார்க்கட்டும். என் மேல் குற்றமிருந்தால் அவர் என்னைக் கொன்று போடட்டும் என்றான்."**

அப்சலோம் தனது தகப்பனின் முகத்தைக் காண வாஞ்சிப்பது போல நடித்தான். யோவாபின் வயலைக் கொளுத்தி, அவனைத் தனது வீட்டுக்கு வரவழைத்து, யோவாபோடு பேசி, அதன் மூலம் தனது தகப்பனின் முகத்தைக் காண வாய்ப்பு பெற்றான். ஆனால், உண்மையில் அவனுக்குத் தனது தகப்பன் மீது அன்பில்லை: பதவியின் மீதுதான் அன்பிருந்தது.

நாமும் கூட தேவனைத் தேடுவதற்கான நோக்கம் என்ன? என ஆராய்ந்தால் கசப்பான உண்மை வெளிவரும். தேவனது முகத்தைத்

தேடுவது அவர்மீதுள்ள நிபந்தனையற்ற அன்பினாலா? ‘கர்த்தர் எனக்கு ஏதாவது தருவார்’ என்ற எதிர்பார்ப்பினாலா? சிறிய கூட்டம்தான் நிபந்தனையற்ற அன்போடு தேவனது முகத்தை வாஞ்சிக்கிறது: பெரும்பான்மையான கூட்டமோ, ‘தேவன் தங்களுக்கு என்ன செய்ய முடியும்? என்ற எதிர்பார்ப்பிலேயே வாழ்கிறது.

*(II சாமு 15:3,4)*

“அப்பொழுது அப்சலோம் அவனை நோக்கி: இதோ, உன் காரியம் நேர்மையும் நியாயமுமாயிருக்கிறது. ஆனாலும் ராஜாவினிடத்திலே உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை என்பான்.

பின்னும், அப்சலோம் வழக்கு வியாஜ்யமுள்ளவர்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து, நான் அவர்களுக்கு நியாயம் செய்யும்படிக்கு, என்னை தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான்”.

‘எனது தந்தையின் நிர்வாகம் சரியில்லை. நான் பதவியில் அமர்ந்தால், நலமாயிருக்கும்’, என்பதே அவனது உள்நோக்கமாயிருந்தது.

## விழுந்து வணங்கும், விரைவில் கவிழ்க்கும்

*(II சாமு. 14:33)*

“யோவாப் ராஜாவினிடத்தில் போய், அதை அவனுக்கு அறிவித்த போது, அப்சலோமை அழைப்பித்தான்: அவன் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கினான்...’

மாய்மாலம், மாயமான தாழ்மையைத் தரித்துக் கொள்ளும். அப்சலோம் தரையிலே முகங்குப்புற விழுந்து ராஜாவை வணங்கினான். ஆனால் அவனிடம் தாழ்மைக்குரிய கனிகள் காணப்படவில்லை. அன்பின் கிரியைகளை அவன் நடப்பிக்கவில்லை. அவனிடம் மாய்மாலமான செயல்களே காணப்பட்டன. கர்த்தர் வெறுக்கிற குணம், மாய்மாலம்.

## மலிவான விதத்தில் மக்களைக் கவரும்

*(II சாமு 15:5,6)*

“எவனாகிலும் ஒருவன் அவனை வணங்க வரும்போது, அவன் தன் கையை நீட்டி அவனைத் தழுவி, முத்தஞ்செய்வான்.

இந்தப் பிரகாரமாக அப்சலோம் ராஜாவினிடத்தில் நியாயத்திற்காக வரும் இஸ்ரவேலருக்கெல்லாம் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்து கொண்டான்.

தன்னிரக்கம் கொண்டவர்கள், எப்போதும், தங்களைப் பற்றி யாராவது அனுதாபத்தின் வார்த்தைகளைப் பேசிக்கொண்டேயிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். 'உனக்காக பேசுவோர் யாருமில்லை. உன் நியாயத்தை விசாரிப்பார் யாருமில்லை. உனக்கு யாரும் உதவுவதில்லை' போன்ற சொற்களைப் பேசியே அப்சலோம், மக்களது மனதைக் கவர்ந்து கொண்டான் வசப்படுத்திக் கொண்டான்.

*(II தீமோத்தேயு 3:6,7)*

"பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும், ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்".

பெண்கள் பெலவீனரல்ல ஆனால், 'நான் பெலவீனமுள்ளவள்' என்று எண்ணிக்கொள்கிறவர்கள். அந்த மனப்பான்மையையே சிலர் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிலருக்கு காதிலே ஒரு விதமான ஊறல் (செவித்தினவு) எடுத்துக் கொண்டேயிருக்கும்: அவர்கள் மீது பரிதாபப்பட்டு, பச்சதாப வார்த்தைகளை, யாராவது கூறுவது கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். இந்த அபாயத்திற்கு பெண்கள், எளிதாக இரையாக வாய்ப்புண்டு.

ஒரு தலைவனுக்கு, கர்த்தரே, மக்களை வசப்படுத்தித் தரவேண்டுமே தவிர, அவனே மலிவான வழிமுறைகளைக் கையாளுவது கூடாது.

'ஆவிக்குரியவன்' என்ற போர்வையில், பாவிக்குரியவைகளைச் செய்யும்

*(II சாமு. 15:7, 10-12)*

'நாற்பது வருஷம் சென்ற பின்பு, அப்சலோம் ராஜாவை நோக்கி: நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனில் செலுத்தும்படி நான் போக உத்தரவு கொடும்.

அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் வேவுகாரரை அனுப்பி, நீங்கள் எக்காளத் தொனியைக் கேட்கும் போது,

அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்று சொல்லுங்கள் என்று சொல்லச் சொல்லி வைத்திருந்தான்.

எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்ட இருநூறு பேர் அப்சலோமோடே கூடப்போனார்கள் அவர்கள் வஞ்சகமின்றி அறியாமையினால் போனார்கள்.

அப்சலோம் பலிகளைச் செலுத்தும் போது, தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேல், என்னும் கீலோனியனையும் அவன் ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பித்தான். அப்படியே கட்டுப்பாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள்''.

7-வது வசனத்தில் '40 வருஷம் சென்ற பின்பு' என்பதற்குப் பதிலாக '4 வருஷம்' என்றே மொழிபெயர்க்கப்ட்டிருக்க வேண்டும். ஏனென்றால், இந்தச் சம்பவம் நடக்கும் போது அப்சலோமுக்கு வயது 28 தான் தாவீதுக்கு வயது 56 தான்.

மக்கள் தேவதிட்டத்திலிருந்து திசை திருப்பப்பட்டு, மாய்மாலத்தால் வசப்படுத்தப்படுவது ஒரே நாளில் நடந்து விடுவதில்லை. சிறிது காலம் ஆகலாம்.

ராஜாவின் ஆட்சியைக் கவிழ்த்து, தான் ராஜாவாகப் போகிறதற்கு, முன்பு ராஜாவிடம் அப்சலோம் சொன்னான். ''பொருத்தனை செலுத்தப் போகிறேன்'' ஆவிக்குரியவனைப் போல தன்னைக் காண்பித்துக் கொண்டு, ஆட்சிக்கவிழ்ப்பு சதியில் ஈடுபட்டான்.

நாபாலைக் கொலைசெய்ய, யேசபேலும் இதே முறையைத்தான் கையாண்டாள். 'உபவாசம்' என்று அறிவித்து, மக்களைக் கூட்டி, நாபால் மீது பொய்க்குற்றம் சுமத்தி, கல்லெறிந்துகொல்லுங்கள் என்றே ஆலோசனை கூறினாள்.

*(Iராஜாக்கள் 21:8-10)*

ஆவிக்குரியவர்களைப் போல காண்பித்து விட்டு, வேறு எதையாவது செய்கிற மாய்மாலம் வேண்டாம். ஒளிவுமறைவற்ற வாழ்வு வாழ்வோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் கண்ணாடிக்கடலைக் கண்டான். (வெளி.4:6) அது ஒளிவு மறைவற்ற தன்மையையே (Transparancy) குறிக்கிறது.

## களைகளோடு கை கோர்க்கும்

இச்சம்பவத்தின் ஓர் ஆச்சரியமான பகுதி என்னவென்றால், *(II சாமு 15:14)*

“அப்பொழுது தாவீது எருசலேமிலே தன்னிடத்திலுள்ள தன்னுடைய எல்லா ஊழியக்காரரையும் நோக்கி: எழுந்து ஓடிப்போவோம் இல்லாவிட்டால் நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை: அவன் தீவிரித்து நம்மிடத்தில் வந்து, நம்மைப் பிடித்து, நம்மேல் பொல்லாப்பு வரப்பண்ணி, நகரத்தைப் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணாதபடிக்குத் தீவிரமாய்ப் புறப்படுங்கள் என்றான்”.

‘அப்சலோம் தன்னையே ராஜாவாக்கிக் கொண்டான்’’ என்று தெரிந்தவுடனே, மந்திரிகளும், தளபதிகளும் உடனிருந்தும் தாவீது உடனடியாக ஓடிப்போனதன் காரணமென்ன? 12ஆம் வசனம் விடைகூறுகிறது. ‘அகித்தோப்பேல்’ என்னும் ஆலோசனைக்காரன் அப்சலோமோடு இருந்ததே.

பத்சேபாளின் தாத்தா தான் அகித்தோப்பேல் என்று வேதப்பண்டிதர்கள் கூறுகின்றனர். பத்சேபாளை எடுத்துக்கொண்டு, அவளது கணவனை கொன்றதற்காக, தன்னை அகித்தோப்பேல் பழிவாங்கிவிடுவான், என்று தாவீது பயந்தான். அகித்தோப்பேலும் கசப்பு வைத்திருந்தான்.

“அறுப்புக்காலத்தில் நான் (கர்த்தர்), அறுக்கிறவர்களை (தூதர்கள்) நோக்கி, முதலாவது களைகளைப் பிடுங்கி (பொல்லாங்கனுடைய புத்திரர்) அவைகளைச் சுட்டெரிக்கிறதற்காக கட்டுகளாகக் கட்டுங்கள்...” *(மத் 13:30,38,39)* என்ற வசனத்தின்படி அப்சலோமும், அகித்தோப்பேலும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டார்கள். அப்சலோம் தாமாரினிமித்தம் கசப்பை, இதயத்தில் வைத்திருந்தான். அகித்தோப்பேல் பத்சேபாளுக்காக, தாவீதின் மீது கசப்பு வைத்திருந்தான். கசப்பு கொண்டோரெல்லாம் ஒன்றிணைவது, அரசியலில் மட்டுமல்ல, ஆவிக்குரிய வட்டாரத்திலும் நடக்கிறது. நமது சேர்க்கை யாரிடம் உள்ளது? என்பது குறித்து கவனமாயிருப்போம்.

*பிதாவே, எங்களது உபசரிப்பில் மாய்மாலம் கலந்துவிடாதபடி காத்துக்கொள்ளும். நிபந்தனையற்ற அன்போடு, உம் முகத்தைத் தேட அருள் புரியும். தாழ்மையின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு, அதற்கு மாறாக செயல்படுகிற மாய்மாலத்திலிருந்து காத்தருளும். மலிவான முறைகளினால் அல்ல, கர்த்தரே எனக்கு மக்களை வசப்படுத்தித் தருவார் என்ற சரியான பாதையில் நடை போட உதவுவீராக ஒளிவுமறைவற்ற திறந்த புத்தகமாக எங்கள் செயல்கள் விளங்கட்டும். கசப்பான வைராக்கியம் கொண்டோரது ஐக்கியத்திலிருந்து எங்களைத் தப்புவித்து காத்தருளும். ஆமென்.*

# யார் தேவபுத்திரர்?

*(IIசாமு.14:1,2,3)*

''ராஜாவின் இருதயம் அப்சலோமின் மேல் இன்னும் தாங்கலாயிருக்கிறதைச் செருயாவின் குமாரன் யோவாப் கண்டு

அவன் தெக்கோவாவிலிருக்கிற புத்தியுள்ள ஒரு ஸ்திரீயை அழைத்து ராஜாவினிடத்தில் போய் அவரை நோக்கி இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல் என்று அவள் சொல்ல வேண்டிய வார்த்தைகளை, யோவாப் அவள் வாயிலே போட்டான்''.

தாவீது அப்சலோம் மீது கோபமாகயிருப்பதை, யோவாப் கண்டறிந்தான். தாவீது அது பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால், அவன் அப்சலோம் அம்னோனை கொன்ற சம்பவத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை யோவாப் கண்டுகொண்டான். இரண்டு ஆண்டுகள் உருண்டோடியும், இன்னும் தாவீது அப்சலோமை எண்ணும்போதெல்லாம் எரிச்சலடைகிறதை யோவாப் அறிந்து கொண்டான்.

அப்சலோமையையும், தாவீதையும் ஒப்புரவாக்கி சமாதானம் பண்ணுகிற நடவடிக்கைகளில் யோவாப் இறங்கினான்.

''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்: அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்''*(மத்.5:9)*

இந்த சத்தியத்தை நாம் பலவேளைகளில் தியானிப்பதில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைத்திருக்கிறபடியால், நான் தேவனுடைய பிள்ளை (யோ.1:12) என்று மனப்பாடமாக நமக்குத் தெரியும். தேவ ஆவியினாலே நடத்தப்படுகிறவர்கள் தேவபுத்திரர்கள் (ரோமர்.8:14) என்ற சத்தியத்தை அடிக்கடி சிந்தித்துப் பார்க்கிறோம். ஆனால், உண்மையான தேவபுத்திரர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருப்பார்கள். அதுவே ஒப்புரவாக்குதலின் ஊழியம்.

1) மனிதனைத் தேவனோடு ஒப்புரவாக்குதல்

2) மனிதனை மனிதனோடு ஒப்புரவாக்குதல்

முதல் ஊழியமாகிய, மனிதனைத் தேவனோடு ஒப்புரவாக்குகிற ஊழியத்தை, சுவிசேஷ ஊழியத்தை-ஆத்தும ஆதாயப் பணியை எல்லா நிலைகளிலும் செய்ய முயல்கிறோம். ஆனால், ஒரு மனிதனுக்கும், இன்னொரு மனிதனுக்குமிடையே சமாதானம் உண்டு பண்ணுகிற ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைச் செய்வதற்குப் போதிய முக்கியத்துவம் நாம் கொடுப்பதில்லை. அது ஒவ்வொருவர் மீதும் விழுந்த கடமையாக இருக்கிறது.

## தலைவனின் தடுமாற்றமும், தாராள மனப்பான்மையும்;

ஒரு தலைவனின் மனதைப் பாதிக்கின்ற ஒன்று நடந்திருக்குமானால் அவன், சரியாகச் செயல்படமுடியாமல் போகலாம். தலைவன் மட்டுமல்ல, எந்த மனிதனும் அப்படித்தான்.

மனதைப் பாதிக்கின்ற ஒன்று, தலைவனின் முடிவெடுக்கும் திறன், ஆவிக்குரிய வாழ்வு போன்றவற்றையும் பாதிக்க வாய்ப்புண்டு.

ஒருவருக்குள்ளே இருக்கிற இது போன்ற மனத்தாங்கல், நமக்குத் தெரிய வரும்போது, 'இது என்னுடைய பிரச்சனை அல்ல, இது அவர்களுடைய தனிப்பட்ட பிரச்சனை அல்லது குடும்பப் பிரச்சனை' என்று ஒதுங்கிப் போவதற்கு வாய்ப்புண்டு. அவ்வாறு நாம் நடந்து கொண்டால் 'தேவபுத்திரர்' என்ற தகுதியை நாம் இழக்குமாறு செய்துவிடும். யோவாபும் எனக்கென்ன வந்தது என ஒதுங்கவில்லை.

அதே வேளையில், தாவீதும் யோவாபின் தலையீட்டை ஏற்றுக்கொண்டான். 'எனது குடும்ப பிரச்சனையில் தலையிடாதே' என்று தாவீது கூறவில்லை. யோவாபின் ஆலோசனையைத் தாவீது தள்ளிவிடவில்லை.

## சமாதானம் பண்ண சாமர்த்தியம் தேவை.

*(IIசாமு.14:2)*

"அவன் தெக்கோவாவிலிருக்கிற புத்தியுள்ள ஒரு ஸ்திரீயை அழைத்து..."

இருவருக்கிடையேயுள்ள பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஆர்வம் இருந்தால் மட்டும் போதாது. சிலர் அவ்வாறு செய்ய முயன்று, பிரச்சனையை மூன்று மடங்காக்கி விட்டதும் உண்டு.

யோவாப், இப்பிரச்சனையை அழகாக கையாண்டான். ஒரு புத்திசாலியான பெண்ணை அழைத்து, சாமர்த்தியமாக பேசக்கூடிய

அவளை உபயோகப்படுத்தினான். அவளது உரையாடல் மிக நேர்த்தியாக இருந்தது.

தேவபுத்திரர் என்கிறபடியால், நாங்கள் சமாதானம் பண்ணவேண்டும். ஆண்டவரே! இரு தனிப்பட்டவர்களுக்கு, அல்லது இரு சாராருக்கு இருக்கக்கூடிய மனத்தாங்கலைத் தீர்த்து, ஒப்புரவாக்கக்கூடிய கிருபைகளை எங்களுக்குத் தாரும். இரண்டாவது, அதற்கான ஞானத்தையும் எங்களுக்கு தந்தருளும், என்று நாம் வேண்டிக்கொள்ளவேண்டும்.

## ஒப்புரவாக்குவதற்கு ஒரு கிரயம் உண்டு.

*(IIசாமு.15:30)*

**"அப்பொழுது அவன்: தன் வேலைக்காரரைப் பார்த்து: இதோ என் நிலத்திற்கு அருகே யோவாபின் நிலம் இருக்கிறது: அதிலே அவனுக்கு வாற்கோதுமை விளைந்திருக்கிறது: நீங்கள் போய் அதைத் தீக்கொளுத்திப் போடுங்கள் என்றான்: அப்படியே அப்சலோமின் வேலைக்காரர் அந்த நிலத்தை தீக்கொளுத்திப்போட்டார்கள்".**

யோவாப், தாவீதை சமாதானப்படுத்தி, அப்சலோமை எருசலேமுக்குத் திரும்ப வரவழைத்துவிட்டான். ஆனால், தாவீதோ அப்சலோமை சந்திக்க மறுத்து விட்டான். தாவீதை சந்திக்காமலேயே, அப்சலோம் இரண்டு ஆண்டுகளை ஓட்டிவிட்டான். தான் தாவீதை சந்திப்பதற்கு, தனக்கு ஏற்பாடு செய்து தரும்படி யோவாபை நிர்ப்பந்தப்படுத்துவதற்காக, யோவாபின் வயல் விளைச்சலை, அப்சலோம் கொளுத்திப் போடுகிறான்.

தாவீதின் கோபத்திலிருந்தும், தண்டனையிலிருந்தும், அப்சலோமைக்காப்பாற்றி, அந்நிய தேசத்தில் அகதியாக இருந்தவனை, உள் நாட்டில் ராஜகுமாரனாக வாழ வழிவகை செய்த யோவாபுக்கு கிடைத்த பரிசு, அவனது வெள்ளாண்மை அழிக்கப்பட்டதே.

சமாதானம் பண்ணுகிறவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை:- நாம் அதற்கென்று செலுத்தவேண்டிய ஒரு விலைக்கிரயம் உண்டு. சமாதானம் பண்ணும்போது, ஒப்புரவாக்கும்போது, சம்பந்தப்பட்டவர்கள் நன்றியோடு இருப்பார்கள், பதில் நன்மை செய்வார்கள் என்ற எந்த நிச்சயமுமில்லை. மாறாக அவர்களே நமக்கு பாதிப்புகளை ஏற்படுத்தி, இழப்புகளை உண்டாக்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

பீஹாரிலே, எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலே, நான் டால்மியா நகர் என்ற இடத்தில் ஆங்கிலத்திலே கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தேன். அதில் ஒரு பள்ளி ஆசிரியை கலந்து கொண்டு, ரட்சிக்கப்பட்டார்கள். அவர்களும், அவர்களது கணவனும் பிரிந்து வாழ்ந்து கொண்டிருந்தனர். அச்சகோதரியின் தவறான நடத்தையே அதற்கான காரணம். அவர்கள் மனந்திரும்பின நிலைமையிலே தனது கணவனோடு ஒப்புரவாக விரும்பினார்கள். எனது உதவியை நாடினார்கள். ஒரு குறிப்பிட்ட நாளிலே, அவர்களது கணவனைப் போய் சந்திப்பதாக நானும் அவர்களுக்கு வாக்களித்தேன். அவர் ஆரா என்ற இடத்திலே விவசாய அதிகாரியாக இருந்தார். அது 130 கிலோ மீட்டர் தூரத்திலிருந்தது. அந்தக் குறிப்பிட்ட நாளிலே, என்னிடத்தில் 2 தேநீர்களுக்கான காசுகள் மட்டுமே இருந்தது: போக்குவரத்துக்குரிய பணம் இல்லை. ஆனாலும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக சைக்கிளிலேயே போக முடிவெடுத்தேன். அடுத்த நாள் ஒரு கூட்டம் இருந்தது. ஆகவே, அன்றே திரும்பி வரவேண்டும். தண்ணீரை மட்டும் அருந்திக் கொண்டு 130 கிலோ மீட்டர் சைக்கிள் மிதித்து ஆரா போய்ச் சேர்ந்தேன். பசி, களைப்பு, என் கால்கள் நடுங்குகின்றன. அச்சகோதரியின் கணவரது அலுவலகத்திற்குச் சென்றேன். அவர் வெளியே வந்து என்னை சந்தித்தார். உட்காரச் சொல்லவில்லை: நிற்க வைத்தே பேசினார். 'இவ்வளவு தூரம் எப்படி சைக்கிளில் வந்தீர்கள்?' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. என்னைத் திட்டவும் துவங்கிவிட்டார். 'உனக்கும் என் மனைவிக்கும் தவறான தொடர்பிருக்கிறது' என்று அபாண்டமான பழியையும் என் மீது சுமத்தினார். நான் திகைத்துப்போனேன். என் கையில் அப்போது ஒரேயொரு தேநீருக்குரிய காசு மட்டுமே இருந்தது. தேநீர் அருந்திவிட்டு, மறுபடியும் 130 கிலோ மீட்டர் சைக்கிள் மிதித்து, திரும்பி வந்து சேர்ந்தேன். அதற்கு முன்பு அவ்வளவுதூரம் ஒரே நாளில் சைக்கிள் ஓட்டினதில்லை. ஒரே நாளில் 260 கிலோ மீட்டர், வெறும் 2 தேநீர்கள் மட்டும் அருந்திவிட்டு சைக்கிள் ஓட்டி, அபாண்டமான வார்த்தைகளை சம்பாதித்ததே, நான் பெற்ற பலன்.

சமாதானம் பண்ணும்போது, தவறாக எண்ணப்படலாம்: கடின நிலைகளை சந்திக்க வேண்டியது வரலாம். இதன் நடுவிலும், நாம் சமாதானம் பண்ணுகிற தேவபுத்திரர்களாக திகழ தேவன் கிருபை தருவாராக!.

ஆண்டவரே! வானத்திற்கும் பூமிக்கும் நீர் பாலம் இணைப்பதற்கு, மனுஷனுக்கும் தேவனுக்குமிடையே சமாதானத்தை உண்டுபண்ணுவதற்கு உம்மையே ஊற்றிவிட வேண்டியதிருந்ததே. அப்படிப்பட்ட ஆண்டவருடைய பிள்ளையாகிய நாங்கள் கொஞ்சம் இழப்புகளைப் பார்த்து ஒதுங்கி விடாதபடி காத்துக்கொள்ளும். ஆமென்.

**22**

# பிரச்சனையின் பள்ளத்தாக்கிலும், பரமனுக்கு பிரியமாக...

*(IIசாமு.15:3,4)*

*"...ராஜாவினிடத்தில் உன் காரியத்தை விசாரிப்பார் ஒருவரும் இல்லை என்பான்.*

*... என்னை, தேசத்திலே நியாயாதிபதியாக வைத்தால் நலமாயிருக்கும் என்பான்".*

## தகப்பனின் வாக்குக்கு எதிரான தந்திரங்கள் வாய்க்காது.

பத்சேபாளிடத்திலே, 'அவளது மகன்தான், தாவீதுக்குப் பின் அரியணை ஏறுவான்', என்று தாவீது வாக்குக் கொடுத்திருந்தான். (IIராஜா.1:16,17) இது அப்சலோமுக்குப் பிடிக்காததால், எப்படியாவது ஆட்சியைப் பிடித்து விட வேண்டும், என்று செயல்பட்டான்: மக்களை நேசிப்பது போல நடித்தான்.

மாம்சீக நோக்கத்தோடு செயல்படுவோர் இப்படித்தான் இருப்பார்கள். அன்பானவர்களைப் போல காட்சியளிப்பார்கள். ஆனால், அது உண்மையான அன்பல்ல, வெறும் ஆதாயத்திற்கான நடிப்பு, என்பதைப் புரிந்து கொள்வது எளிது. கவலைப்படுவது போல, கரிசனை கொள்வது போல தங்களைக் காட்டிக்கொள்வார்கள். உண்மையாகவே, அன்பு காட்டி அக்கறை கொள்வோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் ஆதாயத்திற்காக நடிக்கிறவர்களை அடையாளங்கண்டு கொள்ள வேண்டியது அவசியம். அவர்கள் பேச்சிலேயே கண்டுபிடித்து விடலாம்: விஷவிதைகளைத் தூவிக்கொண்டேயிருப்பார்கள்.

மற்றவர்கள், அந்தப் பொறுப்புக்கு ஏற்றவர்களல்ல என்றும் தான் மட்டுமே அப்பொறுப்புக்கு ஏற்ற நபர் என்றும் பேசுகிறவர்களை நம்புவது நல்லதல்ல.

அப்சலோம் தந்திரமாக செயல்பட்டான். அரண்மனையின் முக்கிய அதிகாரிகள் 200 பேர் அறியாமையினால், வஞ்சகமின்றி,

எபிரோனுக்கு அவனுடன் சென்றனர். தந்திரத்தினால் கிடைத்த காரியம், தற்காலிகமானதாகவே அமைந்து, அவனது தலைக்கு ஆபத்தை வரவழைத்துவிட்டது.

'நான் வாழ்விலே பெரியவனாக வேண்டும்' என வாஞ்சிப்பது நல்லது. ஆனால், அதைப் பெறுவதற்கு தந்திரம் சரியான வழியல்ல. அது அழிவையே கொண்டு வரும்.

அப்சலோமுக்கு சில முக்கியமான புள்ளிகளின் ஆதரவு கிடைத்தது. அகித்தோப்பேல் போன்றவர்களே அவர்கள். ஆகவே, சிறிது காலத்திற்கு அரசனாக இருக்க முடிந்தது. இத்தகைய மக்களிடமிருந்து தேவன் நம்மை விலக்கிக் காப்பாராக.

## நெருக்கங்களிலும், தாவீது நெகிழவிடாத தன்மைகள்.

1. 'தான் பாடுபட்டாலும், பிறருக்கு அந்த நிலை வரக்கூடாது' என்ற மனப்பான்மை.
2. பெரிய விசுவாசம்.
3. தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமே என்ற நோக்கம்.

*(IIசாமு.15.18-20)*

''... காத்தூரிலிருந்து கால்நடையாய் வந்திருந்த அறுநூறு பேராகிய கித்தியர் எல்லாரும் ராஜாவுக்கு முன்பாக நடந்தார்கள்.

அப்பொழுது ராஜா கித்தியனாகிய ஈத்தாயைப் பார்த்து: நீ எங்களுடனே கூட வருவானேன்?...''

இன்று நான் உங்களை எங்களோடே நடந்துவரும்படிக்கு அழைத்துக் கொண்டு போகலாமா?... நீ உன் சகோதரரையும் அழைத்துக் கொண்டு திரும்பிப் போ...''

தாவீதும் அவனைச் சார்ந்தவர்களும் , உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக கால்நடையாக விரைந்தார்கள். அவனுடைய துக்கத்தில் பங்குபெற கித்தியர் 600 பேர் வந்தார்கள். தாவீதோ, 'நான்தான் கடின நிலையை அனுபவிக்கிறேன்: நீங்கள் ஏன் அதில் பங்குபெற வேண்டும்?' என்று அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டான். ஆவிக்குரியவனின் மனப்பான்மை அப்படித்தான் இருக்கும்: 'தான் பாடுபடுகிற நிலையிலும், பிறருக்கு பிரச்சனை வந்துவிடக்கூடாது' என்ற சிந்தையுள்ளவனாய் இருப்பான்.

ஆனால், ஜென்மசுபாவமுள்ள மனிதனோ, தனக்காகப் பிறர் பாடு அனுபவிக்க வேண்டும், என்று எண்ணுவான்: எனது நெருக்கத்தில், பிறர் வந்து தனக்காக அழ வேண்டும் என்று நினைப்பான்.

நமது இக்கட்டான வேளைகளிலே, நமது துக்கத்தை விட, பிறர் நமக்காக வேதனைப்படக்கூடாது என்ற அக்கறையே மேலோங்கி நிற்கட்டும்.

*(IIசாமு.15:25)*

''ராஜா சாதோக்கை நோக்கி: தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ: கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் அதையும், அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்''.

கடினமான நிலை வரும்போது, நெருக்கம் எழும்போது பொதுவாக நமது விசுவாசம் பறந்துவிடும். ஆனால், தாவீதோ ஒரு பெரிய விசுவாசத்தோடு செயல்படுகிறான். 'தேவன் என்னைத் திரும்பக் கொண்டு வருவார்' என்ற பெரிய நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆவிக்குரிய மனுஷன் நெருக்கப் படும்போது விசுவாசத்தை உறுதியாக பிடித்துக் கொள்வான். ''தேவன் நிச்சயமாக எனக்கு நன்மையானவைகளைச் செய்வார். ஒருவேளை இன்று தீமை நடப்பது போல இருக்கலாம். ஆனால், கர்த்தர் நிச்சயமாக மாற்றுவார்''. என்று நம்புவான்.

*(IIசாமு.15:26)*

''அவர்: உன் மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில்...''

'கர்த்தருக்கு நான் பிரியமாக நடக்க வேண்டுமே' என்ற வாஞ்சை தாவீதுக்கு இருந்தது. எல்லாம் நன்றாக போகும்போது, கர்த்தருக்கு பிரியமாக வாழ்வது எளிது. ஆனால், எல்லாம் கெட்டுக் கிடக்கும்போது, 'தேவனுக்கு பிரியமாய் வாழவேண்டும்' என்று சிந்தை கொள்வது மிகக் கடினம். நெருக்கத்தில்தான் தேவனுக்கு பிரியமில்லாதவைகளை செய்யக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

இருளில் நடந்தாலும், 'எங்கு போவது' என்றும், 'என்ன நடக்கும்' என்றும் தெரியாமல் உயிருக்கு உத்திரவாதமின்றிப் போன நிலையிலும், தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய தாவீது விரும்பினான். நாமும் எந்த நிலையிலும் தேவனுக்குப் பிரியமாக நடக்க சூளுரைப்போமாக.

ஆண்டவரே, உமக்குப் பிரியமானதை நான் எந்த நிலையினும் செய்வேன். நான் நெருக்கப்பட்டாலும், எனக்காகப் பிறர் பாடுபட அனுமதிக்க மாட்டேன். நம்பிக்கையிழந்த நிலையினும் விசுவாசத்தைக் காத்துக் கொள்வேன். தகப்பனே! உமது வசனத்திற்கு மாறாக, எனது தந்திரங்கள் செயல்பட முடியாத கிருபைகளைத் தந்தருளும். ஆமென்.

# தலைவனின் துக்க வேளையில் 3 வகை சுற்றத்தார்

உபத்திரப்படுகிற தலைவனை, அவனது துக்க வேளையில் 3 விதமான மக்கள் சூழ்ந்திருப்பார்கள்:-

1) தலைவனின் திட்டத்திற்கு (தேவ திட்டத்திற்கு) தங்களை அர்ப்பணித்தோர்,
2) சந்தர்ப்பவாதிகள்,
3) இனவெறியர்கள்.

## தேவதிட்டத்திற்குத் தத்தம் செய்தோர்

*(IIசாமு.15:32-34,5 -37)*

**"...அற்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு, தலையின் மேல் புழுதியைப் போட்டுக் கொண்டவனாய் அவனுக்கு எதிர்ப்பட்டான்.**

**தாவீது அவனைப் பார்த்து:... நீ நகரத்துக்கு திரும்பிப்போய், அப்சலோமை நோக்கி:.. இப்போது நான் உமக்கு ஊழியக்காரன் என்றாயேயாகில், எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்குவாய்.**

**...ராஜாவின் வீட்டிலே பிறக்கிற ஏதேது செய்தி உண்டோ, என்னென்ன கேள்விப்படுகிறாயோ, அதையெல்லாம் சாதோக் அபியத்தார் என்னும் ஆசாரியர்களுக்கு அறிவிப்பாய்....**

**அப்படியே தாவீதின் சிநேகிதனாகிய ஊசாய் நகரத்திற்கு வந்தான்".**

*ஊசாய்* ராஜாவின் துக்கத்தில் பங்கு பெறச் சென்றான். ராஜாவோ தனது திட்டத்தை அவனுக்கு தெரிவிக்கிறான். எதிரியின் முகாமிலிருந்து கொண்டு ராஜாவுக்காக பணிபுரிய வேண்டும் என்பதே அத்திட்டம். ஆகாத இடமாயிருந்தாலும், ஆபத்தான நிலைமையாயிருந்தாலும், தனது துக்கத்தையும், தனது சொந்த திட்டத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ராஜாவின் திட்டத்திற்கு தன்னை அர்ப்பணித்தான் *ஊசாய்*.

நமது துக்கத்தைத் தேவனிடம் கொண்டு செல்கிறோம்: தேவனோ தமது பாரத்தை நம்மில் ஊற்றுகிறார். இதுதான் தேவனோடு நடப்பது. நம்முடைய துக்கத்தையும், திட்டத்தையும் விட, தேவ திட்டமே நமக்கு பெரிதாகத் தெரிய வேண்டும். நமது திட்டத்தை ஒதுக்கி வைத்து விட்டு, தேவ திட்டமே நமக்கு முக்கியம் என செயல்படவேண்டும்.

## சந்தர்ப்பவாதிகள்

*(IIசாமு.16:1,3-4)*

"...இதோ மேவிபோசேத்தின் காரியக்காரனாகிய சீபா,... அவனைச் சந்தித்தான்.

அப்பொழுது ராஜா: உன் ஆண்டவனுடைய குமாரன் எங்கே என்று கேட்டதற்கு சீபா ராஜாவை நோக்கி: எருசலேமில் இருக்கிறான்: இன்று இஸ்ரவேல் வீட்டார் என் தகப்பனுடைய ராஜ்யத்தை என் வசமாய்த் திரும்பப் பண்ணுவார்கள் என்றான் என்று சொன்னான்.

அப்பொழுது ராஜா, சீபாவை நோக்கி "மேவிபோசேத்திற்கு உண்டானதெல்லாம் உன்னுடையதாயிற்று" என்றான். அதற்குச் சீபா: ராஜாவாகிய என் ஆண்டவனே உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்க வேண்டும் என்று நான் பணிந்து கேட்டுக் கொள்ளுகிறேன் என்றான்."

மேவிபோசேத்தின் வேலைக்காரனாகிய சீபா, தனது எஜமானனைப் பற்றிப் பொய்யான குற்றஞ்சொன்னான்; தாவீதுக்கு விரோதமாகப் பேசியதாகச் சொன்னான். தாவீதும், அவசரப்பட்டு மேவிபோசேத்தின் சொத்துக்களையெல்லாம், சீபாவுக்குத் தர உத்தரவிட்டுவிட்டான்.

ஆனால், மேவிபோசேத்தின் உண்மை நிலை என்ன?*(IIசாமு.19:24-30)*தாவீது எருசலேமை விட்டுப் போன நாள் முதல், அவன் தன் கால்களைச் சுத்தம் பண்ணவுமில்லை, தன் தாடியை சவரம் பண்ணவுமில்லை, தன் வஸ்திரங்களை வெளுக்கவுமில்லை: மொத்தத்தில் அவன் பிரமை பிடித்தவனைப் போலிருந்தான்.

தாவீதின்துக்கத்தையும், மேவிபோசேத்தின் உடல் ஊனத்தையும், தனக்கு சாதகமாக, தவறாகப் பயன்படுத்தி லாபமடைந்த சந்தர்ப்பவாதி சீபா.

உண்மையான நண்பர்களையும், உண்மையான ஊழியர்களையும் துன்ப நேரத்தில்தான் அறியமுடியும்: சிலநேரங்களில்

உதவுவது போல் வந்து, கொஞ்சம் பொய்யைக் கலந்து விடுவார்கள்.

*(நீதி.29:12)* ''அதிபதியானவன் பொய்களுக்குச் செவிகொடுத்தால், அவன் ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள்''. தாவீது பொய்யை நம்பி, தவறான முடிவெடுத்துவிட்டான். 4-வது வசனத்தின்கடைசிப் பகுதி 'வணக்கம்' என்று இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'நான் வந்த வேலை முடிந்துவிட்டது' என்கின்ற பொருள்பட அது சொல்லப்பட்டுள்ளது.

துக்கவேளையில் தீர்மானம் எதுவும் எடுக்காதீர்கள்: ஆனந்தத்திலும் தீர்மானம் எடுக்காதீர்கள். அமைதியான நிலையில் தீர்மானம் எடுங்கள். எதைக் கேட்டாலும் கொடுக்கிறேன் என்று ஏரோது, மகிழ்ச்சிவயப்பாட்டில் தீர்மானம் எடுத்தான். அவன் யோவான் ஸ்நானகனைக் கொல்ல வேண்டிய மாபாதகத்திற்கு உட்பட வேண்டியதாயிற்று.

பின்னர், மேவிபோசேத்தைப் பற்றிய உண்மை தெரிந்து, தவறான தீர்மானத்தைத் தாவீது திருத்தினாலும், பாதிதான் திருத்தமுடிந்தது. *(IIசாமு.19:29)*

## இனவெறியர்கள்

*(IIசாமு.16:5-8)*

''...சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சிமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன் அங்கேயிருந்து புறப்பட்டு, தூஷித்துக் கொண்டே நடந்து வந்து... தாவீதின் மேலும், தாவீது ராஜாவுடைய சகல ஊழியக்காரர் மேலும் கற்களை எறிந்தான்.

சிமேயி அவனைத் தூஷித்து, இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்து போ... உன் மேல் கர்த்தர் சவுல் வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப் பண்ணினார்...''

எங்களது கோத்திரத்தானாகிய (பென்யமீன்) சவுலைத் தள்ளிவிட்டு; யூதா கோத்திரத்தானாகிய நீ அரசனாகிவிட்டாயா, என்று தூஷித்தான். தாவீது, சவுலுக்கோ, அவன் குடும்பத்திற்கோ எந்தத் தீங்கும் செய்ததில்லை. இன சாதி வெறியில்லாவிட்டால் மாநில/மாவட்ட/மொழி/தேசிய வெறிகள் எழக்கூடும். பிறர் துக்கத்தில் சிக்கும்போதுதான், அது வெளிப்படும். எல்லாம் நன்றாக இருக்கும்போது நாம் அதை வெளிப்படுத்த மாட்டோம்: நெருக்கப்படும்போது, இந்த வெறிகளைச் சந்திக்க வேண்டியது வரும்.

தன்னைப் புகழ்ந்து போற்றுவோரின் சொற்களில் ஏமாற்றப்பட்டு தவறு செய்தான் தாவீது. ஆனால், தன்னைத் தூற்றுவோருக்கு அவன் எதிர்த்து நிற்கவில்லை. 'தேவன் அனுமதிக்காமல் இது நடக்காது' என்று கடந்து சென்றான். 'நானே நொந்து போய் இருக்கிறேன். இவன் வேறு தூற்றுகிறானே' என்று கோபப்படவில்லை. நமது துக்க வேளையில்தான் நமது சுற்றத்தாரின் நிறம் வெளிப்படும்.

## தலைமையா? வசதி வாய்ப்புகளா?

*(IIசாமுவேல் 16:20,21)*

''அப்சலோம் அகித்தோப்பேலைப் பார்த்து, நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று ஆலோசனை சொல்லும் என்றான்.

அப்பொழுது அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: வீட்டைக்காக்க உம்முடைய தகப்பன் பின் வைத்த அவருடைய மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசியும்... என்றான்''.

தாவீதோடு இருந்தபோது அகித்தோப்பேல், நல்ல தேவாலோசனை கூறி வந்தான். இப்போது தவறான தலைமையின் கீழ் (அப்சலோம்) கசப்பைக் கக்குகிறான். 'எனது பேத்தியைத் தாவீது கெடுத்தான். ஆகவே, அவனது மறு மனையாட்டிகள் மானபங்கப்படுத்தப்பட ஆலோசனை சொல்வேன்' என்று செயல்பட்டான். பத்து மடங்கு பழி வாங்கும் நடவடிக்கை. காரணம், அவனது தலைமையில் மாறுதல். 'நான் யாருடைய தலைமையின் கீழ்' இருக்கிறேன்? எத்தகையவரோடு இருக்கிறேன்? என்பது முக்கியம்.

ஒரு தலைமையின் கீழ் வசதி வாய்ப்புகள் பெருகாவிட்டாலும், வார்த்தை, தேவ வார்த்தையாக இருக்கும். வேறொரு தலைமையின் கீழ் வசதி வாய்ப்புகள் இருக்கும். ஆனால் சிந்தனை கேடுகெட்டதாக இருக்கும். தலைமை தேவனுக்கு பிரியமானதாக இருந்தால், அதின் கீழுள்ள நானும், பயனுள்ளவனாக இருப்பேன். தலைவர்களுக்காக ஜெபியுங்கள்.

*பிதாவே, நான் துக்கவேளையில் இருக்கும் போது, எனக்காக உதவுகிற அர்ப்பணிப்புள்ளோரைத் தாரும்: சந்தர்ப்பவாதிகளின் பொய்யில் ஏமாந்து விடாதபடி என்னைக் காத்துக் கொள்ளும்: எந்த 'வெறி'-க்கும் நான் இடங்கொடாதபடி காத்தருளும்: எனது தலைமை வாய்ப்பு வசதிகளை விட தேவனுக்கு பிரியமான தலைமை எது என்பதையே முக்கியமாகக் கவனிக்க அருள்புரியும். ஆமென்.*

# பெருமையும், பகையும் இணைந்தால்; பேரழிவே

*(IIசாமு.17:23)*

**"அகித்தோப்பேல் தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று கண்டபோது, தன் கழுதையின் மேல் சேணம் வைத்து ஏறி, தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப் போய், தன் வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தி, நான்று கொண்டு செத்தான்...".**

'என் சொற்படி நடக்காவிட்டால், நான் உயிரோடிருந்து என்ன பயன்' என்ற நினைவுகள் எப்படி ஒருவனுக்குள் வருகின்றன? அதற்கு அகிதோப்பேல் ஏற்றதொரு படப்பிடிப்பு. அதுவரை அவனது ஆலோசனைகள் தொடர்ந்து ஏற்கப்பட்டு வந்தன: அந்தமுறை அது நிராகரிக்கப்பட்டது.

நமது குடும்பமோ, குழுவோ நமது கருத்துக்களின்படியே தொடர்ந்து இயங்கி வந்திருக்கலாம். ஒரு முறை நமது கருத்துக்கு மாறாக நடக்கும்போது, நமக்குள்ளே ஒரு போராட்டம் வருவதற்கு காரணமென்ன? 'என்னை விட்டால் வேறு நபர் இல்லை..' என்ற மனப்பான்மை.

எனது கருத்துப்படிதான், இவர்கள் செயல்படவேண்டும், என்ற பெருமை, உள்ளத்தின் ஆழத்தில் தலைவிரித்தாடுவதே, அத்தகைய போராட்டத்திற்கான அடிப்படை. அந்த நிலையில், ஒரு சிறிய பகுதியில், நமது ஆலோசனை நிராகரிக்கப்பட்டாலும் வெறுப்பு கொப்பளிக்கும்: பிறர் மீது மட்டுமல்ல, தன் மீதும்.

பெருமை பிறரை மட்டும் அழிக்காது: தன்னையுடையவர்களையும் அழித்துவிடும். எனவே, பெருமைக்கு எதிர்த்து நிற்கவேண்டும். அடிக்கடி பெருமை வராதபடி, சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

பல்லில் இருக்கின்ற அழுக்கை எடுக்கமுயலும் போது, கொஞ்சம் ஆழமாக குத்தி, ஆணி வேரில் லேசாக பட்டாலும், பல்லின் எல்லா பகுதிகளிலும் வலி பரவும். அதேபோல, பெருமை உள்ளே இருந்தாலும் தொடப்படும் வரை அமைதியாக இருக்கும்.

பல வேளைகளில் நாம் வெளியே தாழ்மையானவர்களைப் போல காட்சியளிக்கலாம். நமது தன்மானத்தைப் பாதிப்பது போன்ற ஒன்று வரும்போதுதான், உள்ளே இருக்கும் பெருமை வெளிவரும். ஒருவரது வெளிப்புற தாழ்மையைக் கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது.

## புகழ்ச்சியும், இகழ்ச்சியும் புரிய வைக்கும்;

இயேசுவை சிலுவையில் அறைவதற்கு முன்பு, காறி உமிழவும் செய்தார்கள்: 'யூதருடைய ராஜாவே நீர் வாழ்க! என்று கூறவும் செய்தார்கள். இரண்டுமே பரியாசங்கள் தான். ஒன்று புகழ்ச்சியின் மிகைநிலை: இன்னொன்று இகழ்ச்சியின் உச்சக்கட்டம். இரண்டுவித விபரீதங்களுக்கு இடையே இயேசுவின் மனநிலை சமநிலையில் இருந்தது.

என்னைப் புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் இவ்விரண்டு நிலைகளிலும் நான் எவ்வாறு நடந்து கொள்கிறேன், என்பதிலேயே எனது மனத்தாழ்மை அடங்கியுள்ளது. பிலிப்பியரிலே எழுதும்போது சொன்னார்,'மரணபரியந்தமும் தன்னைத் தாழ்த்தினார்' என்று. சில நேரங்களில், நாம் அவமதிக்கப்படும் போது அமைதியாக சகித்துவிடலாம். ஆனால், புகழப்படும்போதும், உயர்த்தப்படும்போது பெருமை தலைக்கேறிவிடும். சிலர் உயர்விலே தாழ்மையைக் காண்பிப்பர். ஆனால், இகழப்படும்போது பெருமையின் காரணமாக சகிக்க முடியாமல் போய்விடுவர்.

பெருமையுடன் கசப்பும் இணைந்து விட்டது என்றால், அது மனுஷனை பாதாளத்துக்கு கொண்டுபோய்விடும். கசப்பு இருக்கிற இடத்திலே, எப்போதும் பெருமை இருக்கும், என்று கூறமுடியாது. அதே போல பெருமை இருக்கிற இடத்தில் கசப்பு நிச்சயமாக இருக்கும், என்றும் சொல்லமுடியாது. ஆனால் இவ்விரண்டும் இணைந்து விட்டால், அவை தம்மையுடையவர்களைக் கொன்று விடும்.

தாழ்மையாக இருக்கிற மனிதனும் கசப்பை வைத்திருக்க முடியும்: ஆனால், கசப்போடு பெருமை கலப்பது பெரும் அபாயம்.

## கர்த்தர் மன்னித்ததை, நாம் மன்னிக்காவிடில்...

தாவீது பத்சேபாளிடத்தில் செய்த பாவத்தை, கர்த்தர் மன்னித்து விட்டார். ஆனால், பத்சேபாளின் தாத்தாவாகிய அகித்தோப்பேலால் மன்னிக்க முடியவில்லை. கர்த்தர் மன்னித்துவிட்ட ஒன்றை,

மன்னிக்காதவர்களின் மனநிலையும், முடிவும் எப்படியிருக்கும் என்பதற்கு அகித்தோப்பேல் சிறந்த எடுத்துக்காட்டு.

அகித்தோப்பேல் தாவீது காலத்திலும் மந்திரி: அப்சலோமுக்கும் மந்திரி. அவ்வளவு அனுபவ அறிவு பெற்றவனின் மனநிலையைப் பாருங்கள். எங்கள் அலுவலகத்திலே ஒரு பொன்மொழி அட்டை மாட்டப்பட்டுள்ளது.

**"I am easy to please as long as I have things my way'.**

'எனது காரியங்கள் என் விருப்பத்தின்படி (எனது பாணியில்) நடக்கும் வரை நான் பிறருக்கு பிரியமுள்ளவனாக திகழ்வது எனக்கு எளிது' என்பதே அதன் எழுத்தின்படியான மொழிபெயர்ப்பு.

'காரியங்கள் என் இஷ்டத்துக்கு, என்னைச் சுற்றி நடக்காவிட்டால், நான் தாங்கிக் கொள்ளமாட்டேன்' என்பதே இதன் மறு பொருள்.

அவனது அனுபவ அறிவு அவனுக்கு மனப்பக்குவத்தைத் தரவில்லை.

'பிறரது ஆலோசனைகளும் ஏற்கக்கூடியதே: பிறரது ஆலோசனைகள், எனது ஆலோசனைகளைவிட சிறந்ததாக இருக்கலாம்' என்ற பக்குவத்தை அவன் அடையவில்லை.

பீஹாரிலே, ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைப் பற்றி ஒரு பழமொழி கூறுவார்கள். 'நீங்கள் சொல்வது சரியாக இருந்தாலும், நான் எனது மூளையை இங்குதான் அறைவேன்'. அதன் பொருள்:- பிறர் கூறுவது சரியாக இருந்து, எனது கருத்து தவறாக இருந்தாலும், எனது கருத்துப்படிதான் செய்வேன். இணங்கிப் போகமுடியாத தன்மை; பிறரை மன்னிக்கக்கூடாதவன், இணக்கமில்லாதவனாக இருப்பான்: தனது கை மட்டுமே ஓங்கியிருக்க வேண்டும் என்றும் அவன் எண்ணுவான்.

*(IIசாமு.17:14)*

''அப்பொழுது அப்சலோமும் இஸ்ரவேலின் மனுஷர் அனைவரும் அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது என்றார்கள்; இப்படிக் கர்த்தர் அப்சலோமின் மேல் பொல்லாப்பை வரப்பண்ணும் பொருட்டு, அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டார்''.

அகித்தோப்பேலுக்கு, தனது ஆலோசனை நிராகரிக்கப்பட்டுவிட்டதே என்பது மட்டும் தான் தெரிந்தது: கர்த்தரின் கரம் அதில் இருந்ததை அவனால் காண முடியவில்லை. பிறரை மன்னிக்க முடியாத மனிதன், கர்த்தரின் கிரியைகளைக் காணமுடியாதபடி கண்கள் அடைக்கப்பட்டுப் போகிறான்.

இயேசு கூறினார், 'நீங்கள் மனுஷருக்கு மன்னிக்காவிட்டால், பரமபிதாவும் உங்களுக்கு மன்னிக்கமாட்டார்'.

## தாழ்விலும் தயவு செய்வோரைத் தருவார், தேவன்.

(IIசாமு.*17:15-21,27-29*)

ஊசாய் அரசவையில் நடந்ததை ஆசாரியர்களிடம் சொன்னான். ஆசாரியர்கள் (சாதோக், அபியத்தார்), தகவலை ஒரு வேலைக்காரி மூலம் தாவீதுக்குத் தெரிவித்தனர்.

ஆசாரியர்களின் செயல், அப்சலோமுக்கு தெரிந்தபோது, பர்கூரிலிருக்கிற ஒரு வீட்டுக்காரி அவர்களைக் காப்பாற்றினாள்.

அம்மோன் தேசத்தைச் சேர்ந்த வெளிநாட்டினர் சோபி, மாகீர், பர்சிலா ஆகியோர் உணவு வகைகளும், மெத்தைகளும் கொண்டு வந்து உதவினார்கள்.

ராஜபதவியை இழந்து, வனாந்தரத்தில் ஓடினாலும், தாவீதுக்கு உதவுகிறவர்களைத் தேவன் எழுப்புகிறார். அரண்மனையிலும், ஒரு வீட்டிலும், அயல்நாட்டிலுமிருந்து உதவுகிறவர்கள் எழும்புகிறார்கள்.

நாம் தாழ்வை சந்தித்தாலும், தேவன் நமக்கு உதவ, எவரையாகிலும் பயன்படுத்த வல்லவர். நமது வாழ்விலே நெருக்கங்கள் வரும்போதுதான், தேவன் உதவுகிறவர் என்பது தெளிவாகத் தெரியும். 'வாழ்வில் எந்நிலையையும் சந்திக்க நான் ஆயத்தம்: கர்த்தர் என்னோடு இருக்கிறார்' என்று நாம் முழங்க முடியும்.

*ஆண்டவரே, நீர் மன்னித்தவர்களை, நானும் மன்னிக்கட்டும். அனுபவ அறிவு அல்ல, கற்றுக் கொள்ளும் இதயமே, சரியான மனப்பக்குவத்தைத் தரும் என்று நான் உணரட்டும். கசப்பு எனக்குள்ளே நுழைந்து, எல்லாவற்றையும் கெடுத்துப்போடாதபடி காத்தருளும். ஆமென்.*

25

# தலைவன், பத்தாயிரம் பேருக்கு சமமானவன்

*(IIசாமு.18:3)*

''ஜனங்களோ நீர் புறப்படவேண்டாம்; நாங்கள் முறிந்தோடிப் போனாலும் அவர்கள் எங்கள் காரியத்தை ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள்: எங்களில் பாதிப்பேர் செத்துப்போனாலும், எங்கள் காரியத்தைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்: நீரோ எங்களில் பதினாயிரம் பேருக்குச் சரி; நீர் பட்டணத்தில் இருந்து கொண்டு, எங்களுக்கு உதவி செய்கிறது எங்களுக்கு நலமாயிருக்கும்'' என்றார்கள்.

எல்லாம் நன்றாக இருக்கும்போது ஒரு தலைவனை ஏற்று, அவனுக்குப் பின் செல்வது எளிது. ஆனால், தலைவன் தோல்வியையும், பின்னடைவையும், பிரச்சனைகளையும் சந்திக்கும்போது, அவனை நேசித்து, அவனோடே நிற்பவர்கள் மிகக் குறைவானோரே. பதவியிலிருக்கும் வரை ஆதாயத்திற்காக ஒட்டிக் கொண்டிருப்போர், பதவி போனபிறகு, உதறிவிடுவார்கள்.

தாவீதோடு இருந்த மக்களோ, தலைவனின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள்; ஒரு சாதாரண விசுவாசியோ, ஊழியரோ வீழ்ச்சியடைவதை விட ஒரு தலைவன் வீழ்ச்சியடைவது பெரும்பாதிப்பை உண்டாக்கும். 'நானும் மிஷனரி தான், அவரும் மிஷனரிதான்' இருவரது அர்ப்பணிப்பும், அழைப்பும் ஒன்றுதான். ஆகவே, நானும், தலைவனும் சமம் தான்' என்ற கருத்து பாதகத்தையே உண்டாக்கும். சரீரத்திலே பல உறுப்புகள் இருந்தாலும், சில உறுப்புகளில் சிறிய காயம் ஏற்பட்டால் பொருட்படுத்தமாட்டோம். ஆனால், சில உறுப்புகளில் சிறிய காயம்பட்டால், உடனடி கவனம், முழுக்கவனம் செலுத்துவோம். கால் விரலில் காயம் பட்டால் செலுத்தும் கவனத்தை விட, அதே காயம் கழுத்தில் ஏற்பட்டால் செலுத்தும் கவனம் பன்மடங்கு அதிகம். காதிலே அடிபட்டால் பாதிக்கப்படுவதை விட, கண்ணிலே தூசி விழுந்தால் பாதிக்கப்படுவது அதிகம். ஏன்? எல்லாம் உடல் உறுப்புகள் தானே? பலவேளைகளில் நமக்குள்ளே பொதுவுடமை வாத (Communism) மனப்பான்மை எழுந்து

விடுகிறது. 'எல்லாரும் சமம்' என்ற கருத்து, பொதுவான கண்ணோட்டத்தில் சரியென்றாலும், குறிப்பான நிலைகளை அடிப்படையாகக் கொள்ளும்போது தவறு. சிறிய செடிக்கு அதிக பாதுகாப்பு தேவை. பெரிய மரத்திற்கோ பாதுகாப்பு அவசியமில்லை. ஆனால், சிறிய செடி சரிந்து விழுந்தால் ஒரு பாதிப்பும் ஏற்படாது: பெரிய மரம் விழுந்தாலோ பலர் பாதிக்கப்படுவர். இயற்கையின் மூலம் தேவன் பாடம் நடத்துகிறார். 'எல்லாரும் சமம்' என்ற மனப்பான்மை, தலைமைத்துவத்திற்கு தர வேண்டிய கனத்தையும், முக்கியத் துவத்தையும் அளிப்பதற்கு தடையாகி விடுகிறது'. தலைவர்களோடு, ஒத்துழைப்பதற்கும்இடறலைஉண்டாக்கிவிடுகிறது.

## கர்த்தர் கூட இருந்தால், காடு கூட கை கொடுக்கும்.

*(IIசாமு.18:8,9)*

''...அன்றைய தினம் பட்டயம் பட்சித்த ஜனங்களைப் பார்க்கிலும், காடு பட்சித்த ஜனம் அதிகம்.

...அப்சலோம் கோவேறு கழுதையின்மேல் ஏறிவரும்போது, அந்தக் கோவேறு கழுதை சன்னல்பின்னலான ஒரு பெரிய கர்வாலி மரத்தின் கீழ் வந்ததினால், அவனுடைய தலை கர்வாலிமரத்தில் மாட்டிக் கொண்டு, அவன் வானத்துக்கும், பூமிக்கும் நடுவே தொங்கினான்..''.

நான் இந்தப் பகுதியை வாசித்தபோது, வியப்பினால் எனக்குள் சிரித்துக் கொண்டேன். கர்த்தர் கூட இருந்தால் காடு கூட நமக்காக போர் புரியும். உயிரற்றவைகளும் நமக்கு உதவ ஆயத்தமாயிருக்கும். ஒரு மனிதனோடு கர்த்தர் இருந்தால், மரம் கூட அவனுக்கு ஆதரவாக செயல்படும். மாவீரன் அப்சலோமை, கர்வாலி மரம், அங்குமிங்கும் அசையாதபடி கைது செய்து விட்டது. அப்சலோமின் கோவேறு கழுதை, அவனுக்கு சாதகமாக செயல்படாமல், தாவீதுக்கு ஆதரவாக செயல்பட்டு, அப்சலோமை கர்வாலி மரத்தில் கொண்டுபோய் விட்டு விட்டு ஓடிவிட்டது. அப்சலோமுக்கு பெரிய தலைமுடி. அவன் கேசவ மூர்த்தி. அவனது பெருமைக்குரிய தலைமுடியும், அவனுக்கு எதிராகவே செயல்பட்டது. அவனை மரத்தில் சிக்க வைத்து விட்டது.

தேவகரம் ஒருவனோடு இருந்தால், அவனது எதிரியின் பிரியமான சாதனங்கள் கூட, எதிரிக்கு எதிராக செயல்படத் துவங்குகிறது.

எனது நடவடிக்கைகள் - எனது ஓட்டம் - எனது வழிகள்

கர்த்தருக்குப் பிரியமில்லாததாக இருக்குமானால், எனக்கு பெலமாய் திகழ்கிற அம்சங்களே, எனக்கு அழிவை உண்டுபண்ணும்.

## ஆவிக்குரிய தகப்பன் 'அனைவரும் தேவை' என எண்ணுவான்

*(IIசாமு.18:5)*

*"ராஜா யோவாபையும், அபிசாயையும், ஈத்தாயையும் நோக்கி:* **பிள்ளையாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம் மெதுவாய் நடப்பியுங்கள்,"என்று கட்டளையிட்டான்..."**

தாவீது, அப்சலோமை எப்படி அணுகினான் என்பதை வைத்து, ஓர் ஆவிக்குரிய தகப்பனின் இதயத்தை அறிய முடியும். தனது பதவியைப் பிடுங்கி, தனது மறுமனையாட்டிகளை மானபங்கப்படுத்தியவனைக் கூட அழித்துவிட அவன் ஆயத்தமாயில்லை: இழந்து விட தயாராக இல்லை.

ஆவிக்குரிய தகப்பன், ஊழியத்தில் இருக்கின்ற அனைவரும் தேவை, என்றே எண்ணுவான். "தகப்பனானவன் தன் பிள்ளைகளுக்கு புத்தி சொல்கிறது போல நான் சொன்னேனே" என்று பதில் எழுதினான்.

## 'என்னை நினைக்கப்பண்ணும்படி எதுவும் செய்வேன்'

*(IIசாமு.18:18)*

*"அப்சலோம் உயிரோடே இருக்கையில்* **என் பேரை நினைக்கப் பண்ணும்படியாக எனக்குக் குமாரன் இல்லை என்று சொல்லி, ராஜாவின் பள்ளத்தாக்கிலே தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி, அந்தத் தூணுக்கு தன் பேரைத் தரித்திருந்தான்:** *அது இந்நாள் வரைக்கும் அப்சலோமின் அடையாளம் என்று சொல்லப்படும்".*

மகன் இல்லையென்றால், அப்சலோம் தேவனிடத்தில் போய் ஜெபித்து பெற்றிருக்க வேண்டும்: மகனுக்காக அவன் ஜெபிக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒரு தூணை நிறுத்தி, இது என் பெயரை நினைவுபடுத்தட்டும் என்றான். மகன் கூட அவனுக்கு அவனது பெயரை நினைவுகூறத்தான் தேவைப்பட்டான். சுயநலம்.

'என்னை நினைவுகூறுவது சரியல்ல. என்னிமித்தம் தேவனை நினைக்க வேண்டும்' என்பதே சரி.

'நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டும்'. இது யோவான் ஸ்நானகனுடைய வார்த்தை.

நான் இறந்தபிறகு கூட என்னை நினைக்க வேண்டும், என்பதற்காக எதை வேண்டுமானாலும் தீமையைக் கூட சிலர் செய்து விட்டுப் போய் விடுவார்கள்.

**'ஓட்டத்திற்கு காத்திருந்தேன்: 'அசலாக' காத்துக்கொண்டேன்'**

***(IIசாமு.18:19-23,30)***

***"...அகிமாஸ்: ...நான் ஓடட்டுமே என்றான்.***

***யோவாப்...இன்றையதினம் நீ...போகக்கூடாது: இன்னொரு நாளிலே...நீ போகலாம்...***

***...அகிமாஸ் இன்னும் யோவாபை நோக்கி: கூஷியின் பிறகாலே நானும் ஓடட்டுமே...எப்படியானாலும் நான் ஓடுவேன் என்றான். அப்பொழுது யோவாப்: ஓடு என்றான்:...அகிமாஸ்...கூஷிக்கு முந்திக் கொண்டான்...***

***அப்பொழுது ராஜா: நீ அங்கே போய் நில் என்றான்..."***

அப்சலோமின் மரணச் செய்தியைச் சொல்ல யோவாபால், தாவீதினிடம் அனுப்பப்பட்ட 2 ஓட்டக்காரர்களிடமிருந்து, நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சத்தியங்கள் உண்டு.

அகிமாஸ் பெயர்போன ஓட்டவீரன்: உத்திகளெல்லாம் அவனுக்கு அத்துப்''படி. தூரத்திலிருந்து பார்த்தாலே, அவன்தான் எனக் கூறுமளவுக்குத் தனிப்பட்ட பாணியை உடையவன். அகிமாஸ் ஓட விரும்பினான். யோவாபோ இப்போது வேண்டாம், இன்னொரு சந்தர்ப்பத்தில் ஓடலாம் என்றான். 'கூஷி ஓடுகிறான்: நான் ஓடக்கூடாதா?' என்பதே அவன் எண்ணம்.

இயேசுவின் சகோதரர், இயேசுவிடம் கூறினர், 'எவ்வளவு அற்புதங்கள் செய்கின்றீர்? பட்டணத்தில் போய் செய்யும். அப்போது எல்லோரும் அறிந்து கொள்வார்கள்'.

இயேசு சொன்னார், 'என் வேளை இன்னும் வரவில்லை: உங்கள் வேளையோ எப்போதும் ஆயத்தமாயிருக்கிறது'.

நாம் ஒன்றை செய்வதற்கு முன் இது தேவனுடைய வேளையா? என ஆராய்ந்து பார்க்க வேண்டும். தேவனது கால அட்டவணைப்படியும் (Calender) தேவனின் கடிகாரத்தின் படியும் செயல்பட்டால்தான், நமது ஓட்டம் வெற்றி பெறும். எனக்குத் திறமை இருக்கலாம். ஆனால்,

எனக்கு வாய்ப்பு தரப்படாமல், பிறருக்கு வாய்ப்பு தரப்படும்போது நான் தலைவன் மீதும், பிறர் மீதும் மனந்தாங்கல் கொண்டு முறுமுறுக்கிறேனா? 'எனக்கு வாய்ப்பு தரமறுக்கிறார் என்னை முன்னேறவிடாமல் செய்கின்றார்' என்று கூறுகிறேனா?

தேவனது வேளையை, பகுத்தறிகிற உணர்வை கர்த்தர் நமக்கு தந்தருளட்டும். மேலும், அகிமாஸ், 'கூஷியின் பிறகாலே நானும் ஓடட்டுமே' என்றான். ஏற்கனவே ஒருவன் செய்து கொண்டிருக்கிற அதே பணியை, அதே இடத்தில், அதே நேரத்தில், அதே நபருக்கு செய்வேன், என்று அவன் அடம்பிடித்தான்.

முடிவு என்ன ஆயிற்று? தாவீது அவனை 'நீ அங்கே போய் நில்' என்று கூற வேண்டியதாயிற்று. இந்திமொழி பெயர்ப்பிலே, அவன் ஓரங்கட்டப்பட்டான், என்றே எழுதப்பட்டுள்ளது. தேவனுடைய வேளைக்கு மாறாக செயல்பட்டாலும் சரி, இன்னொருவருக்கு நகலாக (Copy) செயல்பட்டாலும் சரி, நமது ஓட்டத்திலே நாம் ஓரங்கட்டப்படுவோம்.

கர்த்தர் 'நிறுத்து' என்று கூறும்போது, நமது ஓட்டத்தை நிறுத்த நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். பல ஊழியர்களால் நிறுத்த முடியாதது தான் அவர்கள் பிரச்சனை. ஒரு பிரபலமான ஊழியத் தலைவர் கூறினார், நான் வேகமாக ஓடிக் கொண்டிருந்தேன்: நின்று, நிதானித்து தேவ சத்தத்தையும், எச்சரிப்பையும் என்னால் கேட்க இயல வில்லை: ஆகவே, 'நிறுத்து' என்ற தேவ எச்சரிப்பு என் காதில் விழவில்லை: நான் விழுந்து போனேன் என்றார்.

யாரோசெய்கிறார்கள் என்பதற்காக, நாமும் அதைச் செய்வதை, விட்டு விடுவோமாக. ரெய்னார்டு போங்கே என்ற ஊழியர் கூறினார், 'தேவனுக்கு நகல்கள் (Copies) தேவையில்லை. அவருக்கு அசல்களே (Originals) தேவை' என்று.

சில இடங்களில், ஒரே வீட்டுக்கு 20 ஊழியக்காரர்கள் வந்து ஜெபித்து விட்டுப் போவார்கள். ஒரே நபருக்கு, ஒரே விதப் பணியை, ஒரே நேரத்தில், ஏன் பலர் செய்ய வேண்டும்?

நமது ஓட்டம் வெறுமையாக முடிய வேண்டாம். அகிமாசால், முழுத் தகவலை அளிக்க இயலவில்லை. பெற்றுக் கொள்ளும் படியாக ஓடுவோம்.

ஆண்டவரே, தலைவர்களுக்கு உரிய முக்கியத்துவத்தை அளிக்க உணர்வு தாரும். நான் எந்நிலையில் உள்ளேன் என்பதை விட என்னோடே கர்த்தர் இருக்கிறாரா? என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க உதவியருளும். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தகப்பனுடைய இதயத்தைத் தாரும். என் பெயர் நினைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தை நான் சிலுவையில் அறையட்டும். எனது ஓட்டத்திலே உமது வேளையின்படியும், எனது தனிப்பட்ட அழைப்பின்படியும் ஓடி, கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள உதவி செய்யும். ஆமென்.

26

# ஆவிக்குரியவன்: தவறினாலும், திருத்திக் கொள்பவன்

## பாச உணர்ச்சிகளில்...

*(II சாமு.19:1-4)*

*"...ராஜா அப்சலோமுக்காக அழுது புலம்புகிறார்.*

*ராஜா தம்முடைய குமாரனுக்காக மனம் நொந்திருக்கிறார் என்று அன்றைய தினம் ஜனங்கள் கேள்விப்பட்டார்கள்... ஜெயம் ஜனத்திற்கெல்லாம் துக்கமாய் மாறிற்று.*

*...வெட்கப்பட்டு...வந்தார்கள்...*

*ராஜா...மகா சத்தமாய் ... அலறிக்கொண்டிருந்தான்."*

பாச உணர்வுகள், ஒரு தலைவனுக்கு, 'எல்லையைக் கடந்துவிடக்கூடாது. குடும்ப உறவுகள் ஊழியத்துக்கு இடறலாகிவிடக்கூடாது. வாலிபமகன் இறந்ததற்கு அழுவது தவறல்ல. அலறி அழுதது, மக்களுக்கு துக்கத்தையும், வெட்கத்தையும் கொண்டுவந்தது.

*(வசனம்:5,6,7) "அப்பொழுது யோவாப்... ராஜாவினிடத்தில் போய்... உம்முடைய ஜீவனையும்... தப்புவித்த உம்முடைய ஊழியக்காரர் எல்லாரின் முகத்தையும் வெட்கப்படுத்தினீர். இன்று நீர் உம்மைப் பகைக்கிறவர்களைச் சிநேகித்து, உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறீர் என்று விளங்குகிறது.*

*அதிபதிகளும், சேவகரும் உமக்கு அற்பமானவர்கள் என்று இன்று விளங்கப் பண்ணுகிறீர்...*

*இப்போதும் எழுந்திருந்து வெளியே வந்து உம்முடைய ஊழியக்காரரோடே அன்பாய்ப் பேசும்: நீர் வெளியே வராதிருந்தால்..."*

தலைவனின் வாழ்வில், அவனது மனதை பாதிக்கச் செய்கிற சம்பவங்கள் வரலாம்: ஆனால், அது மக்களைப் பாதிக்கும்படி விட்டுவிடக்கூடாது. குடும்ப உறவுகளில் நேர்மையாக இருக்கும்போது,

சந்தேகிப்போர் உண்டு: அவ்வுறவுகளின் உணர்வுகள் அளவுகடந்து பாயுமானாலும், பிறருக்கு நிச்சயமாக இடறலாகிவிடும். யோவாப் ஏற்ற நேரத்தில், ஏற்ற எச்சரிப்பை தாவீதுக்குத் தருகிறான். தாவீது அலறினான். அலறுவது தலைவனுக்கு அழகல்ல.

I சாமு. 30ஆம் அதிகாரத்தில் தாவீது அழுதான்; பின்னர் தன்னை கர்த்தருக்குள் திடப்படுத்திக் கொண்டான்: பத்சேபாளின் முதல் குழந்தை இறந்தபோது, 'நான்தான் அதினிடத்திற்குப் போகவேண்டுமே தவிர, அது என்னிடத்திற்கு வராது' என்று தெளிவுபட உரைத்தான்: மரணத்தைப் பற்றிய சரியான கண்ணோட்டம் அவனுக்கு இருந்தது. ஆனால், இப்போது தாவீதுக்கு என்ன ஆயிற்று; தனக்குத் துரோகம் பண்ணின மகன் கொல்லப்பட்டதற்கு இப்படி அலறுகிறான். யோவாபின் ஆலோசனையை உடனே தாவீது ஏற்று, அதன்படி செயல்பட்டான்: நிலைமையைச் சரிபண்ணிக் கொண்டான். பொறுப்பான நிலையிலிருப்போர் அழ வேண்டிய நேரத்திலே கூட, அதை அடக்கக் கற்றிருக்க வேண்டும்.

## என் தாய் யார்? என் சகோதரர் யார்?

தாவீது, தேவதிட்டத்திற்கே, தனது குடும்பத்தை விட அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தவன்தான்: இல்லையென்றால், தனது சொந்தமகன் அப்சலோம்தானே அரசனாகியுள்ளான், என்று அவனிடம் சரணடைந்திருப்பான். தேவன் சாலமோனிடம் அன்பாயிருந்தார் என்பதை அறிந்து, பத்சேபாளிடம் சாலொமோனே அடுத்து அரசன், என வாக்குக் கொடுத்திருந்தான். அப்சலோம் அரசனாவது தேவதிட்டமல்ல, என்று அறிந்தே தாவீது அவனை எதிர்த்தான்.

ஆனாலும், இவ்வளவு உறுதியாய் இருந்தவனை, அப்சலோமின் மரணம் உலுக்கிவிட்டது. தன்னுடைய சகாக்களுக்கு முக்கியத்துவம் தருகின்ற தலைவனோடுதான், அவர்கள் ஒட்டிக்கொண்டிருப்பார்கள். ஆனால் அந்தநிலை ஆட்டம் கண்டபோது, யோவாப் சரியான ஆலோசனையைக் கூறினான். துக்கத்தின் உச்சக்கட்டத்திலிருக்கிற ஒருவனை, சரியான திசைக்குத் திருப்புவது எளிதானதல்ல.

துக்கம், அவனை அலற வைத்தது மட்டுமல்ல, அவன் ஆவிக்குரியவன் என்பதையும் அவனுக்கு மறந்து போகும்படி செய்துவிட்டது. ஒருவர் துக்கத்தின் உச்சக்கட்டத்தில் இருக்கும்போது, அவரிடம் ஏதாவது பேசினால், அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். என்

மீது திரும்பப் பாய்வார், என்று எண்ணி, நாம் ஒதுங்கிப் போவதே வழக்கம். யோவாப்போ, நான் இப்போது அமைதியாக இருந்தால், இதைவிட பெரிய துக்கம் தாவீதுக்கு வந்து விடுமே, என்று உணர்ந்து, இந்நிலையில் குறுக்கீடு செய்கிறான். தெளிவானபடத்தைத் தைரியமாக தாவீதுக்கு முன் வைத்தான்.

'ரத்தம் அடர்த்தி மிக்கது' என்று பழமொழி உண்டு. ரத்தபாசத்திற்கு அளவுகடந்து இடங்கொடுக்கிற சோதனை வரும்போது இயேசு சொன்ன வார்த்தைகளைப் பிடித்துக்கொள்வோம்.

உமது தாயும், சகோதரரும் வந்திருக்கிறார்கள் என்று இயேசுவிடம் சொல்லப்பட்ட போது, அவரது மறுமொழி என்ன?

"என் தாய் யார்? என் சகோதரர் யார்? பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே எனது தாயும், எனது சகோதரனுமாய் இருக்கிறான்" என்று தனது சீஷர்களை சுட்டிக்காட்டி, அவர்களோடு தன்னை அடையாளங் காண்பித்துக்கொண்டார்.

நற்செய்திப்பணியிலே தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, துக்கச் செய்தியொன்று வருகிறது. ஊழியத்தை விட்டுவிட்டுப் போனால், தேவப்பணி பாதிக்கப்படும். நற்செய்திப் பணியா? துக்கசெய்திக்குச் செவிகொடுத்தலா? என்று கேள்வி எழும்புகிறது.

குடும்பத்திலே ஒரு திருமணம், வற்புறுத்தி அழைக்கிறார்கள். நீங்கள் வராவிட்டால், 'ஒரு மாதிரி' பேசுவார்கள் என அழுத்தம் கொடுக்கிறார்கள்; நான் வேடிக்கையாக சொல்வதுண்டு, 'நான் மாப்பிள்ளை இல்லையே; மாப்பிள்ளையும், பெண்ணும் இருந்தால் போதுமே' என்று.

பாசவுணர்வா? பொறுப்புணர்வா? என்ற வினாவுக்கு 'பொறுப்புணர்வு' என்று நிற்பவர்களைத்தான், மக்கள் அண்டிக்கொள்வார்கள். மிஷனரிப்பணியிலே, அதிக தூரத்திலே இருப்பவர்களுக்கு இச்சோதனை அதிகம் வரும்; எனது வாழ்விலே இத்தகைய சோதனைகளை நான் எளிதாகக் கடந்து போனதற்கு காரணம், இயேசுவிடம் கற்றுக் கொண்ட பாடமே. எல்லாருக்கும் தெரிந்து விட்டது இம்மனிதனுக்கு பாசத்தைவிட பொறுப்புணர்ச்சிதான் முக்கியம் என்று. ஒரு MLA சபாநாயகர் ஆகிவிட்டால் கட்சி சார்பற்றவர் ஆகி விடுவது போல; ஓர் ஆவிக்குரியவன் தேசிய/ மாநில/ மாவட்ட/ மொழி, சாதி உணர்வுக்கு அப்பாற்பட்டவன் ஆகிவிடுகிறான்.

## தேவையற்ற வார்த்தைகளை அடக்குவதில்...

*(II சாமு. 11:13)*

*"நீங்கள் அமாசாவை நோக்கி: நீ என் எலும்பும் என் மாம்சமும் அல்லவோ? நீ யோவாபுக்குப் பதிலாக எந்நாளும் எனக்கு முன்பாகப் படைத்தலைவனாக இராவிட்டால், தேவன் அதற்குச் சரியாகவும், அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்று சொல்லச் சொன்னான்."*

தாவீதுக்கு வெளிப்புறம் சரியாகிவிட்டாலும், உள்ளே நிலைவரமான நிலை ஏற்படவில்லை. அழுகையை அடக்கினாலும், இதயத்தை அடக்காதபடியால் தேவையற்ற வார்த்தைகள் வந்து விட்டன. யோவாபை மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை. யோவாப், துக்கவேளையில் கூட நின்றவன் அமாசா யோவாபுக்கு இரண்டாவதாக இருந்தான்.

அமாசாவுக்கும், யோவாபின் இடத்தை தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. தேவையில்லாமல் யோவாப்பை, தாவீது குத்திப் பேசினான், அவன் தன் குறையைச் சுட்டிக்காட்டி விட்டானே என்பதற்காக இந்தப் பேச்சு, யோவாப்பை நோகடித்து,அவனுக்கு எரிச்சலூட்டி, அமாசாவின் கொலையில் போய் முடிந்தது *(II சாமு. 20:9-10)*

அப்படியே யோவாபை மாற்றிவிட்டு, அமாசாவை அந்த இடத்தில் போட விரும்பியிருந்தால், அதை யோவாபுக்கு தெரியாமல், அமாசாவிடம் தாவீது தெரிவித்திருக்க வேண்டும்.

எனது சிறிய தீர்மானத்திலே, சில வார்த்தைகளிலே பலருடைய உயிரே அடங்கியிருக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்; மக்கள் தாவீதை மறுபடியும் அரசனாக்குவது பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள் (வ.9) தாவீதோ அவசரப்பட்டு பேசி விட்டான்.

## மன்னிப்பதில்....

*(II சாமு 19:18-23)*

"..சீமேயி.. ராஜாவுக்கு முன்பாக தாழவிழுந்து... என் ஆண்டவன் என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமலும்... உமது அடியான் செய்த துரோகத்தை ராஜா நினையாமலும்... இருப்பாராக...

ராஜா சீமேயியைப் பார்த்து: நீ சாவதில்லை என்று அவனுக்கு ஆணையிட்டான்.

சீமேயியோ சந்தர்ப்பவாதி, தாவீது பதவியை இழந்த நிலையில் அவனை அவமதித்து கற்களை எறிந்தான். மறுபடியும் பதவியை ஏற்கப் போகிறான் என்ற நிலையில் முதல் நபராக வந்து மன்னிப்புக் கேட்கிறான்.

எனது அபிப்பிராயப்படி, ஒருவன் இன்னொருவனை மனதிற்குள் மட்டும் அவமதித்து, அதை சொல்லிலோ, செயலிலோ காட்டாதிருந்தால், அவன் தேவனிடத்தில் மட்டும் மன்னிப்பு கேட்டால் போதும். அதை அவன் சொல்லிலோ செயலிலோ காட்டியிருந்தால், தேவனிடத்தில் மட்டுமல்ல; மனிதனிடத்திலும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

ஒருவன், செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்கிறான் என்றால், ஓர் ஆவிக்குரியவன், அவன் இருதயத்திலிருந்து மன்னிப்பு கேட்கிறானா? மேலோட்டமாய் மன்னிப்பு கேட்கிறானா என்று ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டான். அவனை மன்னித்துவிடுவான். அதைத்தான் தாவீது செய்தான். ஆனால் I ராஜா *2:9*ல் சீமேயி குற்றமற்றவனல்ல', என்றான் தாவீது; அதன் பொருள் ''நான் தாராளமாயிருந்தேன்' என்பதே. சந்தர்ப்பம் என்ன? யூதா மனிதர்கள் மட்டுமே தாவீதை அழைத்துப்போக வந்துள்ளனர். மன்னிப்பு கேட்க வந்துள்ளவனோ, பென்யமீன் கோத்திரத்தான்.

தாவீது சொன்ன வார்த்தைகள் என்ன? ''இன்று நான் இஸ்ரவேலின் மேல் ராஜாவானேன்''. நான் இருக்கிற இடம் இஸ்ரவேலிலேயே உயர்ந்த இடம். நான் உன்னதமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறபடியால், மன்னித்தாக வேண்டும் என்று சொல்லாமல் சொல்கிறான்.

எபேசியர் நிருபத்திலே இந்தப் படப்பிடிப்பு அழகாக உள்ளது.

*1:3*-ல் நாம் உன்னதத்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

*2:7*-ல் நாம் உன்னதத்தில் கிறிஸ்துவோடு உட்கார்ந்திருக்கிறோம்.

ஆகவே *4:32*-ன் படி நாம் மன்னிக்க வேண்டும்.

மன்னிப்பு கேட்கிறவர்கள் மனதாரக் கேட்காவிட்டாலும்; நான் வைக்கப்பட்டிருக்கிற உயர்ந்த ஸ்தானத்தின் காரணமாக, நான் மன்னிப்பேன்.

## முடிவெடுப்பதில்...

*(II சாமு. 19:29)*

"அப்பொழுது ராஜா அவனைப் பார்த்து, உன் காரியத்தைக் குறித்து அதிகம் பேசுவானேன்? நீயும், சீபாவும் நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன் என்றான்".

ஒரு சந்தர்ப்பத்தில் சீபா, பொய்த்தகவலைத் தாவீதுக்குத்தர, தாவீதும் அதை நம்பி, தவறான முடிவை எடுக்கிறான். இப்போதோ உண்மைத்தகவல் தெரியவரும்போது, தனது தவறான முடிவை திருத்த முயல்கிறான். முழுதும் முடியாவிட்டாலும் பாதியாகிலும் திருத்தினான்.

ஆவிக்குரியவர்கள், எப்போதும் எல்லாவற்றிலும் பரிபூரணமாக இருப்பார்கள் என்று கூறமுடியாது. இயேசு கிறிஸ்துவைத் தவிர, ஒருவரும் பரிபூரணமானவரல்ல; அவசர முடிவு எடுத்து ஆவிக்குரியவன் தவறுசெய்ய வாய்ப்புண்டு. ஆனால், அது தெரியவரும்போது, தன்னைத்திருத்திக் கொள்ள ஆயத்தமாக இருப்பவன்தான், ஆவிக்குரியவன்.

'நான் முடிவு எடுத்தது எடுத்ததுதான்,' என்று கூறவில்லை. சரி, தவறு செய்து விட்டேன். இப்போது சரிசெய்து கொள்கிறேன், என்றான் தாவீது.

## நன்றி மறக்காதவன்

*(II சாமு. 19:32-33)*

"பர்சிலா... ராஜா மக்னாயீமிலே தங்கியிருக்குமட்டும் அவனைப் பராமரித்து வந்தான்...

ராஜா பர்சிலாவை நோக்கி: நீ என்னோடேகூடக் கடந்துவா, எருசலேமிலே உன்னை என்னிடத்தில் வைத்துப் பராமரிப்பேன் என்றான்..."

ஆவிக்குரியவன் தனக்கு இக்கட்டில் உதவினவர்களை, மறக்கமாட்டான். அவர்களைக் கனம்பண்ணுவான். பர்சிலா தாவீது மறுபடியும் ராஜாவாகிவிடுவான், நமக்கு சன்மானம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, எந்த உதவியும் செய்யவில்லை. தாவீது அதற்கு நன்றியுள்ளவனாக இருக்கிறான். நன்றியுணர்வு அற்று வரும் பொல்லாத உலகில், நன்மைக்குப் பதிலாக நன்மை செய்யாவிட்டாலும்,

துரோகம் செய்யாமலிருப்பதே மேல், என்ற நிலையில், ஆவிக்குரியவன் நன்றியுள்ளவனாகவே விளங்குவான்.

ஆவிக்குரியவனுக்கு 3 சோதனைகள் வைத்து, அவனை கண்டுபிடிக்கலாம்

1. மனதார மன்னிப்பு கேட்காதவர்களையும், மனப்பூர்வமாக மன்னிப்பான்;
2. தவறாக எடுத்துவிட்ட முடிவுகளை, திருத்த தயங்கமாட்டான்;
3. நன்றி மறவாத இதயமுள்ளவனாகயிருப்பான்.

*ஆண்டவரே, நாங்கள் ஆவிக்குரியவர்களாக இருக்க உதவிசெய்யும்; எங்களது நற்குணங்கள் வெளிப்படட்டும்; ஆண்டவரே, எங்களது நிலையை உணர்ந்து, நாங்கள் கிரியை செய்யட்டும் நாங்கள் எங்கு மன்னிக்க வேண்டுமோ? அங்கு மன்னிக்கவும், எங்கு சரிசெய்ய வேண்டுமோ? அங்கு சரிசெய்யவும் கிருபை தாரும். ஆமென்.*

# சபை இரண்டுபட்டால் சத்துருவுக்குக் கொண்டாட்டம்

*(II சாமு. 20:1)*

**"... சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன் ஒருவன் தற்செயலாய் அங்கே இருந்தான்; அவன் எக்காளம் ஊதி: எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை... இஸ்ரவேலே நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுங்கள் என்றான்''.**

பேலியாளின் மனுஷன் என்றால் ஒரு போக்கிரி. மேலும் சேபாவுக்கென்று எந்தப் பின்னணியும் இருந்ததில்லை. தற்செயலாக அங்கு வந்தவன்; யூதாவுக்கும் இஸ்ரவேல் கோத்திரங் களுக்குமிடையேயுள்ள விரிசலைக் கண்டு பிடித்து, விளையாட ஆரம்பித்தான்.

ஒவ்வொரு குழுவுக்கும் இது பொருந்தும்: குழுவினரிடையே ஒருமனக் குறைவு இருப்பதை, வேறொரு மனிதன் கண்டுவிட்டால், உள்ளே புகுந்து, பிரிவினை விதைகளை விதைத்துவிடலாம். 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்றொரு பழமொழி உண்டு; அவன் ஞானவானாக, தலைமைத் தன்மையுள்ளவனாக இருக்க வேண்டியதில்லை. கூத்தாடியைப் போன்ற ஒருவன் கூட திடீர்த் தலைவனாக உருவெடுத்து விடமுடியும்.

இஸ்ரவேலர் யாராவது ஒருவர் கொடி தூக்கமாட்டார்களா? பூனைக்கு மணி கட்டுவார் யார்? என்று காத்திருந்தார்கள். சேபா கிடைத்தான் யாவரும் அவன் பின்னே போய்விட்டார்கள். அதே நேரம், ஒரு பெண்ணின் சொல்லைக் கேட்டு இந்தக் கூட்டத்தார்தான் சேபாவைக் கொன்றனர். கூட்டத்தை நம்பினால் அதோகதிதான்.

உலகின் கடைசி நாட்களிலும் இதுதான் நடக்கும், ஆயிரம் ஆண்டுகள் காவலிலிருந்து விடுதலையாகி வருகிற சாத்தான், மறுபடியும் வந்து பூமியை நோட்டமிடுவான். இன்னும் ஒரு சிலர் இதயம் ஒவ்வாத நிலையில் உள்ளனர் என்று கண்டறிந்து, தனக்கென்று ஒரு சேனையைத் திரட்டி, தேவனுக்கு விரோதமாய்ப் போராடுவான். (வெளிப்படுத்தல். 20:7-9)

(II சாமு.20:9,10)

''அப்பொழுது யோவாப் அமாசாவைப் பார்த்து என் சகோதரனே, சுகமாயிருக்கிறாயா? என்று சொல்லி, அமாசாவை முத்தஞ்செய்யும்படி, தன் வலது கையினால் அவன் தாடியைப்பிடித்து, தன்கையிலிருக்கிற பட்டயத்திற்கு அமாசா எச்சரிக்கையாயிராத போது, யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சரிந்து போகத்தக்கதாய், அதினால் வயிற்றில் ஒரே குத்தாகக் குத்தினான்: அவன் செத்துப்போனான்''.

யோவாப், தாவீதின் தலைமையை ஏற்றவனே; வெற்றியிலே தனக்குப் பேர் வந்து விடக்கூடாது, தனது தலைவனுக்குத்தான் பேர் வரவேண்டும் என்பதிலே கவனமாக இருப்பவன்: தனது சகோதரனோடு பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளத் தயங்காதவன்: தாவீதுடைய குடும்பப் பிரச்சனைகளைக் கூடத் தீர்த்துவைப்பதற்குப் பாடுபட்டவன்: தாவீதின் நெருக்கடியான வேளைகளில் கூட நின்று, ஏற்ற ஆலோசனை சொன்னவன்; அவன் தாவீதுக்கு உண்மையுள்ள ஊழியன். ஆனால் தன்னைவிட தாவீதிடம் வேறு யாரும் நெருக்கமாக இருக்கக் கூடாது; தன்னை விடவேறு யாரும் மேலே வந்து விடக்கூடாது' என்ற கெட்ட எண்ணம் அவனுக்குள் மேலோங்கி நின்றது சவுலின் படைத்தலைவனாகிய அப்னேரையும் யோவாப், இந்த எண்ணத்தின் காரணமாகவே கொலை செய்தான். ஒருவேளை, தனது சகோதரனின் கொலைக்குப் பழிக்குப்பழி வாங்கவே செய்தான் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அமாசாவை கொன்ற போது, யோவாபின் சரியான நோக்கம் வெளிப்படுகிறது. தாடியைப் பிடித்தபோது கூட அமாசா சந்தேகப்படவில்லை; அப்படிப்பட்ட கபடற்றவனை, கொல்வதற்கு யோவாபின் இதயம் கடினப்பட்டுவிட்டது. தாவீது, யோவாபுக்கு பதிலாக அமாசாவை படைத்தலைவனாக்குவதாகக் கூறிய வார்த்தைகளே (IIசாமு.19:13), யோவாபுக்குள் இந்த துர்க்குணத்தைத் தூண்டிவிட்டுவிட்டது. பல வேளைகளில், நீங்கள் மற்றவர்களைக் கனப்படுத்துவதாக கூறிய வார்த்தைகள், அவர்களது உயிருக்கே உலவைத்துவிடலாம். சமயத்துக்கு முந்தி கூறப்படுகின்றவை, இப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தலாம்.

யோவாபின் தன்மை ஒரு ஜென்ம சுபாவம். தன்னுடைய இடத்திற்குப் பாதிப்பு வருகிறது என்று தெரிந்து விட்டால் ஜென்ம சுபாவமுள்ளவன், எவன் போட்டியாளனோ, அவனை அழித்துவிட

கங்கணம் கட்டுவான். ஆகவேதான், தாவீது சாவதிற்குமுன், சாலொமோனிடம், யோவாபைப் பற்றி கவனமாயிருக்கும்படி கேட்டுக் கொண்டான்.

சமாதான காலத்திலே, ரத்தம் சிந்தின மனிதனாக யோவாப் மாறிவிட்டான். இவ்வளவு நற்குணங்களும், நற்கிரியைகளும் கொண்ட மனிதன் தன்னைவிட யாரும் மேலே வந்துவிடக்கூடாது என்ற குணத்தில், அவனது வாழ்வின் இறுதிக்காலத்தை சறுக்கலானதாக மாற்றிக் கொண்டான்.

## 'புத்தி' பட்டணத்தையே பாதுகாக்கும்

*(II சாமு. 20:16-22)*

**''அப்பொழுது புத்தியுள்ள ஒரு ஸ்திரீ பட்டணத்திலிருந்து சத்தமிட்டு... அவள் ஜனங்களிடத்தில் போய்ப்புத்தியாய் பேசினதினால், அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி, யோவாபினிடத்தில் போட்டார்கள்....''**

ஒரு பெண் புத்தியுள்ள பெண் என்று கூறப்பட்டுள்ளது அவள் பெரிய அழிவினின்று தன் பட்டணத்தையே ரட்சித்தாள். யோவாபோடும், பட்டணத்து மக்களோடும் புத்தியாய்ப் பேசி, ஒரு மனிதனை மட்டும் களையெடுக்கும்படி செய்து, தன் மக்களைக் காத்துக்கொண்டாள்.

'பெண் புத்தி' பின் புத்தி' என்ற உலகமொழிக்கு முரணாக, வேதத்தில் பல இடங்களில் பெண்கள் அரிய செயல்கள் புரிகின்றதைக் காண்கிறோம். இக்கட்டான நிலையிலே, ஓர் ஆண் செய்யக்கூடாததை, ஒரு பெண் சாதித்தாள். அவளது பெயர் குறிப்பிடப்படவில்லை. அவள் புகழ்பெற்றவள் அல்ல; ஆனால் புத்தியுள்ளவள். அப்படிப்பட்டவர்கள் தங்களது வார்த்தைகளைக் கொண்டே ஆபத்தை அழிவை அமளியைத் தடுத்து நிறுத்த முடியும்.

*தேவனே! எங்களைப் புத்தியுள்ளவர்களாக மாற்றும் எங்கள் ஒருமனப்பாட்டிலே விரிசலை காண்பித்து, சத்துருவுக்கு இடங்கொடுத்துவிடாதபடி, காத்தருளும்; என்னைவிட எவரும் மேலே வந்துவிடக் கூடாது என்ற தன்மையிலிருந்து எங்களை விடுவித்து மறுரூபமாக்கும். ஆமென்.*

# சவுலின் பாவத்திற்கு, தாவீது காலத்தில் பஞ்சம் ஏன்?

*(II சாமு 21:1)*

**''தாவீதின் நாட்களில் மூன்று வருஷம் ஓயாத பஞ்சம் உண்டாயிருந்தது: அப்பொழுது தாவீது கர்த்தருடைய சமூகத்தில் விசாரித்தான். கர்த்தர் கிபியோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும், இரத்தப்பிரியரான அவன் வீட்டாருக்காகவும் இது உண்டாயிற்று** *என்றார்.''*

வாழ்விலே மேடு பள்ளம், குறைவு, நிறைவு வருவது இயல்பே; 'ஓயாத பஞ்சம்' என்று குறைவுகளும், கடினங்களும், நெருக்கங்களும் தொடர்ச்சியாக நிலைக்கும்போது, தேவசமூகத்திற்குச் சென்று அவற்றைத் தீர்ப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வது, தேவமனிதனுக்கு ஏற்றதாயிருக்கிறது.

சவுலும், அவனது வீட்டாரும் செய்த பாவம், ஏன் தாவீது காலத்தில் பஞ்சத்தைக் கொண்டு வர வேண்டும்? கர்த்தர் ஏன் இப்படிச் செய்கிறார் என்ற கேள்வி நமக்கு எழும்பலாம்.

கிபியோனியர், நாடகமாடி தந்திரமாக யோசுவா காலத்தில் இஸ்ரவேலரோடு உடன்படிக்கை செய்து கொண்டவர்கள். யோசுவா அந்த உடன்படிக்கையை மதித்தான். சவுலோ அதை உடைத்துப் போட்டு, கிபியோனியர் பலரை அவனும் அவனது வீட்டாரும் காரணமில்லாமல், வெறும் இனவெறியினால் கொன்றுபோட்டனர். இச்சம்பவம் கிபியோனியர் உள்ளங்களிலே காயத்தை உண்டாக்கியிருந்தது. கர்த்தரின் இதயத்திலும் இது காயமாக இருந்தது. அக்காயத்தை சரிப்படுத்தவேண்டும் என்று உணர்த்தவே கர்த்தர் பஞ்சத்தை அனுமதித்தார். நான் விதைத்ததை என் பிள்ளைகள் அறுப்பார்களே, தேசமே பாதிக்கப்படுமே, என்ற உணர்வு இருந்தால், எந்த மனிதனும் பாவஞ்செய்யமாட்டான்.

## எது உடன்படிக்கை?

எந்த சூழ்நிலையில், யாரோடு பண்ணியிருந்தாலும் அந்த

உடன்படிக்கையை உடைப்பதைத் தேவன் விரும்புகிறதில்லை. இங்கே ஓர் எச்சரிக்கையை அளிக்க விரும்புகிறேன்.

ஓர் ஆணுக்கும், பெண்ணுக்குமிடையே தன்னிச்சையாக 'நான் உன்னைத்தான் மணந்துகொள்வேன்' என்று ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அது ஒருபோதும் உடன்படிக்கையாகிவிடாது. அது சரீரத்தின் உணர்ச்சிகளின் அடிப்படையில் உண்டாவது.

தேவசமூகத்திலே, ஊழியக்காரர்கள், தேவபிள்ளைகள் முன்னிலையில் வாக்கு கொடுப்பதுதான் உடன்படிக்கை ஆகும். இரண்டு தனிநபர்கள் ரகசியமாக பண்ணிக் கொள்வது உடன்படிக்கையாகாது. நமக்கொரு கேள்வி எழலாம்; தாவீதும், யோனத்தானும் அவ்வாறுதானே உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்; என்று அவர்கள் தனிப்பட்ட சுகத்திற்காக அல்ல, வரப்போகிற தலைமுறையின் நலனுக்காக ஆணையிட்டுக் கொண்டார்கள். எனவே, அது உடன்படிக்கையே.

இரண்டு நாடுகள், இரு இனங்கள் நடுவே உண்டாகிற உடன்படிக்கையைச் சரியாகக் கடைபிடிக்கிறார்களா என்று, கர்த்தர் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். தாவீது ஓர் உடன்படிக்கை முறிவை சரிசெய்ய, இன்னொரு உடன்படிக்கையை முறிக்கவில்லை (வ:7) ஒரு தவறை சரிசெய்ய, இன்னொரு தவறு செய்வது விபரீதமானது.

## சிட்சிக்கவா, பயன்படுத்தவா, கற்பிக்கவா?

*(II சாமு 21:2-14)*

*"அப்பொழுது ராஜா: கிபியோனியரை அழைப்பித்தான்...*

*....தாவீது, கிபியோனியரைப் பார்த்து: நான் உங்களுக்கு செய்யவேண்டியது என்ன? நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு நான் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் என்ன என்று கேட்டான். அவர்கள் ராஜாவை நோக்கி... "அவன் குமாரரில் ஏழுபேர்; கர்த்தர் தெரிந்து கொண்ட சவுலின் ஊராகிய கிபியாவிலே, நாங்கள் அவர்களைக் கர்த்தருக்கென்று தூக்கிப்போட, எங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும்" என்றார்கள்...*

*அவர்களைக் கிபியோனியர் கையில் ஒப்புக்கொடுத்தான்...*

*... அதற்குப் பின்பு தேவன் தேசத்திற்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்...."*

தாவீது, தேசத்தின் சாபம் நீங்க எதையும், செய்யத்தயாராயிருந்தான். ஆகவேதான், அவன் தேவனுடைய இதயத்திற்கு ஏற்றவனாக இருந்தான். பிரச்சனைகளோ, குறைவோ வரும்போது கேட்கவேண்டிய கேள்வி,

- ஆண்டவரே, என்னை சிட்சிக்கும்படியாக இது அனுப்பப்பட்டிருக்கிறதா?

(அல்லது)

- எனக்கு ஏதேனும் பாடம் கற்பிக்க அனுப்பப்பட்டுள்ளதா?

(அல்லது)

- இதன் மூலம் நான் பிறருக்கு ஆசீர்வாதமாக பயன்படுவதற்கு, அனுப்பப்பட்டுள்ளதா?

கர்த்தரிடம் விசாரித்து, அறிந்து கொள்ள வேண்டும். எனக்கு ஏன் வந்தது? என்ற கேள்வி சரியல்ல நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்பதே ஏற்றது.

**சில நோய்கள் காலநிலை, இயற்கை நிலை காரணமாகவும் வரலாம்; ஆனால், சில நோய்கள், தேவனிடம் நம்மை சரிசெய்யவைப்பதற்காகவே அனுப்பப்படலாம். அதே கண்ணோட்டத்தில் வாழ்வின் எல்லா நெருக்கங்களையும் அணுக வேண்டும்.**

*பிதாவே, யாரோ செய்த தவறை, நான் சரிசெய்ய வேண்டும் என்பதற்காகவும் நெருக்கங்கள் வரலாம், என்பதை தெரிந்துகொள்ள உதவிசெய்யும். உடன்படிக்கை எது? என்ற தெளிவைத் தாரும் உடன்படிக்கையை நீர் எப்படி கண்காணிக்கிறீர் என்ற உணர்வைத் தந்தருளும் நெருக்கங்கள் வரும்போது அதன் காரணத்தையும், அதன் தீர்வையும் உம் சமூகத்தில் விசாரித்துக் கண்டுபிடிக்க கிருபையருளும் ஆமென்.*

29

# மாறுபாடானவனுக்கு கர்த்தர் மாறுபடுகிறவர்....

## விண்ணையும், மண்ணையும் அசைக்கும் விண்ணப்பம்

*(II சாமு.22:7-16)*

**"...என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று!**

**அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது....**

**வானத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது**

**.... வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்...**

**கேரூபீனின்மேல் ஏறி வேகமாய்ச் சென்றார்....**

**நெருப்புத் தழலும் எரிந்தது...**

**கர்த்தர் வானத்திலிருந்து குமுறி, உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார்.**

**...சமுத்திரத்தின் மதகுகள் திறவுண்டு..."**

ஒரு மனிதனின் ஜெபம்; பூமியையும், வானத்தையும் சமுத்திரத்தையும், காற்றையும், மேகங்களையும், நெருப்பையும், மின்னல்களையும் வெகுவாகப் பாதித்து அசைத்துவிட்டது. கர்த்தர் செய்கிறதைப் பார்த்தால், விசித்திரமாக இருக்கிறது. ஒரு பைத்தியக்காரனைப் போல நடந்துகொள்கிறாரோ, என்று எண்ணத் தோன்றுகிறது. இறங்கினார், வேகமாகச் சென்றார், குமுறினார், சத்தமிட்டார். ஒரு மனிதனுடைய ஜெபம் கர்த்தரை அமர்ந்திருக்கவிடாமல், அங்குமிங்கும் அலைமோதும்படி செய்தது.

கர்த்தரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்' என்று வேதத்திலே இன்னொரு இடத்திலே வாசிக்கிறோம்.

ஒரு மனிதனுடைய ஜெபத்திற்கே இவ்வளவு விளைவுகள் என்றால், நாம் குழுவாக ஜெபிக்கும்போது, எவ்வளவு மகத்தான அசைவுகள் உண்டாகும்!

ஒரு ஜெர்மானிய பிரசங்கியார், தென்கொரியநாட்டின் பால் யாங்கி சோ-விடம் கேட்டார், இதே பிரசங்கத்தை, இதே விதத்தில் எனது நாட்டில் பிரசங்கித்தபோது, பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை: ஆனால், இங்கு பிரசங்கித்தபோதோ, பலர் ஆண்டவரிடம் திரும்புகிறதையும், குணமாக்கப்படுவதையும், அற்புதங்கள் நடப்பதையும் காணமுடிகிறதே என்று;

பால் யாங்கி சோ சொன்னார், ''தென் கொரியாவிலுள்ள தேவமக்கள் ஜெபித்து, ஜெபித்து, வானமண்டலங்களில் ஒரு விடுதலையையும், ஒரு திறப்பையும், ஜெயத்தையும் உண்டாக்கி வைத்துள்ளார்கள். ஆகவே, எந்தப் பிரசங்கத்தைச் செய்தாலும், பெரிய பலன் கிடைக்கிறது ஜெபம் மக்கள் இதயங்களை நல்ல நிலமாக மாற்றி வைத்துள்ளது. ஜெர்மனியில் அப்படி அல்ல' என்றார்.

## எந்த அளவினால் அளக்கிறோமோ, அதே அளவினால் அளக்கப்படும்

*(II சாமு 22:26,27)*

''தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடானவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்.''

தேவன் மாறுபாடானவனுக்கு மாறுபடுகிறவராக தோன்றுகிறார். பீஹார் 'ஜாங்கிரி'யைப் போல கோணலானவனுக்கு, கோணலானவனாக தோன்றுகிறார். உத்தமனுக்கு அவர் உத்தமராகத் தோன்றுகிறார்.

ஓர் ஆங்கிலப் பாடல் இப்படி கூறுகிறது, என்னை எந்த அளவுக்குக் கர்த்தருக்குத் தருகிறேனோ, அந்தஅளவுக்கு அவர் தம்மை எனக்குத் தருவார்.

எந்த அளவினால் அளக்கிறோமோ, அதே அளவினால் தேவன் நமக்குத் திரும்ப அளக்கிறார்.

## உச்சக்கட்ட நெருக்கத்திலும், உண்மையைக் காத்தான்

*(II சாமு. 22:5,6,20,22,23,24)*

''மரண அலைகள்... பாதாளக்கட்டுகள் சூழ்ந்து.. மரணக்கண்ணிகள் என் மேல் விழுந்தன.

அவர் என் மேல் பிரியமாயிருந்தபடியால்...

... என் தேவனுக்குத் துரோகம்பண்ணினதில்லை...

அவர் முன்பாக மன உண்மையாயிருந்து, என் துர்க்குணத்திற்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்....''

இப்பாடலைத் தாவீது, சவுல் உள்ளிட்ட சத்துருக்களுக்கு நீங்கலாக்கப்பட்ட போது பாடினான். சவுல் காரணமில்லாமல் தாவீதைத் துரத்தினான். தாவீது அவனுக்கு எந்தத் தீங்கும் செய்ததில்லை. தாவீது, நெருக்கங்கள் மேல் நெருக்கங்களை நாலாபக்கங்களிலும் சந்தித்து, வாழ்வின் கடைசிகட்டத்திற்கே வந்துவிட்டான். மரண அலைகள் மோதுகிற நிலை. இனி யாரும் உதவமுடியாத நிலை. பயமும், திகிலும் அவனை வேதனைப்படுத்தியது.

அதே நிலை நமக்கு வந்திருந்தால் தளர்ந்து போவோம்: ஆவிக்குரிய தற்கொலை செய்து கொள்வோம்: 'இனி ஊழியம் செய்யமாட்டேன், இனி அப்பணிக்குள் இருக்கமாட்டேன்' என்று முடிவெடுப்பதே ஆவிக்குரிய தற்கொலை. கர்த்தருக்குள்ளான தீர்மானங்களை மீறிவிடுவோம்.

ஆனால், ஆவிக்குரியவனான தாவீதோ அந்நிலையிலும், கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்தான். மனிதர்கள் அவனுக்குத் துரோகம் பண்ணினாலும், அவன் யாருக்கும் துரோகம் பண்ணவில்லை. கர்த்தருடைய வழிகளைக் காத்துக் கொண்டான்.

## உபத்திரவத்திலும் உண்மையானவன் உயர்த்தப்படுகிறான்

*(II சாமு.22:34-36,44)*

''அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என் உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

....உம்முடைய காருண்யம் என்னைப் பெரியவனாக்கும்.

....ஜாதிகளுக்கு என்னைத் தலைவனாக வைக்கிறீர்: நான் அறியாத ஜனங்கள் என்னைச் சேவிக்கிறார்கள்''

வாழ்வின் கடைசிக்கட்டத்திற்குப் போனபிறகுதான் இது நடக்கும் 'இனி அவ்வளவுதான்' என்று சொல்லக்கூடிய நிலையில்தான் கர்த்தர் உண்மையுள்ளவர்களை உயர்த்துகிறார். கர்த்தர் கொடுக்கிற பரிசுப்பொருள் பெரியது. எல்லாம் தவறாக நடக்கும் போதுதான், இது

நடக்கும். உயர்ந்த இடங்களில் நம்மை நிறுத்துவார். பெரியவனாக்குகிறார்; தலைவனாக வைக்கிறார்; நான் அறிந்திராத மக்கள் என்னுடைய தலைமையை ஏற்றுக்கொள்வார்கள்.

## எனக்காகப் பழிவாங்கும் தேவன்

*(IIசாமு.22:48)*

''அவர் எனக்காகப் பழிக்குப்பழி வாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர்''

என் சத்துருக்களை நான் ஒன்றும் செய்யவேண்டியதில்லை கர்த்தர் எனக்காகப் பழிக்குப்பழி வாங்குகிறவர், என்றான் தாவீது 'கர்த்தர் பழிவாங்குகிறவர் என்ற வெளிச்சம் நமது வாழ்விலே உண்டாக வேண்டியது அவசியம்.

நாம் ஜெபம் பண்ணினால் போதும் மனம் பதற வேண்டியதில்லை. கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

*பிதாவே, ஜெபத்தின் வல்லமையை உணர்ந்துகொள்ள அருள்புரியும். நான் சரியான அளவில் அளந்து, தயவுள்ளவராகவும், உத்தமராகவும் உம்மைக் கண்டுகொள்ளட்டும். மரணத்தின் வாசலைத் தொடுகிற அளவு நெருக்கம் வந்தாலும், உத்தமத்தில் உறுதியாக இருக்க உதவிசெய்யும். உச்சக்கட்ட உபவத்திரவத்திற்குப் பிறகுதான் உயர்வு வரும் என்று அறிந்து உம்மைத் துதிக்கிறேன். நீர் எனக்காகப் பழிக்குப்பழி வாங்குகிறவர் என்ற வெளிச்சத்தை எனக்குத் தந்தருளும். ஆமென்.*

# திறமைகள் வேறாயினும், தரிசனம் ஒன்றே

தாவீது ஒருபோதும் தோல்வியைக் கண்டதில்லை. அவனது வெற்றியின் ரகசியத்தைத் தேவன் இங்கே II சாமு 23 அதிகாரத்தில் காண்பிக்கிறார். தாவீது தனியாகச் செயல்படாமல், குழுவாக செயல்பட்டதே அதன் சூட்சுமம்.

37 பராக்கிரமசாலிகள் அவனோடே இருந்தார்கள். அவர்களில் 7 பேர் குறிப்பிடத்தகுந்தவர்கள் 3 பேர் முதன்மையானவர்கள்.

1. யோசேப்பாசெபெத் - 800 பேரை ஒருமிக்க வெட்டினவன் (வ.8)
2. எலெயாசார் - தன்கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளும் மட்டும் வெட்டினவன் (வ.9,10)
3. சம்மா - நிலத்தைக் காப்பாற்ற, ஏராளமான பெலிஸ்தரை வென்றவன் (வ.11,12)

"... இந்த மூன்றுபேரும் அறுப்புநாளில்... தாவீதிடத்தில் போயிருந்தார்கள்... அப்பொழுது பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமில் இருந்தது. தாவீது பெத்லகேமின் ஒலிமுக வாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல் கொண்டு, என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார் என்றான்.

அப்பொழுது இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் பெலிஸ்தரின் பாளையத்திலேதுணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதிடத்தில் கொண்டு வந்தார்கள்..." (வ. 13-16)

3 பேரும் 3 விதமான ஆற்றல் படைத்தவர்கள். ஆனால், ராஜாவின் தாகத்தைத் தீர்க்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இணைந்து செயல்பட்டு, வெற்றிபெற்றார்கள்.

3 சூட்சுமங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்

1. கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டக் கிருபைகளை அருளியுள்ளார்.
2. நாம் தனித்து இயங்குவதற்காக அல்ல, குழுவாக இயங்குவதற்கே கிருபைகள் நமக்கு அருளப்பட்டுள்ளது.

3. எல்லாருடைய கிருபைகளையும் ஒன்றிணைக்கும்போது, கூடாதவற்றையும் செய்வதற்கான வல்லமை உருவாகிறது.

மூன்று பராக்கிரமசாலிகளும், தங்களது ராஜாவின் தாகத்தைத் தீர்க்க ஒருமனப்பட்டதுபோல, வெவ்வேறான கிருபைகளைப் பெற்ற நாமும், எல்லாரும் ரட்சிக்கப்பட வேண்டும், எல்லாரும் சத்தியத்தை அறிய வேண்டும் என்ற தேவனின் தாகத்தை தீர்க்கின்ற ஒரே தரிசனத்தோடு செயல்பட வேண்டும். அவர்கள் தங்கள் பிராணனையும் எண்ணாமல் புறப்பட்டுப்போனார்களே. நாமும் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாது உழைத்திடுவோம். கிருபைகள் நமக்குள் வேறுபட்டாலும், தரிசனம் நம்மை இணைக்கிறது.

## பெரிய சுவிசேஷகனும், சிறிய சுவிசேஷகனும்

*(II சாமு. 23:8,18)*

''யோசேப்பாசெபெத் ....எண்ணூறு பேர்களின் மேல் விழுந்து, அவர்களை ஒருமிக்க வெட்டிப்போட்ட அதீனோரஸ்னி ஊரானானவன்.

.... அபிசாய்... தன் ஈட்டியை ஓங்கி முந்நூறு பேரை மடங்கடித்ததினால்...''

திரள் கூட்டத்திற்கு நற்செய்தி அறிவித்து, ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிற சுவிசேஷகர்களுக்கு இவர்கள் அடையாளமானவர்கள். ஒருவன் 800 பேரை ஒருமிக்க வெட்டினான். இவன் மிக அதிகமான ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிற கிருபை பெற்றவனுக்கு அடையாளமானவன். இன்னொருவன் 300 பேரை மடங்கடித்தான்; இவன் முந்தினவனை விட குறைவான ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிற அளவு கிருபை பெற்றவன்.

## போதகன் (Bible Teacher)

*(II சாமு. 23:9,10)*

''எலெயாசார்... தன் கை பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டினான்.''

வேத வசனத்தின் ஆழத்தைக் கற்றுக்கொண்டு, வசனமாகிய பட்டயத்திற்கும், அவனுக்கும் வித்தியாசம் இல்லாத அளவுக்கு ஒன்றாக கலந்து, வசனத்தில் நிறைந்திருக்கிற கிருபைகளைப் பெற்றவன் இவன் போதகன் வேதங்களிலே வல்லவன்.

## மேய்ப்பன் (Pastor)

*(II சாமு 23:11,12)*

"சம்மா... சிறுபயறு நிறைந்த வயலிருந்த இடத்திலே பெலிஸ்தர் ஏராளமாய்க் கூடி, ஜனங்கள் பெலிஸ்தரைக் கண்டு ஓடுகிற போது, இவன் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றி, பெலிஸ்தரை மடங்கடித்துப் போட்டான். அதனால் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்"

இவன் ஒரு குறிப்பிட்ட பகுதியை, வயல் நிலத்தை, சத்துரு பிடித்துவிடாதபடி போரிட்டுக் காத்தவன்: பயிர்களையும் சத்துருவின் கையிலிருந்து காத்தான்: ஜனங்கள் ஓடிவிட்டபோதிலும், இவன் அங்கேயே நின்று சத்துருக்களை மேற்கொண்டவன்: இவன் மேய்ப்பனுக்கு அடையாளமானவன். ஒரு சபையிலேயே இருந்து, அங்குள்ள ஆத்துமாக்களைக் காக்கிற சபைமேய்ப்பனின் ஊழியத்தை இது குறிக்கிறது.

## நாளைய தீங்கை, இன்றே தேடிப்போய் அழிப்பவன்

*(II சாமு.23:20)*

"..பெனாயாவும் செய்கைகளில் வல்லவனாயிருந்தான்: அவன் மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்றதுமல்லாமல், உறைந்த மழை காலத்தில் அவன் இறங்கிப் போய், ஒரு கெபிக்குள் இருந்த ஒரு சிங்கத்தையும் கொன்றுபோட்டான்".

இவன் ஒரு செயல்வீரன்; இவனது ஆர்வம் பெரிது; இரண்டு சிங்கங்களை; கொன்று போட்டான்; இன்னொரு சிங்கம் கெபிக்குள் மறைந்திருந்தது. தட்பவெப்பம் வேறு சரியில்லை; கல்மழை பெய்கிற காலம் ஆனால், மறைந்திருந்த சிங்கத்தை அதன் கெபிக்குள்ளே சென்று கொன்று போட்டான்.

சத்துரு நம் முன்னால் வந்தால், நாம் மேற்கொள்ளாமல் விடமாட்டோம்; ஆனால், எங்கோ மறைந்திருக்கிற சத்துருவை தேடிப்போய், அவனது கோட்டையிலேயே சந்தித்து மேற்கொள்வதற்கு, ஒரு தாகமும், வைராக்கியமும் தேவை; இந்த வைராக்கியம் இல்லாததினால்தான் சந்திக்கப்பட வேண்டிய அநேக இடங்கள், சந்திக்கப்படாத இடங்களாக கிடக்கின்றன. என் முன்னால் வருகிற, சுவிசேஷ வாய்ப்புகளை மட்டுமே, பயன்படுத்திக்கொள்வேன் என்று கூறாமல், வாய்ப்புகளை நாம் தேடிச் செல்ல வேண்டும் அல்லது உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

இன்றைக்கு ஒரு வேளை எனக்கு ஆபத்து விளைவிக்காத ஒன்று, எதிர்காலத்திலே ஆபத்தை விளைவிக்கலாம். அது மறைந்து கிடக்கிறது இப்போது காலநிலையும் சாதகமாயில்லை எனினும், வரப்போகிற தீங்குக்கு இப்போதுதானே முற்றுப்புள்ளி வைப்பதுதான் உண்மையான ஆவிக்குரிய செயல்வேகம்.

இத்தகைய துடிப்பும், உற்சாகமும் நம்மில் காணப்படாவிட்டால், பராக்கிரமசாலிகள் வரிசையில் இடம்பிடிக்கமாட்டோம். கூட்டத்தில் எல்லாரோடும் சேர்ந்து போரிட்டு விட்டேன் என்பது போதாது; அதன் நடுவிலே ஒரு பராக்கிரமசாலியாகத் திகழ வேண்டும்.

இந்தப் பெனாயா அசாதாரண செயலைப் புரிந்தவன்: இரண்டாவது மைல் வரை சென்றவன் இரண்டு சிங்கங்களைக் கொன்ற பழைய வெற்றியிலேயே திருப்தியடையவில்லை: புதிய வெற்றிகளை மேன்மையான வெற்றிகளைப் பெறத் துடித்து செயல்பட்டான்.

## பட்டியலில் இறுதியானவன், படை தீரத்தில் உறுதியானவன்.

*(II சாமு 23:39)*

"ஏத்தியனாகிய உரியா என்பவர்களே: ஆக முப்பத்தேழு பேர்"

கடைசியானவன்தான் உரியா. என் தலைவனும், உடன்படிக்கைப் பெட்டியும் போர்க்களத்தில் இருக்கும்போது, நான் மட்டும் என் வீட்டிற்குச் சென்று இன்பம் காண்பேனோ? என்ற துடிப்பு: எனது குடும்பத்தைவிட எனது தலைமையும், எனது தேவனுடைய உடன்படிக்கையும் தான் எனக்குப் பெரிது என்ற வேகம் இவற்றின் வடிவம்தான் உரியா.

இந்நாட்களில் வெற்றி மேல் வெற்றி குவிக்க வேண்டுமானால், என்ன வந்தாலும், உயிரையும் பெரிதாக எண்ணாமல் கர்த்தருக்காக சாதித்தே ஆக வேண்டும் என்ற பிடிவாதமும் துடிப்பும் மிகமிக அத்தியாவசியம்.

*பிதாவே, நீர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான கிருபைகளை அருளியிருக்கிறதற்காக துதிக்கிறேன். தனித்து சிலம்பம் பண்ணாமல், கூட்டாக செயல்பட கிருபைதாரும். உமது தாகம் எங்களது தரிசனமாகி, எங்களை இணைக்கட்டும் இரண்டாவது மைல் வரை சென்று, வைராக்கியம் கொண்டு உமக்காக பராக்கிரமசாலியாக மாற அக்கினியை ஊற்றும். ஆமென்.*

# ஏற்ற செயலா? என்பதை விட, ஏவியது யார்? என்பதே கேள்வி

*(IIசாமு 24:1)*

"கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின் மேல் மூண்டது இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு **தாவீது ஏவப்பட்டான்**".

*(I நாளாகமம் 21:1)*

"சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் **தாவீதை ஏவி விட்டது**".

தேவ ஆவியினால் நிறைந்து பாடல்களை எழுதினவன் தேவனையே சார்ந்து வாழ்ந்தவன் அத்தகைய தாவீதின் மூலமாகத்தான் இஸ்ரவேலின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு சாத்தான் செயல்பட்டான். நம்மையும் பிசாசு இவ்விதமாக ஏவுவதற்கு வாய்ப்புண்டு, எச்சரிக்கை

மக்களை இலக்கம் பார்த்தது தவறல்ல, எத்தனையோ முறை அவ்விதம் இலக்கம் பார்க்க தேவன் அனுமதித்ததுண்டு இல்லையென்றால் 'எண்ணாகமம்' என்ற புத்தகமே வேதாகமத்தில் இராது. ஆனால், அது சாத்தானால் தூண்டப்பட்ட செயலாக இருந்ததுதான் தவறு.

தேவன் அனுமதிக்கிற செயல்களைச் சாதாரணமாக செய்வது தவறில்லை. ஆனால் அதே செயலை, சாத்தானின் ஏவுதலோடு செய்வதுதான், குற்றம். சாத்தான் பாவமாகத் தோன்றுகிற காரியத்தில் தள்ள முற்படமாட்டான். ஏனென்றால், நாம் எச்சரிக்கையடைந்து விடுவோம் நலமாகத் தோன்றுகிற காரியத்திற்குள் தள்ளுவான். நாம் ஏமாந்து விடுவோம், எனவே, நமது வாழ்வில் என்ன செய்தாலும், தேவனின் தயவோடு செய்யவேண்டும்.

## மாற்றுக் கருத்துகளை மறுக்காதீர்

*(II சாமு. 24:3)*

"அப்பொழுது யோவாப் ராஜாவைப்பார்த்து, ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி, உம்முடைய தேவனாகிய கர்த்தர்

ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக! ஆனால், என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன? என்றான்.''

யோவாப், தாவீதிடம் மாற்றுக்கருத்தைத் தெரிவித்தான் 'என்னைப் போல நீ ஆண்டவரோடு நெருங்கியிருக்கிறாயா? என்னைவிட உனக்கு அதிக விவரங்கள் தெரியுமா? என்று எண்ணி நமக்கு முன் வைக்கப்படும் மாற்றுக் கருத்துக்களையும், எதிர்ப்புகளையும் அலட்சியப்படுத்திவிட வாய்ப்புண்டு. ஒன்றைச் செய்ய முயலும்போது, யாராவது ஒருவர் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பாரானால், அதில் ஏதாவது அர்த்தம் இருக்கும் என்று கருதி; நின்று, நிதானித்துப்பார்க்கிறவன் புத்திமான். தாவீது ஆலயம் கட்ட விரும்பினான். நாத்தான் வேண்டாம் என்றவுடன் நிறுத்திக் கொண்டான். அது போல செய்திருக்கலாம். GEMS சிலே ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தும்போது, எல்லாத் தலைவர்களும் அதை ஏற்று ஆமோதிக்கும் வரை காத்திருப்பது வழக்கம் எல்லா தலைவர்களும் அதைப் புரிந்து கொண்டு, தெளிவடைந்து, அதை ஒப்புக்கொண்ட பிறகே, அத்திட்டம் செயல்படுத்தப்படும். ஏன் அதை அதுவரை நிறுத்தி வைக்கிறோம். தலைவர்கள் யாவருக்குள்ளும் ஒருமனம் வரவேண்டியது அவசியம். இன்று வரை, இம்முறையை கடைப்பிடிக்க GEMS கவனமாயிருக்கிறது.

யோவாப், தாவீதின் கட்டளையை சரியென்று ஒப்புக் கொள்ளாவிட்டாலும், கடமைக்காகக் கீழ்ப்படிந்தான். ஆகவே, அவனது செயல்பாடு முழுமைபெறவில்லை.

*(I நாளாகமம் 21:6)*

''ஆனாலும் ராஜாவின் வார்த்தை யோவாபுக்கு அருவருப்பாயிருந்தபடியினால், லேவி, பென்யமீன் கோத்திரங்களில் உள்ளவர்களை அவர்களுடைய இலக்கத்திற்குட்பட எண்ணாதேபோனான்''.

ஒரு தலைவன், தனது சகாக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்பதற்கும், அவற்றைப் பரிசீலிப்பதற்கும் ஆயத்தமில்லாதவனாக இருந்தால், அவனது சகாக்கள் முழுமனதோடு செயல்படமாட்டார்கள். ஒருவேளை, தனது அதிகாரத்தினால்தலைவன் காரியத்தைச் சாதித்துக்கொள்வான் ஆனால், சகாக்களின் முழு ஒத்துழைப்பு அவனுக்குக் கிடைக்காது.

## எதிரிக்கு இடம் கொடுத்தால் இதயம் வாதிக்கும்

*(II சாமு.24:10)*

''இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி நான் இப்படி செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன் இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும் நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்''.

தாவீதின் முயற்சியை யோவாப் தடுக்க முயன்றும், தாவீது 'அரசன்' என்ற மமதையால் தான் நினைத்ததை நடத்திமுடித்தான். பெரிய பாவம், என்று நம்மால் சொல்லமுடியாவிட்டாலும், பிசாசுக்கு இடங்கொடுத்துவிட்டான், என்று நிச்சயமாகக் கூறமுடியும். அதன் பிறகு, தாவீது தேவசமூகத்திற்குப் போன போது, அவன் இதயம் அவனை வாதித்தது.

நாம் பாவம் செய்திராவிட்டாலும், ஏதாவது ஒரு பகுதியிலே சாத்தானுக்கு இடங்கொடுக்கும் பட்சத்தில், நமது இதயமே நம்மை வாதிக்கும் உண்மையான ஆவிக்குரிய மனிதர்களுக்கு நிச்சயமாக இதயம் வாதிக்கும்.

## மக்களுக்கு 10 தருணங்கள், தலைவனுக்கோ ஒரே தருணம்

*(II சாமு 24:11,12)*

''... காத் என்னும் தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகிச் சொன்னது

நீ தாவீதினிடத்தில் போய், மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன். அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்...

உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வரவேண்டுமோ? அல்லது மூன்று மாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போக வேண்டுமோ? அல்லது மூன்று நாள் கொள்ளை நோய் உண்டாக வேண்டுமோ?....''

நாம் கிறிஸ்துவை அறியாத காலங்களில் செய்த அக்கிரமங்களை தேவன் கண்டும் காணாதவர் போல இருக்கின்றார். ஆனால், நாம் அவரிடம் நெருங்கநெருங்க, நம்மிடத்திலிருந்து அதிக பரிசுத்தத்தை எதிர்பார்க்கின்றார். நீதிமானுக்கு பூமியில் சரிக்கட்டப்படுமே *(நீதிமொழிகள் 11:31)*

இஸ்ரவேல் மக்கள் பத்து தடவை முரட்டாட்டம் பண்ணின பிறகுதான், அவர்களைக் கானானுக்குள் பிரவேசிக்க இயலாதபடி தேவன் செய்தார் (எண்ணாகமம் 14:22-23) மோசே ஒரே ஒரு தடவைதான் தவறு செய்தான். கோபத்தினாலே கன்மலையை அடித்துவிட்டான். மோசேயைக் கானானுக்குள் பிரவேசிக்காதபடி செய்துவிட்டார்.

நமக்குள் இவ்வாறான எண்ணம் எழலாம், 'தேவனை நெருங்கித் தானே இத்தனை தொல்லை; அப்படியானால், தூரத்தில் நின்று தேவனைத் தேடிவிட்டுப் போகிறேன்' என்று ; அவரை நெருங்குவதால் கிடைக்கிற ஆசீர்வாதங்கள் ஒப்பற்றவை. தாவீதோடு தேவன் நித்திய உடன்படிக்கை பண்ணினார். (II சாமு. 23:5) தாவீது தேவனிடம் தூரமாய் நின்றிருந்தால் இந்தச் சிலாக்கியம் கிடைத்திருக்காது. தாவீதின் சந்ததியிலே வந்து இயேசுகிறிஸ்து பிறந்தாரே 'தாவீதின் குமாரன்' என்று தேவகுமாரன் அழைக்கப்பட்டாரே; இது தாவீது தேவனோடு நடந்ததால் பெற்ற பாக்கியங்கள்.

## பகிரங்க பாவ அறிக்கை

*(II சாமு.24:17)*

"..இதோ நான்தான் பாவஞ்செய்தேன் நான்தான் அக்கிரமம் பண்ணினேன் இந்த ஆடுகள் என்ன செய்தது?...

ஒரு மனிதன் தன் பாவத்தை ஒத்துக்கொள்வது மிகக்கடினம் அதுவும் தனது பாவத்தால் பிறர் பாதிக்கப்படுகிற நிலையில், ஒத்துக்கொள்வது மிக அரிது. ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தபோது, தங்களது பாவத்தை மூடினார்கள். பிறர் மீது பழி போட்டார்கள். அதுவே மனித இயல்பு. ஆனால், தாவீதோ மாறுபட்டு நின்றான்.

கர்த்தரின் கையில் விழுவோம் அவரது இரக்கங்கள் பெரிது என்றான் (வசனம்.14)

'மூன்று தண்டனைகளில் எதைத் தெரிந்துகொண்டாலும் சேதமே விழையும் எனவே, கர்த்தருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கட்டும்; அவர் எதைத் தெரிந்துகொள்கிறாரோ, அதை நடப்பிக்கட்டும்' என்றான். கர்த்தர் அடித்தாலும் அணைக்கிறவர், தண்டித்தாலும் தாங்குகிறவர், கண்டித்தாலும் கிருபையுள்ளவர் என்று தாவீது அறிந்திருந்தான். நமது தெரிந்துகொள்ளல் எப்படியிருக்கிறது? மனிதனுடைய வழியையா, தேவனுடைய கரத்தையா?

## தண்டனையின் இடத்தை, தான் தங்கும் இடமாக மாற்றினார்

*(II சாமு 24:16 & 18)*

"தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது... அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருந்தான்.

அன்றையதினம் காத் என்பவன் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி நீர் போய், எபூசியனாகிய அர்வனாவின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும் என்றான்."

சத்துருவின் ஏவுதலினால் விளைந்த இந்த தீமையைக் கூட தேவன் நமக்கு சாதகமாக மாற்றிக் கொண்டார். அதற்காக சத்துருவுக்கு வலியப்போய் இடங்கொடுக்கக்கூடாது. அதே வேளையில், தேவன் அவ்வாறு கிரியைசெய்ய மெய்யான மனந்திரும்புதல் மிக அவசியம். எந்தக் களத்தில் நின்று கொண்டு, தேவதூதன் எருசலேமை அழிக்க கையை நீட்டினானோ, அதே இடத்தில்தான் பிற்காலத்தில் சாலமொன் தேவாலயம் கட்டினான்: செருபாபேலும் அங்குதான் கட்டினான்: மறுபடியும் அங்குதான் தேவாலயம் கட்டப்படும்; சத்துருவின் கிரியைகளைக் கூட, தமது மகிமைக்கேதுவாக மாற்றுகிற தேவனைப்போல வேறுயாருண்டு?

பாவத்திற்குத் தண்டனை நிறைவேற்றுகிற இடத்தையே, பாவத்திற்கு நிவிர்த்தி செய்கிற இடமாக மறுரூபப்படுத்திக் கொண்டார். எருசலேமுக்கான தமது திட்டத்திற்கு, தீமையைக்கூட, திருப்புமுனையாகத் தேவன் மாற்றிக் கொண்டார். தேவாலயத்தின் மகிமையே, பாவ நிவிர்த்தியாகத்தானே இருந்தது.

*பிதாவே, நான் செய்வது தூய்மையானதா என எண்ணு முன் தூண்டுதல் யாரிடமிருந்து வருகிறது என சீர்தூக்கிப் பார்க்க பகுத்தறிவு தாரும். மாற்றுக் கருத்துக்களையும் காதுகொடுத்துக் கேட்டு, பரிசீலித்துப் பார்க்க உதவிசெய்யும், உம்மை நெருங்கநெருங்க ஆசீர்வாதம் மட்டும் அதிகமாகவில்லை, பரிசுத்தமாயிருப்பதற்கான பொறுப்பும் அதிகமாகிறது, என நான் உணரட்டும். பாவத்தை ஒத்துக்கொள்வதற்கு, வெட்கப்படாத ஊழியக்காரராக நாங்கள் விளங்கட்டும். மரணத்தின் கிரியைகளையும், நீர் மகிமையாக மாற்றுகிறவராக இருக்கிறதற்காக ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்தில் ஆமென்.*

இந்நூலாசிரியரைப் பற்றி......

'தலைவர்கள் உண்டாவதில்லை, உருவாக்கப்படுகிறார்கள்'
"(Leaders are Not Born but are Made')
'தலைவர்களாகவே பிறக்கிறார்கள் '
'There are Born Leaders'
என்ற இருவேறு கருத்துள்ள நியதிகள் நிலவிவருவதை நாம் அறிவோம்.
ஆவிக்குரிய தலைவர்கள் தங்கள் தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே
இறைவனால் அறியப்படுகிறார்கள்; பரம பாதுகாப்போடு, தெரிந்து
கொள்ளப்பட்டவர்களாய், முறையாக பயிற்றுவிக்கப்பட்டு, வேளை வந்த போது
ஆவியில் உணர்த்தப்பட்டு இறைபணி செய்யும் அழைப்பைப் பெறுகின்றனர்.
அழைப்பைப் பெற்றவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் போது,
பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும், தேவ தரிசனத்தையும் பெற்றவர்களாய்,
தங்களது முன் மாதிரியான வாழ்க்கையோடு, இறைவனின் சித்தத்தை
நிறைவேற்றும் தலைவர்களாக உருவாகுகின்றனர்.
'தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்'
'Where there is no vision there people Perish'
என்பது வேத வாக்கு.
தீர்க்கதரிசனமுள்ள இடத்தில் ஜனங்கள் சீர்பொருந்துவார்கள்
(Where there is vision there people flourish)
என்பது எதிர்மறை வழக்கு.
தரிசனம் பெற்ற சகோ. அகஸ்டின் ஜெபக்குமார், தன் குடும்பத்தினரோடு
ஊழியத்தின் பாதையில் எதிர்கொண்ட சிக்கல்கள், சோர்வுகள்,
இழப்புகள், வெற்றிகள் அனைத்தின் மத்தியிலும் தன் இனம், ஜனம், மொழி,
கலாச்சார உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, விசுவாசத்தோடு கூடிய
கீழ்ப்படிதலினாலும், கடின உழைப்பினாலும் தரிசனம் மாறாமல் தன்னைக்
குறித்த தேவ சித்தத்தை நிறைவேற்ற தேவன் தந்த கிருபையின் அனுபவங்கள்
இப்புத்தகத்தின் மூலம் ஆவிக்குரிய தலைவர்கள்
உருவாகப் பயனுள்ளதாகட்டும்.
தேவ நாமம் மகிமைப்படுவதாக!

